விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

*Valampurii*

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 கார்த்திகை 06 திங்கட்கிழமை (21.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 338

## மாவீரர் நினைவு வாரம் ஆரம்பம்

## தமிழர் தாயகமெங்கும் நினைவேந்தல்கள்



(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் போராளிகளாக செய்றப்பட்டு உயிரிழந்த மாவீரர்களின் நினைவு வாரம் இன்று 21ஆம் திகதி ஆரம்பமாகி 27ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்த ஏழு நாட்களில் தமிழர் தாயகம் முழுவதும் அமைதியான முறையில் நினைவு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மாவீரர் தினத்தை அனுஷ்டிக்க அரசாங்கமும் தடை எதுவும் வெளியிடாத நிலையில் விடுதலைக்காக மடிந்த அனைத்து மாவீரர்களையும் மக்கள் அனைவரும் அச்சமின்றி

23ஆம் பக்கம் பார்க்க....

## பழைமை வாய்ந்த சமயமாக இந்து மதம் காணப்படுகிறது

### அதன் பின்னரே பௌத்தம் உருவானது-கூரே



(யாழ்ப்பாணம்)

உலகிலே மிகப்பழமை வாய்ந்த சமயமாக இந்து மதம் காணப்படுகிறது. அதன் பின்னரே பௌத்த மதம் உருவாகியது என தெரிவித்த வட மாகாண ஆளுநர் ரெஜினோ

24ஆம் பக்கம் பார்க்க....

# புதிய அரசியலமைப்பினூடாக இனப்பிரச்சினைக்கு தீர்வு!

## அமைச்சர் ராஜித யாழில் உறுதியளிப்பு



(யாழ்ப்பாணம்)------------------------------

நாட்டில் நீண்ட காலமாக காணப்படுகின்ற இனப்பிரச்சினையை அமையவுள்ள புதிய அரசியலமைப்பினூடாக தீர்த்து வைப்போம் என உறுதியளித்துள்ள அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சருமான ராஜிதசேனாரத்ன, தான் சிறுபான்மையினரின் உரிமை விடயங்களில் கவனமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## சீரற்ற காலநிலையுடன் கடும் மழை நீடிப்பு

சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக அமைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள்





(யாழ்ப்பாணம்)

நாட்டில் நீண்ட காலமாக காணப்படுகின்ற இனப்பிரச்சினையை அமையவுள்ள புதிய அரசியலமைப்பினூடாக தீர்த்து வைப்போம் என உறுதியளித்துள்ள அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சருமான ராஜிதசேனாரத்ன, தான் சிறுபான்மையினரின் உரிமை விடயங்களில் கவனமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## சீரற்ற காலநிலையுடன் கடும் மழை நீடிப்பு

### இன்றும் கன மழைக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழையினால் வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்ள பல மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

23ஆம் பக்கம் பார்க்க....

சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக அமைக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் நடராஜா ரவிராஜின் உருவச் சிலையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந் தன் நேற்று திறந்து வைப்பதனையும் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா உருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணக்கம் செலுத்துவதையும் படங்களில் காணலாம்.



# அரசியல் தீர்வைப் பெறுவதற்கு பல ஆண்டுகளின் பின் சந்தர்ப்பம்

### சரிவர பயன்படுத்துவோம் என்கிறார் சம்பந்தன்



(யாழ்ப்பாணம்)

எமக்குள்ளே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் மக்களுடைய விடயங்களில் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து செயறபட வேண்டும். அரசியல்தீர்வொன்றை பெறுவதற்கு பல ஆண்டுகளின் பினனர் சந்தர்ப்பம் ஒன்று கிடைத்துள்ளது. அதனை சரிவர பயன்படுத்த வேண்டும். இதன்படி எல்லாம் நடைபெற்று விட்டது என்று நாம் கூற வில்லை. அதற்காக ஒன்றுமே நடைபெற்றுவிடவில்லை எனவும் கூற

24ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கையில் இராணுவப் புரட்சி நடப்பதற்கு வாய்ப்பில்லை!

### அமைச்சர் ராஜித வவுனியாவில் தெரிவிப்பு

(வவுனியா)

இலங்கையில் இராணுவப் புரட்சியொன்று நடைபெறுவதற்குரிய எந்தவிதமான நிலைமையும் இல்லையென அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதாரத்துறை அமைச்சருமாகிய ராஜித சேனாரத்ன நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்தினேஸ் குணவர்தன நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போது, நாட்டில் இராணுவ புரட்சியொன்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக எச்சரிக்கை செய்திருப்பது குறித்து

24ஆம் பக்கம் பார்க்க....

# வடக்கிலுள்ள சிங்கள மக்களான நீங்கள் சிறுபான்மையினராக ஆக்கப்பட்டுள்ளீர்கள்

## மணலாறு விகாரையில் வைத்து மகிந்த உசுப்பேற்றல் பேச்சு

(பனிக்கன்குளம்)

சிங்களவர்களை சிறுபான்மையினராக்கும் சதி நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.முல்லைத்தீவு ம்ணலாற்று பகுதியிலுள்ள விகாரையில் வழிபாடுகளில் ஈடுபடுவதற்கும் மக்கள் சந்திப்பை மேற்கொள்வதற்கும் என நேற்று விஜயம் செய்த போதே மகிந்த இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

அங்கு மகிந்த மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கிலுள்ள சிங்கள மக்களான நீங்கள், சிறுபான்மையினராக இன்று மாற்றப்பட்டுள்ளீர்கள். அதுவே உண்மை, வடக்கு கிழக்கு முழுவதையும் வேறுபடுத்தி அதை தமிழர்களின் இரசதானியாக்கும் நடவடிக்கையையே அரசாங்கம் முன்னெடுத்துள்ளது.

புதிய அரசியலமைப்பில் சமஷ்டி ஆட்சிமுறையை கொண்டு

24ஆம் பக்கம் பார்க்க....



**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# யாழ். வலயப் பாடசாலைகளுக்கு இன்று வவுச்சர்கள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைக்கான வவுச்சர்கள் இன்று திங்கட்கிழமை வழங்கப்படும்.

நல்லூர் மற்றும் யாழ்ப்பாணக் கோட்ட பாடசாலைகளுக்கான சீருடை வவுச்சர்கள் அந்தந்தக் கோட்டக் கல்வி அலுவலகத்திலும் கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கான வவுச்சர்கள் யாழ் கல்வி வலயத்தின் கணக்காளர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும்.

இன்று காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை வவுச்சர்கள் வழங்கப்படும் எனவும் அதிபர்கள் தமது உத்தியோக பூர்வ றபர் முத்திரையுடன் வருவதுடன் சீருடைக்குப் பொறுப்பான ஆசிரியரையும் வருகை தருமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந)

# இந்திய மீனவர்களுக்கு மறியல்

(ஊர்காவற்றுறை)

சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் காரைநகர் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 11 பேரையும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் இராமலிங்கம் சபேசன், நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தரவிட்டார்.

தமிழ்நாடு, இராமேஸ்வரம் பகுதியில் இருந்து இரண்டு விசைப்படகுடன் நுழைந்து, இலங்கை கடற்பரப்பினை அண்மித்த நெடுந்தீவு கடற்பரப்பினுள் மீன்பிடித்த இந்திய மீனவர்களை காரைநகர் கடற்படையினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை கைது செய்திருந்தனர்.

மீனவர்களை பொறுப்பேற்ற யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகள், மேலதிக விசாரணையின் பின்னர், ஊர்காவற்றுறை பதில் நீதவானின் வாசஸ்தலத்தில் நேற்று மாலை ஆஜர் செய்தனர்.

இதன்போதே மேற்படி விளக்கமறியல் விதிக்கப் பட்டுள்ளது. (செ-11)


**வீடு வாடகைக்கு தேவை**

சிறிய குடும்பமொன்று
கந்தர்மடம் பகுதியில்
குடியிருப்பதற்கு
வீடு வாடகைக்கு தேவை

தொடர்பு:
**071 847 4664**


## அறிவித்தல்

பருத்தித்துறை சிவன் கோயில் கல்யாண மண்டபத்தில் இன்று 21ஆம் திகதி நடைபெற இருந்த பருத்தித்துறை தொகுதி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

**அமரர் க. துரைரத்தினத்தின்**

நினைவு தின நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(C-6447) - ஏற்பாட்டுக்குழு

## மரண அறிவித்தல்

### அமரர் மார்க்கண்டு மனோகரசீலன்

**அன்னை மடியில் 24.01.1962** **ஆண்டவன் அடியில் 09.11.2016**



யாழ் அனலைதீவை பூர்விகமாகவும் கிளிநொச்சி உருத்திரபுரம் சிவநகரை பிறப்பிடமாகவும் பிரான்ஸ் cergy-pontoiseஐ வதிவிடமாகவும் கொண்ட மார்க்கண்டு மனோகரசீலன் கடந்த 09.11.2016 அன்று புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மார்க்கண்டு சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - மங்களம் தம்பதியரின் அன்பு மருமகனும் மதிவதனியின் அன்புக் கணவரும் கோபிகா, பிரசாத், பிரசன்னா, அனுசிகா, பிரகாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம்சென்ற மாசிலாமணி, வசந்தகோகிலம், மகேந்திரராசா, யோகராசா, காலம்சென்ற சற்குணராசா, மீனலோஜினி-மீனா (அதிபர் - கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்), காலம்சென்ற பாலகிருஸ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கஜேந்திரா, டெல்பின், பிறேமலதா, சித்திராங்கன் ஆகியோரின் அன்பு மாமனாரும், மதிபவானி, மதிவாணன், மதிமன்னன், மதிசேகரன், காலம்சென்ற மதிகேசவன், குககேந்திரராஜா, சித்திரா, மீனாம்பாள், இதயசிவதாஸ் (அதிபர்-கிளி/கோணாவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதாஜினி, சுபாஜினி, சுரேஸ்கரன், சுதாகரன், வித்தியா, சங்கீர்த்தனா, ஆர்த்தனா, அஸ்வினா, ஆதவன், அன்சிகா, ஆர்த்திகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சரண்யாவின் பெரியதந்தையும் றயன், மதன், சுமன், சோபா, சியா, திவ்வியா, ரூபியா, சர்மியா ஆகியோரின் சிறிய தந்தையும் காவியனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 21.11.2016 (திங்கட்கிழமை) இன்று மு.ப 9 மணியளவில் Pompes Funebres , Et, Marbrerle Berthelo, 79, Bis Rue de Glsors 95300 Pontolse (பிரான்ஸ்) இல் நடைபெறவுள்ளது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

(C-6444)

இல. 34/01, சிவநகர்,
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

தகவல்:
க.இதயசிவதாஸ் - மைத்துனர்
(அதிபர்-கிளி/கோணாவில் மகா வித்தியாலயம்)
கோணாவில், கிளிநொச்சி. 077 446 3373

# புதிய அரசியலமைப்பிலும் பௌத்தத்துக்கு முன்னுரிமை

## அமைச்சர் விஜயதாச தெரிவிப்பு

1815 ஆம் ஆண்டு மேல் நாட்டு (கண்டி) உடன்படிக்கைக்கு அமைய பௌத்த மதத்துக்கு முன்னுரிமை கொடுப்பதும் அதனை பாதுகாப்பதும் மேல் நாட்டு உடன்படிக்கையின் நிபந்தனையாகும்.

புதிய அரசியலமைப்புச் சட்டத்திலும் எவ்வித மாற்றங்களும் இன்றி இந்த பந்தி இடம்பெற்றுள்ளது என நீதி மற்றும் புத்த சாசன அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கணடியில் அஸ்கிரிய மாநாயக்க தேரரை நேற்று சந்தித்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

"பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கப்படும் என அரசாங்கம் தெளிவாக கூறியுள்ள போதிலும் சிலர் அதனை திரிபுபடுத்தி கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இதனால், நாட்டு மக்களுக்கு இது சம்பந்தமாக சந்தேகத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது. இலங்கையில் மாத்திரமல்ல, உலகில் உள்ள நாடுகள்; மதங்கள் மற்றும் இனங்களின் மதங்களுக்கு அமைய அந்நாடுகளின் அரசியலமைப்புகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதன் மூலம் ஏனைய இனங்கள் மற்றும் மதங்களுக்கு குறைவான உரிமைகளோ, குறைகளோ இல்லை எனவும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார். (செ-11)

# உப்பு உற்பத்தி ஸ்தாபனங்களை தனியாருக்கு விற்கக்கூடாது

## மன்னாரில் இன்று ஆர்ப்பாட்டம்

(மன்னார்)

வடபகுதியில் "மாந்தை சோல்ட் லிமிட்ரெட்" கீழ் இருக்கின்ற பிரதான வளங்களாக உள்ள மன்னார், ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பு உற்பத்தி கூட்டு ஸ்தாபனங்களை தனியாருக்கு விற்பனை செய்ய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு எதிராக இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு மன்னாரில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

வடபகுதியில் "மாந்தை சோல்ட் லிமிட்ரெட்" கீழ் உள்ள பிரதான வளங்களாக இருககின்ற மன்னார், ஆனையிறவு, குறிஞசாத்தீவு உப்பு உற்பத்தி கூட்டுஸ்தாபனங்களை தனியாருக்கு விற்பனை செய்ய அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அரசாங்கம் முன்னெடுத்துள்ள குறித்த நடவடிக்கைகளுக்கு எதிராக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் மன்னார் மாவட்டத்தில் இன்று திங்கட்கிழமை பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளது.

இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் இடம்பெறவுள்ளது. குறித்த கூட்டத்துக்கு மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிலையில் இடம்பெறவுள்ள மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்துக்கு முன்னர் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக காலை 9.30 மணிக்கு பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட இருக்கின்றோம்.

மேலும் குறித்த பிரச்சினை தொடர்பாக உரிய தரப்பினரிடம் மகஜர் கையளித்து மக்களின் வாழ்வாதாரம், உரிமை நிலைப்பாட்டை புரிந்து கொண்டு அரசாங்கம் குறித்த உப்பு உற்பத்தி கூட்டுஸ்தாபனங்களை தனியாருக்கு விற்பனை செய்வதை இடைநிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் முன்வைத்து இந்த எதிர்ப்பு போராட்டத்தை இன்று திங்கட்கிழமை முன்னெடுக்கவுள்ளோம் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் மேலும் தெரிவித்தார். (செ-4)

# துப்பாக்கிச்சூட்டு சம்பவம் குறித்து 6 பொலிஸ் குழுக்கள் விசாரணை

(கொழும்பு)

கண்டி - அங்குபுர பகுதியின் பெபில பள்ளிக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு தொடர்பில் ஆறு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன.

மத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை 7.45 அளவில் காரில் வந்த சிலரால் இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, இதில் 30 வயதான மஹய்யாவ பகுதியைச் சேர்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என்பதோடு தனிப்பட்ட பிரச்சினைகளே இதற்குக் காரணமாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, சந்தேக நபர்களில் ஒருவர் அங்குபுர - கபல்கஸ் தென்ன பிரதேசத்தில் வைத்து ரி56 ரக துப்பாக்கி மற்றும் 20 ரவைகளுடன் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதனுடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேகநபர்கள் பொலிஸாரால் தேடப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் இதற்காகப் பயன்படுத்தப்பட்ட கார் பூஜாபிடிய பகுதியில் விட்டுச் செல்லப்பட்டுள்ளதோடு பொலிஸார் அதனைக் கைப்பற்றியுள்ளனர். (இ-7)

# ஆடைக் களஞ்சியத்துக்கு 20 கோடி ரூபாய் நட்டம்

(கொழும்பு)

பொரலஸ்கமுவ - பெப்பிலியான பிரதேசத்திலுள்ள புடைவையகம் ஒன்றின் களஞ்சியசாலையில் நேற்று முன்தினம் தீ பரவல் ஏற்பட்டது.

விபத்துக்கான காரணம் தெரியவராத நிலையில் தீ விபத்தின் காரணமாக 20 கோடி ரூபாய் பெறுமதியான பொருட்கள் தீயில் எரியுண்டு நாசமாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தெஹிவளை கல்கிஸ்ஸை நகர சபையின் தீயணைப்பு வண்டிகளும் உரிய நேரத்தில் வரத்தவறியதன் காரணமாக தீ விபத்தின் சேதம் அதிகரித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெஹிவளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7)

# சைவத்தையும் தமிழையும் பாதுகாப்பது எமது கடமை

## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் எடுத்துரைப்பு



சைவமும் தமிழும் தெரிந்த பெற்றோர்கள் இருக்கும் வரை பிள்ளைகள் சைவத்தையும் தமிழையும் விரும்பிக் கற்பார்கள். சைவத்தையும் தமிழையும் அழியாமல் பாதுகாபபது எமது கடமை என யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்துள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டுகள் நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாட்டின் மூன்றாம் நாள் காலை நேர நிகழ்வு நேற்றைய தினம் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாடு எமது யாழ். மண்ணில் நல்லூரில் நடைபெறுவது எமக்கு மகிழ்ச்சியையும் பெருமையையும் தருகிறது.

இது வரவேற்கத்தக்க விடயம். இவ்வாறான நிகழ்வுகளை ஆரம்பமாக கொண்டு நாம் தொடர்ச்சியாக பின்பற்றி செய்ய வேண்டும்.

நாம் தமிழ் சைவ பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்பதை விட அப் பாரம்பரியத்தில் வந்து பார்த்து அயல் நாட்டவர்கள் பின்பற்றி நடப்பதும் பெருமையாக பேசுவதும் எமக்கு மகிழ்ச்சியை தருகிறது.

எமது பிள்ளைகளுக்கு ஆறுமுகநாவலர் யார், அவர் செய்த தொண்டு என்ன, எமது பூமியில் இன்றும் சைவமும் தமிழும் அழியாமல் இருக்கிறது. அதற்கான காரணம் என்ன என்றும் பிள்ளைகளுக்கு தெளிவுபடுத்த வேண்டும். அதை அழியவிடாமல் தடுப்பதற்கான முக்கிய கடப்பாடு அனைத்து பெற்றோருக்கும் உள்ளது. சைவமும் தமிழும் அழியாமல் பாதுகாப்பது எமது கடமை என்ன என பதை உணர்ந்து செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

எமது தமிழும் சமயமும் நிலைக்க வேண்டும். அழிந்து போக விடக்கூடாது. தமிழும் சமயமும் தெரிந்த பெற்றோர்கள் இருக்கும் வரைக்கும் உலகத்தில் உள்ள அனைதது பிள்ளைகளும் தமிழை,சமயத்தை விரும்பி படிப்பார்கள்.

நாவலர் பெருமையை பற்றி பேசுவது மட்டுமல்லாமல் அவருடைய எண்ணம் என்ன, எண்ணக் கருத்து என்ன என்பதை கருத்தில் கொண்டு செயற்படுவதே எமது எதிர்கால சமுதாயத்துக்கு நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய சேவையாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ஆவா குழு குறித்து தேவையற்ற அச்சம்

# வடக்கு -கிழக்கு பாதுகாப்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை

### பாதுகாப்புச் செயலாளர் உறுதியளிப்பு

(கொழும்பு)



**வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பாது காப்பு தொடர்பில் எந்தப் பிரச்சினைகளும் இல்லை என பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டி யாராச்சி தெரிவித்துள்ளார். ஆவா குழு தொடர்பாக சிலர் மக்கள் மத்தியில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

வடக்கின் பாதுகாப்பு குறித்து அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும் என ஓய்வுபெற்ற இராணுவ மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கூறியிருந்தார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்புச் செயலாளர், ஆவா குழு என்பது பாதாள உலக குழு. பாதாள உலக குழு ஒன்றினால், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்த முடியாது. சிலர் இல்லாத பிரச்சினையை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றனர் என மேலும் தெரிவித்தார். (இ-7)

## 10 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் பெய்து வரும் கடும் மழை காரணமாக பத்து மாவட்டங்களில் மண் சரிவு ஆபத்து ஏற்பட்டிருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் ஆர்.என்.எஸ். பண்டார எச்சரித்துள்ளார்.

நுவரெலியா, பதுளை, மாத்தளை, இரத்தினபுரி, களுத்துறை காலி, மாத்தறை, கேகாலை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இந்த மண்சரிவு ஆபத்துள்ளது.

இந்த மாவட்டங்களில் கடும் மழை எதிர்பார்க்கப்படுவதாகவளிமண்டலவியலதிணைக களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பிரதேச மக்களுக்கு விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதேச அலுவலகங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது தென்கிழக்கு கடற்பிரதேசங்களில் நிலவும் சீரற்ற நிலை எதிர்வரும் தினங்களில் குறைவடையும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடைப்பருவப்பெயர்ச்சிமழை அதிகரிப்பதன் மூலம் ஏற்படக கூடிய மின்னல் ஆபத்துக்களை தவிர்த்துக்கொள்வதற்கான ஒழுங்குகளை மேற் கொள்ளு மாறுவளிமண்டலவியல்திணைக் களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது. (இ-7)

## வடக்கு,கிழக்கு எம்.பிக்களுக்கு விமானப்பயண வசதிகள்-ரணில்

வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு, விமானப் பயண வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே, ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊதியம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வசதிகளைச் செய்து கொடுக்காமல் அவர்களிடம். மேலதிக பொறுப்புணர்வுகளை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.

அவர்களுக்கு தமது தொகுதிகளில் பணிகளை மேற்கொளவதற்கு ஒரு இலட்சம் ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்.

அமெரிக்கா, இந்தியாவில் விமானப் பயணச்சீட்டுகள் உள்ளிட்ட பல வசதிகள் வழங்கப்படுகின்றன.

வடக்கு - கிழக்கைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பனர்களுக்கு நாம், விமானப் பயண வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## நாட்டின் பாதுகாப்பு குறித்து திருப்திப்பட முடியாத நிலை

### முன்னாள் இராணுவ ஜெனரல் கமால் கவலை

(கொழும்பு)



நாட்டில் தற்பொழுது காணப்படும் பாதுகாப்பு நிலைமை குறித்து திருப்திப்பட முடியாதுள்ளதாக ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

தற்பொழுது வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பற்ற நிலைமை விரைவாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட வேண்டும். அவ்வாறில்லாது போனால், அது ஒரு பெரும் பிரச்சினையாக மாறும்.

இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவு பலவீனப்பட்டால், வடக்கில் தோன்றியது போன்ற ஆவா குழுக்கள் உருவாவது தவிர்க்க முடியாது எனவும் காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## மூளையில் காய்ச்சலைப்பரப்பும் புதிய வகை நுளம்பு கொழும்பில்

(கொழும்பு)

மூளையில் காய்ச்சலைப் பரப்பும் ஒருவகை நுளம்பு கொழும்பை அண்டிய பிரதேசங்களில் காணப்படுவதாக சுகாதாரப் பிரிவு பொதுமக்களுக்கு எச்சரித்துள்ளது.

மாலை 6 மணிக்கும் இரவு 10 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இந்த நுளம்பின் தாக்கம் கூடுதலாகக் காணப்படுவதாக கொழும்பு மாநகர சபையின் பிரதான வைத்திய அதிகாரி வைத்திய நிபுணர் றுவான் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மக்களுக்கு விளக்கமளிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், குறித்த நுளம்பு கடித்ததன் பின்னர் எரிவு, அரிப்பு, தேகம் சிவந்து போதல் முதலான அறிகுறிகள் காணப்படும் என்றும அவர் தெரிவித்தார். (இ-7)

## மஞ்சளுக்குப் பதில் வெள்ளை

இலங்கையில் வீதிகளில் கடவைகளை குறிப்பிட்டு காட்ட பயன்படுத்தப்படும் மஞ்சள் கடவைகளின் நிறம் மாற்றப்படவுள்ளது. இதன்படி மஞ்சளுக்கு பதிலாக வெள்ளை நிறம் குறித்த கடவைகளுக்கு தீட்டப்படவுள்ளது.

போக்குவரத்து ஒழுங்கு மீறலுக்கு எதிராக ஆகக்குறைந்த தட்டணைக்கட்டணம் 2500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே மஞ்சள் கடவையை வெள்ளையாக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிஹால் சூரியாராச்சி தெரிவித்துள்ளார்.

பனிப்பொழிவைக்கொண்ட நாடுகளிலேயே வீதிகளை கடக்க மஞ்சள் கடவைகள் பயன்படுத்தப்படுகின்றன. ஏனைய நாடுகளில் வெள்ளைக் கடவைகளே பயன்படுத்தப்படுவதாக நிஹால் மேலும் தெரிவித்தார். (இ-7)

## 10 லட்சம் தொழில்வாய்ப்புக்களுக்கு தென்கொரியா ஒத்துழைப்பு வழங்கும்

அரசாங்கத்தின் 10 இலட்சம் தொழில் வாய்ப்புக்களை வழங்கும் செயற்றிட்டத்திற்கு தென் கொரியா ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.

தென்கொரிய தூதுவர் ஷேங் வொங் ஷேம் இதனை தெரிவித்துள்ளார். தொழில் கல்வி மற்றும் நவீன தொழில நுட்ப விடயங்களில் கவனம் செலுத்துவதன் மூலமே நாடு அபிவிருத்தி அடைய முடி யும். எனவே, இலங்கை தற் போதைய நிலையில் தொழில் கல்வி மற்றும் நவீன தொழில்நுட்ப விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என கொரிய தூதுவர் தெரிவித் துள்ளார்.

மேலும் தொழில் சந்தை யில் நில[illegible]களுக்கு ஏற்ப பணி யாளர்களை உரு வாக்குவதன் [illegible] துறையில் விருத்தி யடைய முடியும் என கொரியத் தூதுவர் மேலும் தெரிவித்தார். (இ-[illegible]

## "வெற்றி நிச்சயம்"
## மாதாந்தத் தொடர் பரீட்சை - ஐப்பசி 2016
## (க.பொ.த. (உ/த) - 2017

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

**Bio Stream**

### Chemistry & Physics Average Rank List

| St.Id | Full Name | School Name | Chemistry | Physics | Average | Rank |
|---|---|---|---|---|---|---|
| 4066 | Suthaniga Thevarajah | J/ Vembadi Girls' High School | 88 | 84 | 86 | 1 |
| 4109 | Kanagarajah Srithusan | J/ Jaffna Hindu College | 87 | 78 | 82.5 | 2 |
| 4025 | Majury Thirugnanaselvan | J/ Vembadi Girls' High School | 85 | 73 | 79 | 3 |
| 4179 | Johine Raveendra | J/ Vembadi Girls' High School | 80 | 71 | 75.5 | 4 |
| 4013 | Kayarupi Krishnamoorthy | J/ Vembadi Girls' High School | 61 | 87 | 74 | 5 |
| 4206 | Francis Arulnayagam Charles Antony | J/ Jaffna Hindu College | 76 | 67 | 71.5 | 6 |
| 4229 | Ravichandran Rajivarnan | J/ Mahayana College | 76 | 67 | 71.5 | 6 |
| 4473 | Malarvannan Kokulan | J/ Jaffna Hindu College | 60 | 81 | 70.5 | 8 |
| 4923 | Thivaraya Ketheeswaran | Kn/ Pallai Central College | 73 | 68 | 70.5 | 8 |
| 4905 | Siranantham Sobana | J/Chavakachcheri Hindu college | 75 | 65 | 70 | 10 |
| 4033 | Shivaany Yogarajasingam | J/ Vembadi Girls' High School | 74 | 64 | 69 | 11 |
| 4915 | Sritharan Miromina | J/Chavakachcheri Hindu college | 64 | 74 | 69 | 11 |
| 4036 | Shandraraj Kovarthan | J/ Jaffna Hindu College | 61 | 75 | 68 | 13 |
| 4920 | Sivarasa sankavi | J/Chavakachcheri Hindu college | 72 | 64 | 68 | 13 |
| 5102 | Subanila Subaseelan | | 74 | 62 | 68 | 13 |
| 4165 | Karththiga Mayilvaganam | J/ Vembadi Girls' High School | 66 | 68 | 67 | 16 |
| 4291 | Kirupaharan Shivamainthan | J/ Jaffna Hindu College | 78 | 55 | 66.5 | 17 |
| 4208 | Darshika Sivasubramaniam | J/ Vembadi Girls' High School | 72 | 59 | 65.5 | 18 |
| 4414 | Sharujah Mohanarajan | J/ Vembadi Girls' High School | 68 | 63 | 65.5 | 18 |
| 4073 | Lokitha Ravikumar | J/ Skandavarodaya College | 63 | 67 | 65 | 20 |
| 4071 | Pirunthini Maheswaran | J/ Vembadi Girls' High School | 73 | 55 | 64 | 21 |
| 4030 | Kamshayini Srikaran | J/ Vembadi Girls' High School | 75 | 52 | 63.5 | 22 |
| 4906 | Kirusayini sivaskantharasa | J/varany Central College | 62 | 64 | 63 | 23 |
| 4913 | Yahana Sinharjah | J/Misalay virasinkam central college | 68 | 58 | 63 | 23 |
| 4916 | Kanakaratnam Keerththana | J/Varany Central College | 62 | 64 | 63 | 23 |
| 4917 | Mathamika Vijayatharan | J/Chavakachcheri Hindu college | 67 | 59 | 63 | 23 |
| 4011 | Senthilvel Shanchithakrishna | J/ Jaffna Hindu College | 57 | 68 | 62.5 | 27 |
| 4022 | Gajani Uruthiran | J/ Vembadi Girls' High School | 66 | 59 | 62.5 | 27 |
| 4047 | Shanmugaratnam Sivakumar | J/ Jaffna Hindu College | 48 | 77 | 62.5 | 27 |
| 4178 | Puruhasiny Purusothman | Kilinochchi Maha Vidyalayam | 66 | 59 | 62.5 | 27 |
| 4273 | Thanabalan Keerthigan | J/ Jaffna Hindu College | 57 | 67 | 62 | 31 |
| 4922 | Panchalingam Thajane | J/Chavakachcheri Hindu college | 58 | 66 | 62 | 31 |
| 4919 | Ragunathan Tharshana | J/Chavakachcheri Hindu college | 64 | 59 | 61.5 | 33 |
| 4169 | Luxshi Kanagaraththinam | J/ Vembadi Girls' High School | 62 | 60 | 61 | 34 |
| 4901 | Sinnaththamby Thenusha | J/Chavakachcheri Hindu college | 58 | 64 | 61 | 34 |
| 4908 | Mathuranayagampillai Surththika | J/Chavakachcheri Hindu college | 63 | 59 | 61 | 34 |
| 4341 | Thayashakhary Ashokumar | J/ Vembadi Girls' High School | 71 | 50 | 60.5 | 37 |
| 5107 | Nadesan Arivalakan | | 65 | 56 | 60.5 | 37 |
| 5109 | Jayakumar Dhanushkumar | | 63 | 58 | 60.5 | 37 |
| 4026 | Yanuka Sriparan | J/ Jaffna Hindu Ladies College | 53 | 66 | 59.5 | 40 |
| 4028 | Tamsika Shanthalingam | J/ Puttur Sri Somaskanda College | 68 | 51 | 59.5 | 40 |
| 4189 | Ditsika Sundaralingam | J/ Vembadi Girls' High School | 56 | 63 | 59.5 | 40 |
| 4389 | Aishwarya Sathyathasan | J/ Vembadi Girls' High School | 62 | 57 | 59.5 | 40 |
| 4481 | Sivalogy Sivakumar | J/ Atchuvely Central College | 63 | 55 | 59 | 44 |
| 4902 | Vinayakamoorthy Thurkha | | 58 | 60 | 59 | 44 |
| 4904 | Tharmalinkam Pasupathan | J/Misalay virasinkam central college | 65 | 53 | 59 | 44 |
| 4918 | S.Jananthan | J/Chavakachcheri Hindu college | 63 | 55 | 59 | 44 |
| 4182 | Kajavaany Gnanendran | J/ Jaffna Hindu Ladies College | 53 | 64 | 58.5 | 48 |
| 4003 | Nagendran Thuwarahan | J/ Jaffna Hindu College | 54 | 62 | 58 | 49 |
| 4083 | Jemika Ponnuthurai | J/ Vembadi Girls' High School | 58 | 58 | 58 | 49 |
| 4145 | Suthakaran Laavanyan | J/ Jaffna Hindu College | 64 | 52 | 58 | 49 |
| 4184 | Anpalakan Pirashanth | Jaffna Central College | 56 | 60 | 58 | 49 |
| 4170 | Srishayuchja Balasooriyan | J/ Vembadi Girls' High School | 54 | 61 | 57.5 | 53 |
| 4257 | Selvaraj Hirushanan | J/ Puttur Sri Somaskanda College | 55 | 60 | 57.5 | 53 |
| 5106 | Soosaipillai Edwin Silviya | Kn/pallai central College | 64 | 50 | 57 | 55 |
| 4029 | Sansiya Thurairednam | J/ Vembadi Girls' High School | 50 | 63 | 56.5 | 56 |
| 4321 | Subesthika Muralithasan | J/ Jaffna Hindu Ladies College | 52 | 61 | 56.5 | 56 |
| 5103 | Santhirachekaram Isaijarashan | | 71 | 42 | 56.5 | 56 |
| 4062 | Keshini Yogeswaran | J/ Vembadi Girls' High School | 46 | 66 | 56 | 59 |
| 4157 | Sharvangi Kirushnapillai | J/ Kokuvil Hindu College | 57 | 55 | 56 | 59 |
| 4210 | Theepika Arulanantham | J/ Chundikuli Girls' College | 50 | 62 | 56 | 59 |
| 4057 | Sangeertha Satkunarasa | J/ Vembadi Girls' High School | 58 | 53 | 55.5 | 62 |
| 4900 | Velauthapillai Najaneesan | Kn/Pallai central College | 60 | 51 | 55.5 | 62 |
| 4023 | Kobika Thangavel | J/ Vembadi Girls' High School | 56 | 54 | 55 | 64 |
| 4409 | Sivananthan Anojan | J/ Jaffna Hindu College | 50 | 60 | 55 | 64 |
| 4472 | Tharshy Gnanasegaram | J/ Jaffna Hindu Ladies College | 54 | 56 | 55 | 64 |
| 4060 | Vogini Thanigasalam | J/ Jaffna Hindu Ladies College | 56 | 53 | 54.5 | 67 |
| 4316 | Sivapalan Thuvarakan | J/ Jaffna Hindu College | 53 | 55 | 54 | 68 |
| 5113 | Gnanathayaparan Ushasagini | | 62 | 46 | 54 | 68 |
| 4056 | Thulashika Rajendran | J/ Chundikuli Girls' College | 55 | 52 | 53.5 | 70 |
| 4161 | Mathangi Thanaventhan | J/ Vembadi Girls' High School | 55 | 51 | 53 | 71 |
| 4214 | Priyanka Vignarajah | J/ Vembadi Girls' High School | 47 | 59 | 53 | 71 |
| 4265 | Thayaparan Kapinajan | J/ Jaffna Hindu College | 54 | 52 | 53 | 71 |
| 4921 | Arulmathavan Mathusha | J/Chavakachcheri Hindu college | 52 | 54 | 53 | 71 |
| 4279 | Kiruththiha Kulathasan | Ki/Kilinochchi Maha Vidyalayam | 49 | 55 | 52 | 75 |
| 5111 | Vikneswaran NalinPrasanth | | 56 | 48 | 52 | 75 |
| 4058 | Thenusha Shanthalingam | J/ Vembadi Girls' High School | 46 | 57 | 51.5 | 77 |
| 4137 | Lingabalan Vicknesh | J/ Thellipalai Mahayana College | 44 | 59 | 51.5 | 77 |
| 4162 | Thivya Sivanesan | J/ Uduvil Ladies College | 58 | 45 | 51.5 | 77 |
| 4198 | Thivahari Sivakananathan | J/ Vembadi Girls' High School | 44 | 59 | 51.5 | 77 |
| 4114 | Kamshana Kajendran | J/ Vembadi Girls' High School | 46 | 56 | 51 | 81 |
| 4110 | Paramitha Ganesalingam | J/ Vembadi Girls' High School | 57 | 44 | 50.5 | 82 |
| 4112 | Shopini Jegatheeswaran | J/ Vembadi Girls' High School | 56 | 45 | 50.5 | 82 |
| 4212 | Sundaramoorthy Vedansan | J/ Jaffna Hindu College | 50 | 51 | 50.5 | 82 |
| 4377 | Jancika Chandrakumar | J/ Jaffna Hindu Ladies College | 52 | 48 | 50 | 85 |
| 4205 | Babishalini Parameswaran | J/ Manipay Ladies College | 53 | 46 | 49.5 | 86 |
| 4534 | Saravanabavan Birunthan | J/ Jaffna Hindu College | 52 | 47 | 49.5 | 86 |
| 4070 | Dayani Ramachandran | J/ Jaffna Hindu Ladies College | 56 | 42 | 49 | 88 |
| 4045 | Yuvaneetha Karunananthan | J/ Vembadi Girls' High School | 45 | 52 | 48.5 | 89 |
| 4914 | | | 59 | 38 | 48.5 | 89 |
| 4102 | Sinthuja Sivasubramaniyam | J/ Vembadi Girls' High School | 54 | 41 | 47.5 | 91 |
| 4166 | Dharshi Rajasinganayagam | J/ Vembadi Girls' High School | 46 | 49 | 47.5 | 91 |
| 4304 | Janolia Robert Kennady Ratnarajah | J/ Vembadi Girls' High School | 40 | 55 | 47.5 | 91 |
| 4078 | Sivabbriya Sivalingam | J/ Uduvil Ladies College | 44 | 49 | 46.5 | 94 |
| 4342 | Francis Xavier Anosan | J/ Kokuvil Hindu College | 49 | 44 | 46.5 | 94 |
| 4437 | Nimalampikai Senthilnathan | J/ Kokuvil Hindu College | 50 | 43 | 46.5 | 94 |
| 4005 | Thayaparan Ragavan | J/ | 39 | 53 | 46 | 97 |
| 4141 | Jeyakumar Shangeethan | J/ Puttur Sri Somaskanda College | 49 | 43 | 46 | 97 |
| 4356 | Mohana Kanenthirakumaran | J/ Vaddu Hindu College | 43 | 49 | 46 | 97 |
| 4129 | Vijayakrishnan Aruon | J/ Jaffna Hindu College | 44 | 47 | 45.5 | 100 |
| 4511 | Sangeerththana Kristy Anton | J/ Vaitheeswara College | 36 | 55 | 45.5 | 100 |
| 4067 | Keerththana Selvarajah | J/ Vembadi Girls' High School | 52 | 38 | 45 | 102 |
| 4099 | Emmanuvel Tharmarajah Dorin Tharsana | | 49 | 41 | 45 | 102 |
| 4027 | Thurkka Sivaskaran | J/ Jaffna Hindu Ladies College | 41 | 48 | 44.5 | 104 |
| 4079 | Thivija Baskaramoorthy | J/ Vembadi Girls' High School | 44 | 45 | 44.5 | 104 |
| 4187 | Rameswaran Sinthujan | Jaffna Central College | 36 | 53 | 44.5 | 104 |
| 4237 | Vithushalini Vivekanantha | J/ Jaffna Hindu Ladies College | 40 | 49 | 44.5 | 104 |
| 4074 | Sangavee Yogendrarajah | J/ Vembadi Girls' High School | 37 | 51 | 44 | 108 |
| 4092 | Tharveena Sivakumaran | J/ Vembadi Girls' High School | 41 | 47 | 44 | 108 |
| 4155 | Raveenthiran Mathusha | J/ Vembadi Girls' High School | 41 | 47 | 44 | 108 |
| 5112 | Thiyagaraj Amurtharaj | | 35 | 53 | 44 | 108 |
| 4425 | Dilakshi Jeyachandran | J/ Uduvil Girls College | 42 | 45 | 43.5 | 112 |
| 4324 | Niruja Antonyrasan | J/ Vembadi Girls' High School | 44 | 42 | 43 | 113 |
| 5110 | Gurunathan Punniyamoorthy | | 39 | 47 | 43 | 113 |
| 4055 | Priyanka Nallathamby | J/ Chundikuli Girls' College | 33 | 52 | 42.5 | 115 |
| 4064 | Tharuya Sivatheesan | J/ Vembadi Girls' High School | 36 | 49 | 42.5 | 115 |
| 4113 | Nadeshan Linusha | Mu/ Yogapuram Maha Vidyalayam | 48 | 37 | 42.5 | 115 |
| 4080 | Mathangi Janahiraman | J/ Vembadi Girls' High School | 41 | 43 | 42 | 118 |
| 4241 | Kobika Yokeswaran | J/ Vayavilan Central College | 41 | 43 | 42 | 118 |
| 4164 | Kiruthika Mohan | J/ Vembadi Girls' High School | 44 | 39 | 41.5 | 120 |
| 4160 | Tharshiga Sivarasa | | 50 | 32 | 41 | 121 |
| 5104 | Bavatharany Malaialakan | | 43 | 39 | 41 | 121 |
| 4085 | Archchana Kanagalingam | J/ Jaffna Hindu Ladies College | 32 | 49 | 40.5 | 123 |
| 4429 | Pulenthiran Nimalaraj | J/ Kokuvil Hindu College | 34 | 47 | 40.5 | 123 |
| 4107 | Kajiththa Uthayakumar | J/ Chundikuli Girls' College | 39 | 41 | 40 | 125 |

NEW SCIENCE WORLD

**NEW SCIENCE WORLD**

Physics : R.Kumaran, R.Kugan Chemistry : Dias, T.Sivakumar

## போராடுகிறது இங்கிலாந்து முன்னிலையில் இந்தியா



இந்தியா - இங்கிலாந்து அணிகளுக் கிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், விசாகப்பட்டினத்தில் இடம் பெற்றுவரும் இரண்டாவது டெஸ்ட் போட்டி யின் நேற்றைய நான்காவது நாள் ஆட்டநேர முடிவின்போது, 405 ஓட்டங்கள் என்ற வெற்றி யிலக்குடன் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வருகின்ற இங்கிலாந்து அணி, இரண்டு விக்கெட்டுகளையிழந்து 87 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தற்போது களத்தில், ஜோ ரூட் ஐந்து ஓட்டங் களுடன் ஆட்டமிழக்காது உள்ளார். நேற் றைய ஆட்டத்தின் இறுதிப் பந்தில், 54 ஓட் டங்களுடன் அலிஸ்டியர் குக் ஆட்டமிழந் தார். இது தவிர, ஹசீப் ஹமீட் 25 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார். இந்திய அணி சார் பாக பந்துவீச்சில், ரவிச்சந்திரன் அஷ்வின், ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா ஒவ் வொரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், இந்தியாவில் வைத்து 387 ஓட்டங்களுக்கு அதிகமாக நான்காவது இனிங்ஸில் பெற்று எந்தவொரு அணியும் வெற்றி பெறவில்லையென்ற நிலையில், ஐந்தாம் நாள் ஆடுகளத்தில் இங்கிலாந்து அணி யால் 318 ஓட்டங்களைப் பெறமுடியுமா என் பது பாரிய கேள்விக்குறியாக காணப்படுகை யில், இந்திய அணிக்கே அதிக வெற்றி வாய்ப்பு கள் காணப்படுகின்றன.

முன்னதாக, தமது இரண்டாவது இனிங் ஸில் மூன்று விக்கெட்டுகளை இழந்து 98 ஓட்டங்களுடன் நேற்றைய நான்காம் நாளை ஆரம்பித்த இந்திய அணி, 204 ஓட்டங் களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. துடுப்பாட்டத்தில், விராட் ஹோலி 81, ஜயந்த் யாதவ் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஸ்டுவேர்ட்ப்ரோட், அடில் ரஷீட் ஆகியோர் தலா நான்கு விக் கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்திய அணி, விராட் ஹோலியின் 167, செட்டேஸ்வர் புஜாராவின் 167, இரவிச் சந்திரன் அஷ்வினின் 58, ஜயந்த் யாதவ் வின் 35 ஓட்டங்களின் துணையோடு 455 ஓட்டங்களை தமது முதலாவது இனிங்ஸில் குவித்திருந்த நிலையில், பென் ஸ்டோக்ஸின் 70, ஜோ ரூட், ஜொனி பெயார்ஸ்டோ ஆகி யோரது தலா 53 ஓட்டங்களின் துணை யோடு, 255 ஓட்டங்களையே தமது முதலா வது இனிங்ஸில் இங்கிலாந்து அணி பெற்றது. போட்டியின் 5ஆவதும் இறுதியு மான நாள் ஆட்டம் இன்றாகும். (க)

## மஹேல - சங்கா மீண்டும் இணைவு



கிரிக்கெட் சுப்பர் ஸ்டார்ஸ் இருபது-20 தொடர் அடுத்த ஆண்டு செப்டெம்பர் - ஒக் டோபர் மாதம் அமெரிக்காவில் நடக்கவுள்ள தாக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து ஜாம்பவான் ஷேவ் வார்னே தெரி வித்துள்ளார்.

ஷேன் வார்னே வாரியஸ் - சச்சின் டெண் டுல்கர் பிளாஸ்டர்ஸ் அணிகள் மோதிய ஓல்ட்ஸ டார்ஸ் கிரிக்கெட் போட்டி கடந்த ஆண்டு நியூ யோர்க், லொஸ் ஏஞ்சல்ஸ், ஹொஸ்டன் ஆகிய நகரங்களில் நடந்தது.

இந்நிலையில் அடுத்த ஆண்டு செப்டெம் பர - ஒக்டோபர் மாதம் நடக்கவுள்ள கிரிக்கெட் சுப்பர்ஸ்டார்ஸ இருபது-20 போட்டியில் விளை யாட பல வீரர்கள் ஒப்பந்தம் செய்துள்ளதாக வார்னே பேஸ்புக்கில் தெரிவித்துள்ளார்.

இதில் மக்கலம், பீட்டர்சன், அப்ரிடி, மிட் செல் ஜான்சன், கிளாரக் ஆகியோர் 2ஆவது சீசனில் இணைந்துள்ளனர். தவிர, சங்கக் கார, ஜெயவர்த்தன, மெக்ராத், காலிஸ், பொண் டிங், அக்தர், லாரா உள்ளிட்ட பலர் இதில் விளையாட உள்ளனர். (க)

## அறிவித்தல்

மதுரை காந்திசேவா சங்கத்தின் உறுப்பினரும் இயற்கை ஆயுள்வேத மருத்துவருமான தேவதாஸ் காந்தி அவர்கள் இந்தியாவில் இருந்து வருகை தந்து யோகா அப்பியாசம் மற்றும் இயற்கை சித்த ஆயுள்வேத முறைகளையும் எமது இல்லத்தில் தங்கியிருந்து பயிற்றுவிக்கின்றார். இப் பயிற்சியினைப் பெற விரும்புவோர் எமது கீழ்காண் முகவரிக்கு எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்து 24 ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறும் பயிற்சி வகுப்பில் கலந்து பயன்பெறுமாறு வேண்டுகின்றோம்.

பதிவு செய்ய வேண்டிய முகவரி
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.
தொலைபேசி இல: 021 492 3118, 077 060 4950.

(C-6446)

அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
◆ செய்திகள்
◆ புகைப்படங்கள்
◆ நிகழ்வுகள்
◆ பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல
076 636 3378

Viber

# சேவை நலன் பாராட்டு

## யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்



### திருமதி அனித்தா ஆறுமுகம் ஆசிரியரின் 60 வது அகவையின் வாழ்த்துச் செய்தி

திருமதி அனித்தா ஆறுமுகம் அவர்கள் 40 வருடங்கள் ஆசிரியராக கடமையாற்றி இருப்பது எம் எல்லோருக்கும் வியப்பு கலந்த மகிழ்ச்சியைத் தருகின்றது. வெளி மாவட்ட சேவையில் (மட்டக்களப்பு மாவட்டத்தில்) தனது சேவையை ஆரம்பித்து கஷ்ட பிரதேச சேவையில் (கிளிநொச்சி மாவட்டத்தில்) தொடர்ந்து ஈற்றில் எமது யாழ். மாவட்டத்தில் நான்கு பாடசாலைகளில் தனது நிறைவின் காலத்தை 5 வருடங்கள் எமது பாடசாலைக்கு வழங்கியமை எமக்கு பெருமையைத் தருகின்றது. ஆசிரியை அவர்கள் கம்பீரமான குரலையும் விறுவிறுப்பான நடையையும் கொண்டு எம் மத்தியில் பணியாற்றி எம்மை விட்டு விடைபெறுவது எமக்கு வருத்தத்தை தருகின்றது. கணித பாடம் கடினமானது என்று நினைக்கக்கூடிய மாணவர்கள் மத்தியில் கணிதத்தின் மேதையாக அதை கற்பிப்பது அவ்வளவு சுலபமான விடயமல்ல. எனவே இந்த அரிய பணியுடன் பகுதித் தலைவருக்குரிய பாரிய பொறுப்பையும் ஏற்று பல சவால்கள் மத்தியில் அரும் பணியாற்றிய ஆசிரியை அவர்கள் பல்லாண்டு காலம் சீருடனும் சிறப்புடனும் வாழ இறையாசியுடன் வாழ்த்தி நிற்கின்றேன்.

அருட்தந்தை மோ.சோபன் ரூபஸ்
(பதில் அதிபர்)
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்



### உளம் நவிலும் ஓர் வாழ்த்து

(ஆசிரியை ஆறுமுகம்)
தேனிலை நனைந்த சொல்லை,
திவ்விய எழுத்தை - அறிவை,
வானிலே உலவும் தென்றல்
வந்தது போல் புகட்டி,
உளனிலும் உயிரிலும் பதிய வைத்த
ஞானியே எம் ஆசிரியையே
மாண்புறு கணிதத்தை கனிவுடன்
எடுத்துரைத்து கண்ணியமாய் தாம் வாழ
தம்மை கரைத்திட்ட ஆசிரியை
அவர்களின் சேவை தனை மனமாற வாழ்த்தி நிற்கின்றோம்

வாழ்த்துவோர்:
யாழ்.நாவாந்துறை றோ.க.வி.
பாடசாலை அபிவிருத்தி சங்கம்
அ.சகாயதாசன்(செயலாளர்)

(கு-6445)



## திருமதி அனித்தா ஆறுமுகம்

### (பகுதித் தலைவர்)

இலங்கை ஆசிரியர் சேவை தரம் I
1977.05.12-2016.11.21-40 வருடங்கள்
Special Trained-Maths, B.Ed (Hons)

**சேவை விபரம்**

I மட்டக்களப்பு மாவட்டம்-1977.05.12 - 1994.03.22
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை-(1) 1980.01.22 - 1980.12.31
(2)1982.07.01 - 1982.12.31

II கிளிநொச்சி மாவட்டம்
(1) கிளி/தர்மபுரம் ம.வி-1996.04.10-2003.08.31
பிரதி அதிபர் -1998.08.01-2003.08.31
நிறைவேற்று அதிபர் - 2000.12.08 - 2001.02.05
கிளி/கிளிநொச்சி ம.வி-2003.09.01-2010.12.31(பகுதித்தலைவர்)

III யாழ்ப்பாண மாவட்டம்
யா/கொழும்புத் துறை இ.ம.வி-1994.03.23 - 1995.05.31
யா/சென்.ஜோசப் வித்தியாலயம் -1995.06.01 - 1996.04.09
யா/ வைத்தீஸ்வராக்கல்லூரி -2011.01.01 - 2011.05.01
யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் - 2011.05.02- 2016.11.20 (பகுதித் தலைவர்)

வாழ்த்துவோர்:
ஆசிரியர் நலன்புரிக்கழகம்
நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்
யாழ்ப்பாணம்.



### வாழ்த்துச்செய்தி

அனைவருடனும் மிக அன்புடனும் நட்புடனும் பழகும் சுபாவம் கொண்டவர் எமது பகுதித் தலைவர் அனிதா ஆறுமுகம். அவரது கணீரென்ற குரல் எல்லோரையும் நின்று நிதானிக்க வைக்கும். பிள்ளைகளிடம் மிக அன்புடன் பழகி கணித பாடத்தை மிக இலகுவான நுட்பத்துடன் கற்பித்து சிறந்த பெறுபேற்றை பெற வைத்தவர். அவரது ஓய்வுக் காலம் மகிழ்ச்சி யுடனும் ஆரோக்கியத்துடனும் அமைய வாழ்த்துகின்றேன்.

மு.சேரழகன்
பகுதித்தலைவர்
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.



### ஆசிரியர் நலன்புரிக்கழகத்தின் வாழ்த்துச்செய்தி

எமது வித்தியாலயத்தின் பகுதித் தலைவராக அரும்பணியாற்றி இன்றைய தினம் பணி ஓய்வுபெறும் பெருமதிப்பிற்கும் பேரன்புக்குரிய திருமதி. அனித்தா ஆறுமுகம் அவர்களின் சேவை நயப்பு இதழுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மட்டக்களப்பில் பிறந்து கிளிநொச்சியில் வாழ்ந்து யாழ்ப்பாணத்தில் சேவையை நிறைவு செய்யுமிவர் எல்லோர் மனதிலும் நீங்கா இடம்பிடித்தவர். எமது ஆசிரியர் நலன்புரிக்கழகத்தின் சிரேஷ்ட அங்கத்தவராக இருந்து எம் சகல முன்னெடுப்புக்களிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வழிகாட்டியவர். சிறந்த முகாமையாளராகச் செயற்பட்டு அனைத்து ஆசான்களையும் தன்பால் ஈர்க்கும் தன்மையுடையவர். எம் கழகத்திற்கு ஆலோசனை வழங்கி பொது நலத்தில் எம்மை இணைக்கும் பாலமாக செயற்பட்டவர். எங்கள் பகுதித்தலைவர் பணியிலிருந்து ஓய்வு பெற்றாலும் அவர் அன்பும் வழிகாட்டலும் எம்முடன் தொடர்ந்தும் இருக்குமென்று நம்புகின்றேன். அவர் வாழ்வும் நலனும் என்றும் சிறக்க அனைத்து சக ஆசிரியர்களுடன் இணைந்து வாழ்த்துகின்றேன்.

திரு.த.சிவராஜ்
தலைவர், ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.

## இராசி பலன்

21.11.2016
(கார்த்திகை 06, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு
சப்தமி காலை 8.09 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 10.18 மணிவரை
சுபநேரம் 12.10-1.40 மணிவரை
இராகுகாலம் 7.40-9.10 மணிவரை
ஆறுமுகநாவலர் குருபூசை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தராடம், திருவோணம் பகல் 10.09 மணிக்கு சிங்-சந் | | சந் |
| செவ் | | | ராகு |
| சுக் | சனி<br>சூரி<br>புத | | குரு |

**மேடம்** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**இடபம்** விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர்.

**மிதுனம்** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், வெளியூர் பயணங்களால் ஆதாயமுண்டு.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், பயணங்கள் பலன் தரும், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, சுப செலவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டுவீர்கள், சயனசுகக் குறைவான நாள்.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், கௌரவமான நாள்.

**துலாம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் கூடும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், நண்பர்களின் உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்** ரோக பயமுண்டு, வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சொத்துக்களால் ஆதாயமுண்டு.

**தனுசு** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செல்வாக்கான நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

**கும்பம்** செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், கடன்சுமை குறைய புதிய வழிகள் கையாள்வீர்கள்.

**மீனம்** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் பெருக வழியமைத்துக்கொள்வீர்கள், பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.



யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய இதழியல் டிப்ளோமா கற்கைநெறி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை யாழ். நகர் ஜும்மா பள்ளிவாசல் வீதியில் அமைந்துள்ள ஊடக வளங்கள் பயிற்சி மைய மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி க.சுதாகர் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கி வைத்தனர். (படங்கள்:-உ.சாளின்)

# நிதிநெருக்கடிகளைச் சந்தித்தாலும் பயிற்சி நெறியை நிறுத்தமாட்டோம்

## யாழ். பல்கலை.துணைவேந்தர் தெரிவிப்பு

நிதி நெருக்கடிகளைச் சந்தித்தாலும் மாணவர்களுக்காக பயிற்சிக்கட்டணங்களை அதிகரிப்பதனூடாக டிப்ளோமாப் பயிற்சியை தொடர்ச்சியாக நடத்துவோம்" என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இதழியல் டிப்ளோமாப்பயிற்சியை நிறைவு செய்த 18 மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சிமைய மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் துணைவேந்தர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்தகாலங்களில்நேரவே அரசினுடைய உதவியுடன் சிறப்பாக நடைபெற்ற டிப்ளோமாப் பயிற்சி அவர்களின் நிதி முடிவடைந்த காரணத்தால் தொடர்ச்சியாக நடத்த முடியாத நிலைக்கு தடைப்பட்டுள்ளது.

இருந்தாலும் இந்தப் பயிற்சியை பல்கலைக்கழகம் தொடர்ச்சியாக நடத்தும். பயிற்சிக்கான கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டு பயிற்சி தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை எதிர்காலத்தில் டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்கள் நேரடியாக பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

## நாவலர் மாநாடு நிறைவு நாள் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டுகள் நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வு மற்றும் குருபூசை நிகழ்வு என்பன இன்று திங்கட் கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில்இடம்பெறும். தருமபுர் ஆதீன முனைவர் கயிலை ஸ்ரீமத் குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள், பாணந்துறைஸ்ரீ கந்தசுவாமி ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ . இலஷ்மிகாந்த ஜெகதீசக் குருக்கள் முன்னிலையில் நடைபெறும் இந் நிகழ்விற்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா. வேதநாயகன் தலைமை தாங்குவார். பிரதம விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமி நாதன், கௌரவ விருந்தினர்களாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர் நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி, அகில இலங்கை சைவபரிபாலன சபைத் தலைவர் ஓய்வுநிலை நீதிபதி. இ.வசந்தசேனன், சிதம்பரம் தவத்திரு ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளையின் தலைவர் டாக்டர் எஸ். அருள்மொழிச்செல்வன், சிறப்பு விருந்தினர்களாக கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபைத் தலைவர் எஸ்.ரி. எஸ்.அருளானந்தம், வடகடல் நிறுவனத் தலைவர் தியாகராசா பரமேஸ்வரன், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா, ஏ. முருகையன் (தவத்திரு ஆறுமுக நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை அறக்கட்டளை - சிதம்பரம்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். குருபூசை நிகழ்வில் திருமுறைக் கலாநிதி கலைமாமணி திருத்தணிசுவாமிநாதன் மற்றும் கலைமாமணி தருமபுரம் சு. ஞானப்பிரகாசம் ஆகியோரது பண்ணிசை அரங்கம் இடம்பெறும். தொடர்ந்து கனடா சைவ சித்தாந்த பீட வைத்திய கலாநிதி இ.லம்போதரனின் குருபூசை பற்றிய சிறப்புப் பேச்சும் இடம்பெறும். ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர்மாநாட்டுச் சிறப்பு மலர், நாவல் நூற்றாண்டு மலர் ஆகிய நூல்களின்வெளியீடும்இடம்பெறும். நூல் அறிமுகவுரையினை பலாலிஆசிரியகலாசாலையின் முன்னாள் அதிபர் சோ. பத்மநாதன் நிகழ்த்துவார். தொடர்ந்து நாவலர் பணி தொடர்ந்த நிறுவனங்களுக்குஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் நினைவு விருது வழங்கும் நிக்வு இடம் பெறும். இதில் சிதம்பரம் ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை, தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகியனவற்றிற்கு இவ் விருது வழங்கப்படவுள்ளதுடன் சிதம்பரம் ஆறுமுகநாவலர் மேனிலைப்பள்ளி மேனாள் தலைமையாசிரியர்க.சுவாமிநாதன், பேராதனைப் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் அமரர் பேராசிரியர் வைத்திலிங்கம் கனகரட்ணம் ஆகிய நாவலர் நற்பணியாளர்கள் விருது பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## கல்வி வலயம் நடத்தும் பரிசளிப்பு தினவிழா இன்று

வடமராட்சி கல்வி வலயம் நடத்தும் பரிசளிப்பு தினவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நெல்லியடி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களாக வே. சிவயோகம், ச.சுகிர்தன், எம்.கே. சிவாஜிலிங்கம், க.தர்மலிங்கம், சி.அகிலதாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7-60)

## இடி, மின்னலால் பாதிப்பு



நேற்று முன்தினம் சனிக்கிழமை பெய்த அடைமழையின் போது இடி, மின்னல் தாக்கியதில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. வரணி கரம்பைக் குறிஞ்சி மேற்கைச் சேர்ந்த சா.பகீர்தரன் என்பவருடைய வீட்டில் இரவு 8.30 மணியளவில் இடி, மின்னல் தாக்கியதில் அவருடைய வீட்டு மதில், தொலைத் தொடர்பு வயர், மின்சார வயர், பனைமரம், தென்னைமரம் என்பன பாதிக்கப்பட்டுள்ளன. (இ-3-60)

## 'அதிகாரத் தாழ்வாரங்கள்' கண்காட்சி நாளை

"அதிகாரத் தாழ்வாரங்கள்" எனும் கண்காட்சிநாளை 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை வரை யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும். முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணிவரை இக்கண்காட்சி நடைபெறும்.

அனுமதி இலவசமாகவுள்ளதுடன் அனைவரும் இக் கண்காட்சியில் கலந்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 91-வது அவதார தின விழா

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 91 ஆவது அவதார தின விழா நாளை மறுதினம் 23 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு பிரசாந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி சேர்.பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறும். நாமசங்கீர்த்தனம், பஜனை, சொற்பொழிவு, ஆராத்தி என்பன இடம்பெற்று பிற்பகல் 12.35 மணிக்கு மதிய போசனம் இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் 2 மணிக்கு ஆரம்பமாகி 5.45 மணிக்கு மகா மங்களாராத்தியுடன் நிறைவுறும். (இ-3)

## பொதுக்கூட்டம்

உரும்பிராய் வடக்கு இலக்குமி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சரஸ்வதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. (இ-7)



யாழ்.செய்திகள்



விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபருக்கான கௌரவிப்பு

யாழ்ப்பாணம் அன்பொளி கல்வியகத்தில் கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 460 மாணவர்களுக்கன கௌரவிப்பு விழா யாழ். நாச்சிமார் கோவிலடி சரஸ்வதி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இயக்குநர் மு.வே.அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் தம்பதிகள், சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய ஆரம்பக் கல்வித் துறையின் முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குகதாசன் தம்பதிகள், கௌரவ விருந்தினர்களாக சி.சிவபாஸ்கரன் (சாரங்கா நகைமாடம்), எஸ். சண்முகராஜா (ராஜாகிறீம் ஹவுஸ்) ஆகியோர் கலந்து கொண்டனர். மாணவர்களின் கலை நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# கார்த்திகை மாத இராசி பலன்கள்

## 16.11.2016-15.12.2016



**அன்பு செலுத்துவதன் மூலம் எளிதில் காரியம் சாதித்துக் காட்டும் தனுசு இராசி நேயர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, உங்கள் இராசிநாதன் குரு பகவான் மாதத்தொடக்கத்தில் 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். விரய ஸ்தானத்தில் சனி பகவானின் ஆதிக்கம் மேலோங்கி இருக்கின்றது. சனி உங்கள் ராசிக்கு தனாதிபதியாகவும், சகாய ஸ்தானாதிபதியாகவும் விளங்குபவர். எனவே யோகம் தருபவராகவே கருதலாம். இருந்தாலும் அவர் விரய ஸ்தானத்தில் அல்லவா சஞ்சரிக்கின்றார்.

எனவே பயனுள்ள விரயங்களை நீங்கள் மேற்கொண்டால் வீண் விரயங்களிலிருந்து விடுபட இயலும். வீட்டிற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் வாங்குவதில் அக்கறை காட்டலாம். வீடு, இடம் வாங்கும் முயற்சியில் ஈடுபடலாம். கட்டடப் பணியைத் தொடரலாம். கட்டிய வீட்டை விரிவு செய்யலாம். திட்டமிட்ட காரியங்களை சில சமயங்களில் முடிக்க முடியாமல் விட்டாலும் 9 இல் ராகு சஞ்சரிப்பதால் அவை திடீரென முடிவடைந்து விடும்.

பொதுநலத்திலும், அரசியல் ஈடுபாடு கொண்டவர்களுக்கு இதுவரை கிடைக்காத பொறுப்புகள் இப்பொழுது கிடைக்கலாம். சம்பள உயர்வு பற்றிய சந்தோஷத் தகவல் வந்து சேரும். நீண்ட நாளையப் பிரார்த்தனை நிறைவேறும். மாற்றினத்தவர்கள் விரும்பி வந்து உதவி செய்வர். உத்தியோகத்தில் சக பணியாளர்களின் எதிர்ப்பு மேலோங்கியதன் விளைவாக, இடமாற்றத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு இப்பொழுது நல்ல மாற்றம் வந்து சேரப் போகின்றது.

இலாகா மாற்றங்களும் ஒரு சிலருக்கு வந்து சேரும். வரும் மாற்றங்களை உபயோகப்படுத்திக் கொள்வதன் மூலம் வருத்தங்களில் இருந்து விடுபட இயலும். 9 இற்கு அதிபதி சூரியனும், 10 இற்கு அதிபதி புதனும் இணைந்து இருந்து தர்மகர்மாதிபதி யோகத்தை வழங்குவதால் மாதத் தொடக்கத்திலேயே ஒரு மகிழ்ச்சியான செய்தி வந்து சேரப்போகின்றது. அது பதவி சம்பந்தமாகவும் இருக்கலாம், பணவரவு சம்பந்தமாகவும் இருக்கலாம். கந்தப் பெருமானை கார்த்திகை நாளில் வழிபடுவது நல்லது. விரயச் சனிக்குப் பரிகாரமாக சனி பகவான் வழிபாட்டை மேற்கொள்வதோடு அன்னதான கைங்கரியங்களில் ஈடுபடுவது நல்லது. வாய்ப்பு இருப்பவர்கள் குச்சனூர், திருநள்ளாறு, பெருச்சிக்கோவில், திருக்கொள்ளிக்காடு, நல்லிப்பட்டி போன்ற




## விழிப்புணர்ச்சி தேவை!

சிறப்பான ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வருவது நல்லது.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

நவம்பர் 25 ஆம் திகதி தனுசு இராசியான உங்கள் இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகின்றார். 7, 10 இற்கு அதிபதியான புதன் இராசிக்குள் உலாவரும் பொழுது வாழ்க்கைத் துணையால் யோகமுண்டு. வாழக்கைத் துணையின் தொழில்

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். அதன மூலம் வருமானமும் வந்து சேரும். மாமன் வழியில் நடைபெறும் சுபகாரியங்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். அந்நிய தேசத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரலாம். எண்ணிய காரியங்கள் எளிதில் முடியும் நேரமிது.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

மகர இராசிக்கு டிசெம்பர் 4 ஆம் திகதிக்கு சுக்ரன் செல்கின்றார். உங்கள் இராசிநாதன் குருவிற்கு சுக்ர பகவான் பகை கிரகமாகும். அப்படிப்பட்ட சுக்ரன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, குருவின் பரிபூரண பார்வை அதன்மீது பதிகின்றது. எனவே இரண்டு முரண்பாடான கிரகங்களின் ஆதிக்கத்தால் முன்னேற்றப் பாதையில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். கண்ணூறுபடும் விதத்தில் கைநிறையப் பொருள் குவியும். உத்தியோகம் சம்பந்தமாக செய்த முயற்சியில் இதுவரை இருந்த தடை அகலும். நேர்முகத் தேர்விற்கு பல முறை சென்றும் பலன் கிடைக்காதவர்கள் இப்

பொழுது வேலை கிடைத்து மகிழ்ச்சி காண்பர். ஒரே நேரததில் இரண்டு இடங்களிலிருந்து அழைப்பு வந்து, எதை ஏற்றுக் கொள்வதென்று தடுமாறும் சூழ்நிலை சிலருக்கு உருவாகலாம்.

**கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 6 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். பஞ்சம விரயாதிபதி மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிள்ளைகளால் ஒருபுறம் நன்மை கிடைத்தாலும் விரயங்களும் ஏற்படலாம். குழந்தைகளின் குணமறிந்து நடந்து கொள்வது நல்லது. அப்பொழுதுதான் அவர்களின் எதிர்காலத் திட்டங்களைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள இயலும். உத்தியோகத்தில் பணி நிரந்தரம் பற்றிய தகவல் வந்து சேரும். இம்மாதம் வியாழன் தோறும் குருவை வழிபடுவது நல்லது. பௌர்ணமியன்று மலை வலம் வருவதும் மகத்துவம் வழாங்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் போராடும் நிலைமாறி புதிய திருப்பம் ஏற்படும். புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரும். யாரோடும் பகை பாராட்டாமல் இருப்பது நல்லது. கணவன்-மனைவிக்குள் அன்பு அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். பிள்ளைகளுக்குரிய கடமைகளைச் செய்ய முன்வருவீர்கள். ஆனால வாரிசுகளால் சிலருக்கு சஞ்சலங்கள் ஏற்படலாம். குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பிரச்சினைகள் ஏற்படலாம். குடும்பச்சுமை கூடுதலாக இருக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். ஏழரைச் சனி நடைபெறுவதால் எதிலும் கவனம் தேவை. குறிப்பாக குடும்ப இரகசியங்களை வெளியில் சொல்லாதிருப்பது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு பற்றிய தகவல் வந்து சேரலாம். சனிக்கிழமை தோறும் சனி கவசம் பாடி சனி பகவானை வழிபட்டு வந்தால் சந்தோஷம் நிலைக்கும்.



**குடும்ப நலனில் அதிக அக்கறை காட்டும் மகர இராசி நேயர்களே!**

கார்த்திகை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது உங்கள் இராசிநாதன் சனி வலிமை இழந்திருக்கின்றார். அதே சமயம் சனி, செவ்வாய் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கின்றார்கள். இதனால் பொருளாதார நிலையில் இதுவரை இருந்த ஏற்ற இறக்க நிலை இனி மாறும். தைரியமும், தன்னம்பிக்கையும் கூடும். கடன் பிரச்சினைகளை சமாளிக்கும் ஆற்றல் வந்து சேரும். 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய் என்பதால் தாய்வழி ஆதரவு பெருகும். தடைக்கற்கள் அகலும்.

வீடு, இடம் சம்பந்தமான பத்திரப்பதிவில் இதுவரை தடைகள் ஏற்பட்டிருக்கலாம். அவை விலகுவது மட்டுமல்லாமல் சொத்துக்களால் ஆதாயங்களும் கிடைக்கும் நேரமிது. அரசியலில் இருப்பவர்களுக்கு செல்வாக்கு மேலோங்கும். பதவிகளுக்கும் பொறுப்புகளுக்கும் உங்கள் பெயர் பரிசீலிக்கப்படும்.

இரண்டில் கேதுவும் அஷ்டமத்தில் இராகுவும் இருப்பதால் நாகதோஷத்தின்

பினனணியில் உங்கள் இராசி இருக்கின்றது. எனவே உங்களது வளர்ச்சியில் திடீர் எனத் தளர்ச்சி உருவாகும். கொடுக்கல்- வாங்கல்கள் சில சமயங்களில் ஸ்தம்பித்து நிற்கும். உங்கள் ஜாதகத்திற்கு ஏற்ற ஆலயத்தை தேர்ந்தெடுத்து யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபடுவது நல்லது.

இரண்டில் கேது இருப்பதால் ஒரு சில சமயங்களில் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாமல் போகலாம். கொள்கை பிடிப்பைக் கொஞ்சம் தளர்த்திக் கொள்ள நேரிடும். 12 இல் சுக்ரன் சஞ்சரிப்பதால் பெண் வழிப்பிரச்சினைகள் அகலும். அந்நிய தேசத்தில் இருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வாகனங்கள் அடிக்கடி பழுதாகின்றதே, புதிய வாகனங்கள் வாங்கலாமா என்ற சிந்தனை மேலோங்கும். அதற்கு வங்கிகளின் உதவியும், நண்பர்களின் உதவியும் கிடைக்கும். மாதக்கடைசியில் உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமான் வழிபாட்டையும், செவ்வாய் தோறும் துர்க்கை வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். திருக்கார்த்திகைத் திருநாளில் பஞ்சமுக விளக்கேற்றி வள்ளி மணவாளப் பெருமானை வழிபாடு செய்யுங்கள். துய

லாம். திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும். ஆரோக்கியத் தொல்லைகளாலும் அவதி உண்டு. பெற்றோர் வழியில் பிரச்சினைகள் தலைதூக்கும். இடமாற்றம், ஊர் மாற்றம் செய்யலாமா என்ற சிந்தனை மேலோங்கும். இருப்பினும் வீடு மாற்றங்கள் போன்ற சில மாற்றங்களை செய்து கொண்டாலே போதுமானது. தொழிலைப் பொறுத்தவரை நண்பர்களை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங்களிடமே வந்து சேரும்.

**மகர சுக்ரனின் சஞ்சாரம்!**

மகர இராசியில் டிசெம்பர் 4 ஆம் திகதி சுக்ர பகவான் சஞ்சரிக்கப் போகின்றார். இது யோகமான நேரமாகும். 5, 10 இற்கு




## பகை விலகும்!

ரங்கள் துள்ளி ஓடும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

நவம்பர் 25 ஆம் திகதி தனுசு இராசிக்குப் புதன் செல்கின்றார். 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உங்கள் இராசிக்கு 12 இல் வரும்பொழுது உத்தியோகத்தில் விழிப்புணர்ச்சியுடன் இருப்பது நல்லது. ஒருசிலருக்கு வீண்பழிகள் வந்து சேர

அதிபதி உங்கள் இராசியில் சஞ்சரிக்கும் பொழுது யோகங்களை வாரி வழங்குவார். மிதமிஞ்சிய பொருளாதாரம் வந்து சேரும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வரவு செலவுகள் திருப்தியாக இருக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். அவர்களுக்கு நல்ல இடத்தில் வேலை கிடைத்து கைநிறையச் சம்பாதிக்கும் யோகம் உண்டு.

பூர்வீக சொத்துக்களில் பாகப்பிரிவினை பல வருடங்களாக இழுத்தடித்திருக்கலாம். இப்பொழுது நல்ல மனிதர்களின் தலையீட்டால் அவை மங்களகரமாக முடியும்.

**கும்பச் செவ்வாயின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 6 ஆம் திகதி கும்ப இராசிக்குச் செவ்வாய் செல்கின்றார். இந்த செவ்வாய் பெயர்ச்சிக்காலம் செயற்பாடுகளில் வெற்றி கிடைக்கும் காலமாகும். எனவே தொட்ட காரியங்கள் துரிதமாக முடியும். கட்டளைக்கு அடிபணியும் பணியாளர்களில் ஒரு சிலரை மாற்றம் செய்ய முன்வருவீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வி.ஐ.பிக்கள் அறிமுகமாவர். சகோதர வர்க்கத்தினரிடம் இருந்த தகராறுகள் அகலும். எதிர்பார்த்த தொகை கைக்கு வந்து சேரும். ஆரோக்கியச் சீர்கேடுகள் அகலும். அரசியலில் உள்ளவர்களுக்குப் புதிய பொறுப்புகள் வந்து சேரும். இம்மாதம் சர்ப்ப விநாயகர் வழிபாடு சந்தோஷத்தை வழங்கும். பௌர்ணமி அன்று கிரிவலம் வருவதன் மூலம் வரும் பலன்கள் வளர்ச்சிக்குரியதாக இருக்கும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

இம்மாதம் உடன்பிறப்புகளாலும், உடன் இருப்பவர்களாலும் அனுகூலம் கிடைக்கும் மாதமாகும். ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். பாதியில் நின்ற காரியங்கள் மீதியும் தொடரும். பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு ஆச்சர்யப்படுவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு பெருகும். பொதுநலத்தில் உள்ளவர்கள் புதிய பொறுப்பு கிடைத்து மகிழ்ச்சி காண்பர். ஆஞ்சநேயர் வழிபாடு அல்லல் தீர்க்கும். யோகமான நாளில் அனுமனுக்கு வடை மாலை சாற்றினால் தடைகள் அகலும். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளின் ஆதரவுடன் பணிபுரியும் வாய்ப்பு உண்டு.

(தொடரும்)

# முதிரை மரக்குற்றிகள் கடத்தல் புளியங்குளம் பொலிஸாரால் முறியடிப்பு

## சந்தேகத்தின் பேரில் மூவர் கைது



(பனிக்கன்குளம்)

மரக் கடத்தலில் ஈடுபட்ட மூவரை வவுனியா புளியங்குளம் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் முதிரை மரக்குற்றிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

வவுனியா புளியங்குளம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து புளியங்குளம் பொலிஸ் அத்தியட்சகர் வி.எஸ்.ரி. விதானகே தலைமையில் ஆர்.ஜெயசூர்ய, எம்.ஜெயசிங்க, ஜெயசூர்ய, டபிள்யூ.ஏ.எம்.கருணாரத்தின, விதானபத்திரன, ஜெயம்பதி ஆகியோர் அடங்கியகுழு இந்த மரக்கடத்தலை முறியடித்துள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் மூவரை கைதுசெய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட முதிரை மரக்குற்றியின் பெறுமதி சுமார் ஒரு இலட்சம் ரூபா என தெரிவித்த பொலிஸார், கடத்தலுக்கு பயன்படுத்திய சிறிய உழவு இயத்திரத்தையும் கைப்பற்றியுள்ளதாக கூறுகின்றனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட மூவரையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (2-281)

# விசேட அம்புலன்ஸ் சேவையை பெறுவதில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

வடக்கு மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள விசேட நோயாளர் காவு வண்டி சேவையைப் பெற்றுக் கொள்வதில் பொது மக்கள் பெரிதும் ஆர்வம் காட்டவில்லை என்று வடக்குமாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நோயாளர் காவுவண்டி சேவை ஆரம்பிக்கப்பட்டு 10 மாதங்கள்கடந்துள்ளபோதிலும் இந்த சேவைக்கான அழைப்புக்கள் 50 வீதம் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வடக்குமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இந்த தகவலைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

முதன்முறையாக வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி விசேட நோயாளர் காவு வண்டி சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தச் சேவையில் 100 நோயாளர் காவு வண்டிகள் பயன்பாட்டில் உள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், இந்த சேவையை ஒருங்கிணைக்கும் அலுவலகம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அமைந்துள்ளதாகவும் இதற்கென விசேடமாக இரண்டு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும் இந்த தகவல் இதுவரை பொதுமக்களை அதிகளவில் சென்றடையவில்லை எனவும் கடந்த மாதம் வரை 50 வீதமான அழைப்புக்கள் யாழ்.மாவட்டத்திலிருந்து மாத்திரமே மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்கு அடுத்தபடியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்கள் காணப்படுவதாகவும் சுகாதார அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (2-281)




# மதுபானசாலைகளை மூடாவிடின் மக்கள் அணிதிரண்டு போராட முடிவு

## பூந்தோட்டக்கிராமத்தில் சுவரொட்டி

(குருமன்காடு)

வவுனியா பூந்தோட்டத்தில் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பினரின் ஏற்பாட்டில் வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள மதுபானசாலையை மூடுமாறு கோரியும் கிராமப்புறங்களில் அமைந்திருக்கும் மதுபானசாலைகளை மூடுமாறும் கோரியும் சுவரொட்டிகள் நேற்று ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த தீபாவளி தினத்தில் சிலர் மதுபோதையில் பூந்தோட்டம் பகுதியில் கைகலப்பில் ஈடுபட்டதுடன் இரண்டு சமூகங்களுக்கு இடையிலான பிரச்சினையாக உருவெடுத்திருந்த நிலையில் அதன் எதிரொலியாக பூந்தோட்ட மக்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை குறித்து கருத்து தெரிவித்த சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் அமைப்பின் உறுப்பினர்கள், வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள மதுபான சாலைக்கு வருபவர்கள் மது அருந்திவிட்டு கிராமங்களில் பிரச்சினைகளை தோற்றுவிக்கின்றனர். இது மக்களின் வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கிறது. வவுனியா பூந்தோட்டத்தில் மாத்திரமல்ல வவுனியாவில் கிராமப் புறங்களில் மதுபான சாலைகள் அதிகரித்து வருகிறது. ஆகவே கிராமப்புறங்களில் அமைந்திருக்கும் மதுபானசாலைகள் மூடப்பட வேண்டும். மதுபான சாலைகள் சில நேரங்களில் இன ஐக்கியத்திற்கும் இடையூறாக செயற்படுவதினால் அவைகள் மூடப்பட வேண்டும்.

அதனைத் தொடர்ந்து குறிப்பிட்ட மதுபானசாலையை அகற்றுவதற்காக கிராம மக்களிடம்கையெழுத்து வேட்டை நடத்தப்படும்.

ஜனாதிபதி மட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் அதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாத நிலையில் மக்களை அணி திரட்டி போராட்டம் நடத்தவும் முடிவெடுத்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (2-250)



மணலாறு மொணரவெவ விகாரைக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முற்பகல் 11 மணியளவில் விஜயமொன்றை மேற்கொண்டார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மணலாறு மயிலன்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட விகாரையில் வழிபாடுகளை முடித்துக்கொண்ட பின்னர் மக்கள் சந்திப்பொன்றையும் மேற்கொண்டார். பின்னர் அங்கு மக்கள் மத்தியில் உரையாற்றினார். (படங்கள்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)

# கட்டைக்காட்டில் சிக்கியது கசிப்பு மோட்டார் சைக்கிள் கைப்பற்று

## சந்தேகத்தில் ஒருவர் கைதானார்



(மல்லாவி)

கிளிநொச்சிமாவட்டபொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவிலுள்ள இராமநாதபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டைக்காட்டுப்பகுதியில் மோட்டார் சைக்கிள் மூலம் கசிப்பை ஏற்றி பயணித்துக் கொண்டிருந்த வேளை பொலிஸாரின் திடீர் வீதிச் சோதனை நடவடிக்கையின் போது 51ஆயிரம் மில்லி லீற்றர் கசிப்பையும் அதனைக்கடத்துவதற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளதாகவும் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாகவும் இராமநாதபுரம் பொலிஸ் பிரிவு அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 6.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து இராமநாதபுரம் பொலிஸ்பிரிவு அலுவலகப் பொறுப்பதிகாரி உப-பொலிஸ் பரிசோதகர் தெய்வேந்திரம் சுபேசன் தலைமையில் விரைந்த பொலிஸ் அணியினரின் திடீர் வீதி சோதனை நடவடிக்கையின் போதே கசிப்பை கடத்திய சந்தேக நபர் கைதானார்.

சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்ற சந்தேக நபர் ஒருவரை கைது செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்களையும் கைதான சந்தேக நபரையும் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக இராமநாதபுரம் பொலிஸ் பிரிவு அலுவலகத்தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# சிறுநீரகப் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனாதிபதியின் வன்னிக்கான இணைப்பு அலுவலகம் நேற்று திறந்து வைப்பு



இலங்கை பூராகவும் சிறுநீரக நோய்க்கு எதிராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் நிலையங்களை ஏற்படுத்துவது தொடர்பான திட்டத்திற்கு அமைவாக வவுனியாவில் 24 ஆவது சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

சிறுநீரகப் பிரச்சினை தொடர்பான பிரச்சினைகளை தீர்க்கும் பொருட்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வன்னிக்கான இணைப்பு அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. வவுனியா மாவட்ட செயலகத்தில் இதனை மத்திய சுகாதார அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான ராஜித சேனாரத்ன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இதன்போது பாடசாலை மாணவர்களுக்கு உதவிகளும் வழங்கி வைக்கப்பட்டது. வன்னியில் தமிழ் மொழி பேசும் மக்களே அதிகமாகவுள்ள நிலையில் இவ் இணைப்பு அலுவலகத்தின் பெயர்ப் பலகை தனிச் சிங்களத்தில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-250)





ஒட்டுசுட்டான் பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து டெங்கு நுளம்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் முகமாக ஒட்டு சுட்டான் நகரப் பகுதியிலும் மற்றும் பொது இடங்களிலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சிரமதானப் பணியை முன்னெடுத்ததைப் படத்தில் காணலாம். (படம்:- மல்லாவி செய்தியாளர்)

# ஒன்பது நீர்ப்பாசனக் குளங்களின் நீர்மட்டமும் மழைவீழ்ச்சி அளவும்

## கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அறிவிப்பு

(மல்லாவி)

**கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக் களத்திற்குட்பட்ட ஒன்பது நீர்ப்பாசனக் குளங்களின் நீர்மட்ட அளவுகளை கிளி நொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பா ளர் நவரட்ணம் சுதாகரன் அறிவித்துள்ளார்.**

இதற்கமைய நேற்று ஞாயிற் றுக்கிழமை காலை 7 மணி வரை கிடைக்கப்பெற்ற நீர் வரத்தையும் நீரேந்து பிரதேசங்களில் கிடைக்கப் பெற்ற மழைவீழ்ச்சியின் அளவு களையும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி இரணைமடுக் குளம்3 அடியாகவும் அக்கராயன் குளம் 15 அடி 9 அங்குலமாகவும் கரியாலை நாகபடுவான் 3 அடி 8 அங்குல மாகவும் கல்மடுக்குளம் 13 அடி 5 அங்குலமாகவும் கனகாம்பிகைக் குளம் 6 அடி 6 அங்குலமாகவும் வன்னேரிக்குளம் 7 அடி 10 அங் குலமாகவும் முறிப்புக் குளம் 12 அடி 10 அங்குலமாகவும் பிரமந்தனாறு குளம் 6 அடி 6 அங்குலமாகவும் குடமுறுட்டிக் குளம் 8 அடி ஒரு அங் குலமாகவும் இதுவரை நீர்வரத்துக் கிடைத்துள்ளது.

இதேவேளை இரணைமடுக்குள நீரேந்துப் பிரதேசத்தில் 18.8 மில்லி மீற்றராகவும் அக்கராயன் குளம் நீரேந்து பிரதேசத்தில் 17.5 மில்லி மீற்றராகவும் கரியாலை நாகபடு வான் குளம் நீரேந்து பிரதேசத்தில் 10.2 மில்லி மீற்றராகவும் நேற்றுக் காலை 7 மணி வரை மழை வீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# மல்லாவி நகரப்பகுதியில் இரண்டு சிலைகள் அமைப்பு

## துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவிப்பு

( மல்லாவி)

துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் துணுக்காய் பிரதேச செய லகத்திற்கு முன்பாகவும் மல்லாவி நகரப் பகுதியிலும் இரண்டு சிலை கள் அமைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் சி. சிவமோகன் தனது பன்முகப்படுத்தப்பட்ட 4 இலட்சத்து 28 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகவும் சிலை கள் அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்று வருவதாகவும் துணுக் காய் பிரதேச செயலாளர் இ.பிர தாபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக் கையில்,

துணுக்காய் பிரதேச செயலகத் திற்கு முன்பாக திருவள்ளுவர் சிலை யும் மல்லாவி நகரப் பகுதியில் வன் னியின் கடைசி தமிழ் அரசனான பண்டாரவன்னியன் சிலையும் அமைப்பதற்கான ஆரம்ப கட்ட வேலைகள் நடைபெற்று வருகின் றன.

எதிர்வரும் மாதம் அளவில் சிலை களின் திறப்பு விழா நிகழ்வு இடம் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

# மழையினால் இரணைமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகளில் சிறிய மாற்றம்

கிளிநொச்சியில் பெய்து வரு கின்ற மழை காரணமாக இரணை மடுக் குளத்தின் புனரமைப்புப் பணிகளில் சிறிய மாற்றத்தினை ஏறப்படுத்தி இருப்பதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப் பாளர் தெரிவித்துள்ளார்.

நீண்ட இடைவெளிக்குப் பின் னர் கிளிநொச்சியில் அதிகளவான மழைவீழ்ச்சி பதிவாகியதனை அடுத்து இரணைமடுக்குளத்தின் புனரமைப்புப் பணிகள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப் பாசனப் பணிப்பாளரிடம் வினவிய போதே அவர் அவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மழை என்பதனைக் காரணம் காட்டி இரணைமடுக்குளத்தின் புனரமைப்பு வேலைகளை பிற் போட முடியாது. இதுதான் இங் குள்ள பெருமளவான மக்களின் வாழ்வாதாரத்தினைக் கொண்டு செல்ல உதவுகின்றது என்பதனை அறிந்தவர்கள் நாங்கள்.மழை காலம் மழைவரும் என்பதனால் நாம் குளத்தின் வெளிப்பாதை, பாலம் என்பவற்றின் பணிக்கு முக்கியத்துவம் வழங்காது குளத் தின் உட்கட்டுமானப் பணிகளை முடிப்பதில் ஆர்வம் காட்டி இருந் தோம்.

நீங்கள் கூறியது போல் கிளி நொச்சியில் அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதனால் எமது கட்டுமானப் பணிகளில் குளத்தின் உட்கட்டுமானப் பணிக ளின் வேலைகளைக் குறைத்து பாலவேலை மாறும். குளத்தின் பால வேலைகளில் ஆர்வம் காட்டி யுள்ளோம்.

எவ்வாறாயினும் மழை என் றாலும் கூட நாம் எமது பணிக ளைத் திட்டமிட்டு வழமைபோல் செய்துகொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார். (2-312)

# இலவச சைவநெறி செயலட்டை வழங்கல்

(வவுனியா)

வவுனியா சேக்கிழார் மன்றத்தின் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் சைவ அறிவை மேம்படுத்தும் நோக்கில் இலவ சமாக சைவ நெறிப் பாடச் செயலட்டை ஒன்றை தரம் 6 வகுப்பிற்கு மேல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது.

எனவே இச் செயலட்டையைப் பெற விரும்பும் அறநெறிபாடசாலைகள் 077 069 1582 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறமுடியும் என சேக்கிழார் மன்ற செயலாளர் க.ஆனந்தகணேஸ் தெரிவித்துள்ளார்.(2)

## சுத்திகரிக்கும் குடிநீர்த் திட்டத்தை

# வவுனியா பொலிஸ் நிலையத்தில் சுகாதார அமைச்சர் திறந்தார்

இலங்கை பொலிஸ் திணைக் களத்தின் 150 ஆவது ஆண்டை முன்னிட்டு வவுனியா பொலிஸாரி னால் ஏற்பாடு செய்யப்பட்ட சுத்தி கரிக்கும் குடிநீர் திட்டத்தை வவு னியா பொலிஸ் நிலையத்தில் சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரத்தின நேற்று திறந்து வைத்தார்.

முற்பகல் 10.30 மணியளவில் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற இந் நிகழ்வில் மத அனுஸ்டானங்களை அடுத்து குடிநீர் திட்டம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.



இதன்போது பாதுகாப்பு அமைச் சின் செயலாளர் கருணாசேன கெட்டியாராச்சி, இலங்கை கடற் படை தளபதி, வவுனியா - மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தி யட்சகர், சிவில் பாதுகாப்பு குழுக்க ளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.(2-250)

# மாணவர்கள் பாடசாலை நிகழ்வுகளில் பங்கேற்கும்போது கவனிக்க வேண்டியவை

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

வடக்கு மாகாண கல்வி அமைச் சிற்குட்பட்ட 12 கல்வி வலயங்களி லுள்ள பாடசாலைகளின் அதிபர் களுக்கு பாடசாலை நிகழ்வுகள், விழாக்கள், போட்டிகள் ஆகியவற் றில் மாணவர்கள் பங்கேற்கும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது விடயங்கள் தொடர் பான தகவல்கள் சுற்று நிருபம் ஊடாக அனைத்துப் பாடசாலை களுக்கும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந் திரன் அறிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விட யங்கள் வருமாறு,

மாணவிகள் பங்கேற்கும் நிகழ்வுகளுக்கு பெண் ஆசிரியர் ஒருவர் உடனிருப்பது கட்டாயமா கும்.

வெளி நிகழ்வுகள், விழாக்கள், போட்டிகள் ஆகியவற்றிற்கு மாண விகளை அழைத்து செல்லும் போது பெண் ஆசிரியர் ஒருவர் அலலது இருவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டு அழைத்துச் செல்லல் வேண்டும்.

அங்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும் போது அதற்கு அதிபரே பொறுப்புக் கூறுபவராக இருக்க வேண்டும்.

விழாக்கள், பாடசாலை நிகழ்வு கள் பாடசாலை நேரத்தை வீண டிக்காதும் வகுப்பறைகள் கற்றல் , கற்பித்தல் நிகழ்வுகளுக்கு பாதிப்பு ஏற்படாது இருப்பதையும் அதிபர் கள் உறுதிப்படுத்த வேண்டும்.

பாடசாலை நிகழ்வுகளை பாட வேளைகள் பாதிக்கப்படாது மாலை வேளைகளில் ஒழுங்குபடுத்தி நட த்த வேண்டும்.

உதாரணமாகபரிசளிப்புவிழாவை பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பி த்தல் அல்லது சனிக்கிழமைகளில் நடத்துதல் பொருத்தமானது.

பாடசாலைநேரம்தவிர்ந்தஏனைய நேரங்களிலும் சனி மற்றும் விடு முறை நாட்களில் நடத்தப்படும் மேலதிக வகுப்புக்கள், விளையாட் டுத்துறை சார்பான பயிற்சிகள் மற் றும் இணைபாடவிதான செயற்பாடு கள் போன்ற அனைத்து செயற் பாடுகளையும் பாடசாலை அதி பரின் முழுமையான கண்காணிப் புடன் மேற்கொள்ளல் வேண் டும்.

இச் செயற்பாடுகளில் மாணவி கள் பங்கேற்கும் போது தகுதியான பெண் ஆசிரியர் ஒருவர் உடனி ருப்பதுடன் அவர் பொறுப்புக் கூறு பவராகவும் இருக்க வேண்டும்.

பாடசாலை ஆசிரியர் அல்லாத ஒருவரைப் பயிற்றுவிப்பாளராக பயன்படுத்துபவராயின் மிக முக் கியமாக உரிய அனுமதி பெறப்பட்டு இருப்பதுடன் குறித்த பயிற்றுவிப் பாளர் தொடர்பான விபரங்கள் முழு மையாகப் பேணப்படல் வேண்டும் என அவர் மேலும் அதில் குறிப்பிட் டுள்ளார். (2-15)

# கட்சியின் பலத்தை நிரூபிக்க தீவிர முயற்சியில் ஜனாதிபதி

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பலத்தை நிரூபிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடுமையான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அடுத்த வருடம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத்தேர்தலை மையப்படுத்தியே இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

மகிந்தவின் தரப்பு பொது ஜன பெரமுன என்ற கட்சியை ஆரம்பித்துள்ள நிலையிலேயே இந்த முயற்சி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மத்தியில் கூட்டாட்சிக்கு உதவும் ஐக்கிய தேசியக்கட்சியுடன் தேர்தலில் இணைந்து போட்டியிடமுடியாது என்ற அரசியல் நிலைக்குள் இருந்து இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில் கடந்த 11ஆம் திகதியன்று ஜனாதிபதியினால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைச்சர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்களுடன் முக்கிய சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புறுரிமையை ஐந்து மில்லியன்களாக அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கை ஜனாதிபதியால் விடுக்கப்பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷவின் தரப்பு புதிய கட்சியை ஆரம்பிப்பதை தாம் பொறுத்திருந்து பார்த்துக் கொண்டிருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்துள்ளார். (இ-7)

# புதிய கட்சியுடன் 11 கட்சிகள் கூட்டணி சேர இணக்கமாம்

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் 11 அரசியல் கட்சிகள் கூட்டணி சேர்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகளே இவ்வாறு, புதிய கட்சியுடன் இணைந்து கொள்வது தொடர்பில் இரகசிய பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன.

இந்தக் கட்சிகளில் பல பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளாகும். இவ்வாறு இரகசிய பேச்சுவார்த்தை நடத்திய கட்சிகளில் தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளும் உள்ளடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த அரசாங்க ஆட்சிக் காலத்தில் முக்கிய அமைச்சுப் பதவி வகித்த ஒருவர் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் சீன விஜயத்தின் பின்னர் இந்த கட்சிகள் இணைந்து கொள்வது குறித்த இறுதித் தீர்மானம் எடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தல் வெற்றி குறித்து திட்டமிடாமை, கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தாமை, கூட்டமைப்பில் நிலவி வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமை உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் இந்த கட்சிகள் புதிய கூட்டணியில் இணைந்து கொள்ள ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 80 | 80 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 100 | 120 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 45 | 80 | 100 | 70 |
| தக்காளி | 50 | 80 | 45 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 | 60 | 60 | 50 |
| கோவா | 40 | 80 | 40 | 60 | 80 | 70 |
| கரட் | 80 | 80 | 70 | 60-140 | 140 | 80 |
| பூசணி | 30 | 80 | 25 | 50 | 50 | 50 |
| புடோல் | 40 | 50 | 30 | 70 | 60 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 40 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 140 | 100 | 100 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 160 | 95 | 200 | 160 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 | 50 | 100 | 100 |
| கருணைக்கிழங்கு | 80 | 120 | 70 | 80 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 140 | 100 | 120 | 120 | 100 |
| லீக்ஸ் | 80 | 120 | 90 | 120 | 120 | 140 |
| பீற்றூட் | 50 | 60 | 50 | 60 | 100 | 50 |
| கறிமிளகாய் | 120 | 120 | 105 | 100 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 60 | 100 | 30 | 80 | 120 | 80 |
| போஞ்சி | 160 | 200 | 180 | 200 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 30 | 60 | 50 | 50 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 550 | 600 | 400 | 600 | 500 | 400 |
| தேங்காய் [illegible] | 30 | 50 | 15-35 | 50 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — |
| வெங்காயத்தாள் | — | — | — | — | 200 | — |
| முள்ளங்கி | 60 | — | 30 | 50 | 60 | 60 |
| பொன்னாங்காணி | 30 | — | 15 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | — | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | — | — | 50 | — | — |

# சிறைக்குள் பேரறிவு

15

## 25 வருடங்கள் சிறைப்பட்டு வலிகளைச் சுமந்தவனின் தொடர்...



"பரந்த உலகம் ஒன்றில் ஒரு பறவையைப் போல் சுற்றித் திரிந்த நான் 6 அடி அகலமும் 10 அடி நீளமும் கொண்ட அகண்ட சுவர்களால் சூழப்பட்ட அறை ஒன்றுக்குள் தனிமைப்படுத்தப்பட்டேன். உறவுகளின் கூட்டத்தாலும் அவர்களின் அளவற்ற அன்பாலும் சூழப்பட்டிருந்த என் உலகத்தில் தனிமை தவிர்த்து எதுவுமே இல்லாமல் போனது."

...அவ்வாறு குற்றத்தை ஒப்புக்கொண்டாலும் ராஜீவ் கொலையில் மன்னிப்பெல்லாம் கிடைக்குமா என்பது ஐயமே என கூடுதலான ஒரு தகவலையும் சொல்லி வைத்தார்கள். இந்திரா காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு சதிக் குற்றவாளி என உச்ச நீதிமன்றத்தால் மரண தண்டனை பெற்ற கெகர் சிங் (Keher Singh) கருணை மனு குறித்து தொடுத்த வழக்கில் தனது கருணை மனுவில் நிரபராதி என்பதற்கான வாதங்களை முன்வைக்கலாம் எனவும் உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்புக்கு மாறாகக் குடியரசுத் தலைவர், ஆளுநர் மனுதாரரை நிரபராதி எனக் கூறி விடுதலை செய்யலாம்' என உச்ச நீதிமன்ற 5 நீதிபதிகள் அரசியல் அமர்வு அளித்த தீர்ப்பு குறித்து அறியாத தருணம் அது.



பேரறிவாளன்

1971இல் பிறந்த நான் ஒரு சராசரி இளைஞனுக்கு உள்ள கனவுகளோடுதான் வளர்ந்தேன். மிகச் சிறந்த படிப்பாளி அல்ல. இருப்பினும், பெற்றோருக்குத் தலைகுனிவை ஏற்படுத்தும் அளவுக்கு கல்வியில் தாழ்ந்ததுமில்லை. ஒழுக்கக் குறைவானவன் என ஒரு நாளும என்னைப் பற்றி எனது பெற்றோரிடம் எவரும் முறையிடும் அளவுக்கு நான் வாழ்ந்ததும் இல்லை. மிகவும் அன்பான இரண்டு சகோதரிகளைப் பெற்றதால் பாசத்துக்குப் பஞ்சமில்லை. எனது தாய், தந்தை என இரு வீட்டாரிலும் நானே மூத்த ஆண் வாரிசு என்பதால், இரு வீட்டாரின் அன்புக்கு அளவில்லை. இங்ஙனம் வளர்க்கப்பட்ட என்னிடம் அன்பைத் தவிர்த்து வேறு எந்தக் குணமும் குடிகொண்டிருக்கவில்லை. ராஜீவ்காந்தியை மட்டுமல்ல, என் வாழ்நாள் முழுமைக்கும் எவரையும் காயப்படுத்த நான் எண்ணவில்லை.

அப்படியான நான் 19 வயதில் கைது செய்யப்பட்டு பொய்யாகக் குற்றம் சுமத்தப்பட்டு தண்டனை பெற்றாலும் இறுதியில் நீதி வெல்லும் என்ற நம்பிக்கையோடு இருந்த நிலையில், அனைத்தையும் பொய்யாக்கி உச்ச நீதிமன்றத்தாலும மரண தண்டனை உறுதி செய்யப்பட்டு வாழ்வின் இறுதிக் கட்டத்துக்குத் தள்ளப்பட்டு விட்டேன். பரந்த உலகம் ஒன்றில் ஒரு பறவையைப் போல் சுற்றித் திரிந்த நான், 6 அடி அகலமும் 10 அடி நீளமும் கொண்ட அகண்ட சுவர்களால் சூழப்பட்ட அறை ஒன்றுக்குள் தனிமைப்படுத்தப்பட்டேன். உறவுகளின் கூட்டத்தாலும் அவர்களின் அளவற்ற அன்பாலும் சூழப்பட்டிருந்த என் உலகத்தில் தனிமை தவிர்த்து எதுவுமே இல்லாமல்போனது. தனிமை என்றால் சாதாரண தனிமை அல்ல - 24 மணி நேரமும் என்னையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கும் (எனக்குப் பாதுகாப்பாய்!) காவலர் முன்பு தான், பகலை விஞ்சும் வெளிச்சத்தைப் பீய்ச்சும் விளக்கொளியில்தான், எந்த மறைப்பும் இன்றி எனது காலைக்கடன்களை முடித்திடவும் உண்ணவும் உறங்கவுமான தனிமை அது.

எப்போதும் ஒரு வெள்ளைக் காற்சட்டை, கைச்சட்டை. உள்ளாடை அணிய அனுமதி கிடையாது. (லங்கோடு என ஒன்றைத் தருவார்கள்). கால் செருப்பு அணிய முடியாது. பகல் நேரங்களில் பக்கத்தில் அடைபட்டிருக்கும் எனது வழக்கின் நண்பர்கள் தவிர, எனது துன்பம் பகிர மனிதர் எவரும் இல்லை. என்னைப் போலவே துன்பத்தில் இருக்கும் அவர்களிடம் எனது துன்பத்தை எப்படிப் பகிர்வது? வாரம் ஒருமுறை வரும் எனது தாயாரிடமும் எப்போதாவது வரும பிற உறவுகளிடமும் காவலர் புடைசூழப் பேசுகிற நேர்காணலில் எந்தத் துன்பத்தை நான் சொல்வது? அப்போது நான் சேலம் நடுவண் சிறையில் உள்ள உயர் பாதுகாப்புத் தொகுதியில் அடைக்கப்பட்டுக் கிடந்தேன்.

எல்லாம் முடிந்து போனது - முடிவுக்கு வந்துவிட்டது. என் சாவுக்கு நாள் குறிக்கப்பட்டு விட்டது. மனதளவில் என்னால் எதிர்கொள்ள முடியாத பெரும் சுமை அது என்பது தெரியும். உள்ளம் மொத்தமும் வேதனையும் உறக்கம் தொலைத்த இரவுகளுமாகக் கழிந்த நாட்கள் அவை. குற்றமேதும் செய்யாத எனக்குக் கொலைத் தண்டனையா? போன பிறவியில் செய்து விட்ட தவறுக்கான தணடனை என்றோ அல்லது இந்தப் பிறவியிலேயே செய்துவிட்ட வேறு ஏதேனும் குற்றத்துக்கான தண்டனை இது என்றோ என் பகுத்தறிவு மனம் ஏற்கத் தயாராக இல்லை.

(வலிகள் தொடரும்...)



வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா கடந்த வியாழக்கிழமை பாடசாலை அதிபர் ஜே.ஏ.தவநாயகம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் மங்கல விளக்கேற்றுவதையும் தரம் 5 புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குவதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பொ.சோபிகா)

# எங்களுடைய சமுதாயத்தை யுத்தம் சிதறடித்து விட்டது

## வடக்கு சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

எங்களுடைய சமுதாயம் யுத்தத்தால் சிதறடிக்கப்பட்டிருக்கின்றது. எம்மில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட உதவி தேவைப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் அவர்களுக்கு நாம் அனைவரும் முன்வந்து உதவி செய்ய வேண்டும். அவ்வாறு உதவி செய்தால் அவர்களது மதம் தானாகவே வளர்ச்சியடையும், இல்லாது தனியே மேடைப்பேச்சுக்களில் மாத்திரமே ஈடுபட்டால் சைவசமயத்தை மற்றுமொரு ஆறுமுகநாவலர் வந்தால் கூட காப்பாற்றி விட முடியாது என வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குருபூசை நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இன்று எங்களுடைய பிரதேசங்களில் ஒரு வேளை சாப்பாட்டிற்கு வழியில்லாதவர்கள், கைகால்களை இழந்தவர்கள், 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசேட தேவைக்குட்பட்டவர்கள் காணப்படுகிறார்கள். பெண்கள் மாத்திரம் தலைமை தாங்கும் குடும்பங்கள் சுமார் 65 ஆயிரம் வரை காணப்படுகின்றன. சைவசமயம் பல நல்ல விடயங்களை இந்தச் சமுதாயத்திற்குக் வெளிக்காட்டியிருக்கின்றது.

நாங்கள் சைவத்தையும, தமிழையும் வளர்க்க வேணடுமெனில் நிச்சயம் மக்கள் மயப்படுத்தப்பட்ட ஸ்தாபனங்கள் உருவாக வேண்டும். நாங்கள் இன்று கோடிக் கணக்கில் பணத்தைச் செலவழித்து ஆலயங்களை நிர்மாணிக்கின்றோம்.

பழைய கோவிலை இடித்துப் புதிய கோவில்களை அமைக்கின்றோம். ஆலயங்கள் நிச்சயமாகத் தேவை. எனக்கு ஒதுக்கப்படுகின்ற நிதியில் மாகாண சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பல ஆலயங்களின் புனரமைப்பிற்கு உதவி செய்திருக்கின்றேன்.

அலங்காரத்துக்காக அல்ல எங்களுடைய அடையாளங்கள் பாதுக்கப்பட வேண்டும் என்ற வகையில் தான் நான் இவ்வாறான உதவிகளைச் செய்து வருகிறேன்.

இன்று மக்கள் மயப்படுத்தப்பட்ட சமய நிறுவனங்களின் பணிகளை நாங்கள் பேச்சுடன் மாத்திரம் நிறுத்தி விடாது எங்களுடைய மக்கள் துன்பப்படும் போது எமது சமய நிறுவனங்கள் நிச்சயம் அந்த மக்களின் துன்பத்தில் பங்கெடுக்க வேண்டும். அவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட வேண்டும்.

இன்று எமது மாகாணத்திலே பல மாணவர்கள் எவருக்கும் கிடைக்காத பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றும் மேற்கொண்டு கற்க முடியாத நிலையிலிருக்கிறார்கள்.

சமய நிறுவனங்கள் கல்வியைத் தொடர முடியாத மாணவர்களுக்கு உதவிகள் செய்து வந்தாலும் ஒட்டுமொத்தத் தேவைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகவும் குறைவாகவிருக்கிறது.

எத்தனையோ தாய்மார் தங்களுடைய பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்ப முடியாமலிருக்கிறார்கள்.

கொப்பி, பென்சில் போனற கற்றல் உபகரணங்களை வாங்க முடியாத நிலையிலிருக்கிறார்கள். அடுத்த வேளை உணவுக்காக எத்தனை குடும்பங்கள் தவிக்கிறார்கள்.

ஆகவே, ஒரு வடிவமுள்ள, கட்டமைப்புள்ள, ஒழுங்குபடுத்தப்பட்ட, மக்கள் மயப்படுத்தப்பட்டதொரு சமய நிறுவனங்களாக எங்கள் நிறுவனங்கள் மாற வேண்டும். இவ்வாறு நாங்கள் மாறாவிட்டால் ஆறுமுக நாவலர் அல்ல... எத்தனை பெரியோர்கள் இந்த மண்ணில் தோன்றினாலும் சைவத்தையும், தமிழையும் எங்கள் நாட்டிலே பாதுகாக்க முடியாது.

நாங்கள் இது குறித்துச் சிந்திக்க வேண்டிய காலப் பகுதியை தவறவிட்டிருந்தாலும் இப்போதாவது நாங்கள் சிந்திக்கத் தவறுவோமாக விருந்தால் நாங்கள் எவ்வாறான விடயங்கள் நடக்கக் கூடாது என்று எண்ணுகிறோமோ அவை நிச்சயமாக நடந்து விடும். மதமாற்றம் எங்களுடைய சமுதாயத்திலே மிக் வேகமாக, கண்ணுக்குத் தெரியாத வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எவ்வாறு இந்த மதமாற்றங்கள் நடைபெறுகின்றன? எவ்வாறு இந்தச் சமுதாயத்திலே அவர்கள் ஊடுருவுகின்றனர்? எனச் சிந்திக்கும் போது நாங்கள் அதற்குத் துணை புரிபவர்களாக அதற்குக் காரண கர்த்தாக்களாக இருக்கிறோம் என்பதே உண்மை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# செய்தித்துளிகள்

## பொலித்தீன்,குடிநீர் போத்தலை தவிர்க்கவும்

இம்முறை சிவனொளிபாதமலைக்கு சுற்றுலா மற்றும் வழிபாட்டுக்காக செல்பவர்கள் பொலித்தீன், குடிநீர் போத்தல் என்பனவற்றை எடுத்து வருவதை முற்றாகத் தவிர்த்து கொள்ளும்படி நுவரெலியா மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பீ.டீ.கே. அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் நல்லதண்ணியிலிருந்து சிவனொளிபாத மலைப் பிரதேசம் வரையிலுள்ள ஹோட்டல்களில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் தண்ணீர் போத்தல் என்பவற்றை எடுத்துச் செல்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இளம் சமூகத்தினர் மத்தியில் எச்.ஐ.வி. பரவல் அதிகரிப்பு

இலங்கையில் இளம் சமூகத்தினர் மத்தியில் எச்.ஐ.வி. எயிட்ஸ் வைரஸ் பரவி வருவது அதிகரித்துள்ளது.

15 வயதிறகும் 24 வயதிற்கும் இடைப்பட்ட இளம் வயதினர் மத்தியில் இந்த வைரஸ் அதிகளவில் பரவி வருகிறது.

பாதுகாப்பற்ற உறவு காரணமாகவே இலங்கையில் 95 வீதமானவர்களுக்கு எச்.ஐ.வி எயிட்ஸ் வைரஸ் பரவியுள்ளதாக சமூக மருத்துவம் தொடர்பான விசேட நிபுணர் ஜானகி வித்தியா பத்திரண தெரிவித்துள்ளார். (இ-7)

## பாதுகாப்பு அதிகாரிகள் மீது ஐவர் அடங்கிய குழு தாக்குதல்

மாத்தறை பொது வைத்தியசாலையில் உள்ள மூன்று பாதுகாப்பு அதிகாரிகளை ஐவர் அடங்கிய குழுவினர் நேற்று தாக்கியுள்ளனர்.

குறித்த குழுவினர், இரண்டு நோயாளிகளை வைத்திய சாலையில் அனுமதிப்பதற்காக வந்திருந்தபோதே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திக்வலை பகுதியை சேர்ந்த ஐவர் அடங்கிய குழுவினரே இந்த தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

## போலிச் சான்றிதழ்களைக் காட்டிய பெண் ஊழியருக்கு விளக்கமறியல்

போலி கல்விச் சான்றிதழ்க்களைக் காட்டி, 24 வருடங்களாக அரச சேவையில் கடமையாற்றிய பெண், கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பதுளை மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான், ஆனந்த மொரகொடவின் உத்தரவுக்கு அமைய, அடுத்த மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஊவா மாகாணத்திலுள்ள பிரதேச செயலாளர் அலுவலகமொன்றில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றிய 59 வயது பெண்ணே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். நிரந்தர நியமனம் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட பரசீலனையின்போது, அவர் போலிச் சான்றிதழ்களை ஒப்படைத்திருந்த விடயம் தெரியவந்துள்ளது. (இ-7)



யாழ். அரசடி ஞானக்குழந்தை முன்பள்ளியின் கலைவிழா நிகழ்வுகள் யாழ். கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றன.

## உ.பியில் நேற்று அதிகாலை பயங்கரம்

# எக்ஸ்பிரஸ் ரயில் தடம்புரள்வு; 100 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

## நூறு பேர் படுகாயம்



(லக்னோ)

**இந்துர்-பாட்னா எக்ஸ்பிரஸ் ரயில் நேற்று அதிகாலை உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள கான்பூர் அருகே தடம்புரண்டு, கவிழ்ந்த விபத்தில் சுமார் 100 பேர் உயிரிழந்தனர்.**

இந்தியாவின் மத்தியப் பிரதேச மாநிலத்தில் உள்ள இந்தூரில் இருந்து உத்தரப்பிரதேச மாநிலம் வழியாக பீகார் மாநில தலைநகர் பாட்னா நோக்கி வேகமாக சென்று கொண்டிருந்த இந்தூர்-ராஜேந்திரா நகர் எக்ஸ்பிரஸ் ரயில், நேற்று அதிகாலை 3.10 மணியளவில் கான்பூர் நகரில் இருந்து சுமார் 100 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள புக்ரயான் என்ற இடத்தில் தண்டவாளத்தைவிட்டு விலகிச்சென்று, தடம்புரண்டது.

இதில், அந்த ரயிலின் 14 பெட்டிகள் ஒன்றின்மீது மற்றொன்று பயங்கரமாக மோதியதால் பயணிகள் பீதியால் அலறித் துடித்தனர். குறிப்பாக, இரண்டு குளிரூட்டி பெட்டிகள் உட்பட நான்கு பெட்டிகள் மிகவும் சேதமடைந்து உருக்குலைந்துப் போயின.

இவ்விபத்து பற்றிய தகவல் அறிந்து, விரைந்துவந்த மீட்புக் குழுவினர், நசுங்கிய ரயில் பெட்டிகளில் சிக்கி, உயிருக்கு போராடிய பலரை உயிருடன் மீட்டனர்.

நூறுபேர் உயிரிழந்த அதேவேளை காயமடைந்த நூற்றுக்கும் அதிகமான பயணிகள் கான்பூர் நகரில் உள்ள பல்வேறு வைத்திய சாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில்சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் இவ்விபத்தில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

பாதுகாப்பாக மீட்கப்பட்ட பயணிகள் பேருந்துகளின் மூலம் தங்களது பயணத்தை தொடர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விபத்துக்குள்ளான ரயிலின் பெட்டிகள் தண்டவாளத்தின் குறுக்கே பரவலாக விழுந்து கிடப்பதால், இந்தப்பாதை வழியாக செல்லும் பிற ரயில்களின் போக்குவரத்து முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது.

தண்டவாளத்தில் ஏற்பட்டிருந்த விரிசலால் இந்த விபத்து நேர்ந்திருக்கலாம் என கருதப்படும் நிலையில், இந்த கோரவிபத்தில் பலியானவர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ரயில்வேதுறை அமைச்சா சுரேஷ் பிரபு ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக, விரிவான விசாரணை மேற்கொள்ளும்படி ரயில்வேதுறை அமைச்சர் சுரேஷ் பிரபு உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## சர்வதேச குழந்தைகள் அமைதிப் பரிசு இறுதிப் பட்டியலில் இந்திய மாணவி



சர்வதேச குழந்தைகள் அமைதி பரிசுக்கான 3 பேர் கொண்ட இறுதிப் பட்டியலில் மாணவி கேகசன் பாசு இடம் பெற்றுள்ளார்.

டுபாயில் உள்ள தேரா சர்வதேச பாடசாலையில் படித்து வரும் இந்திய மாணவி கேகசன் பாசு (வயது 16). சுற்றுச்சூழல் விழிப்புணர்வு, பருவநிலை மாறுபாடு, உயிரினங்களிடம் அன்பு செலுத்துதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறார். இவரது 'கிரீன் கோப்' அமைப்பில் 1,000 பேர் தன்னார்வ தொண்டர்களாக இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

கல்வியை சிறப்பான முறையில் படித்து வருவதற்காக இந்திய அரசின் விருதுகளையும், இசை, நடனம், பேச்சுப்போட்டி ஆகியவற்றில் தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் பரிசுகளைப் பெற்றுள்ளார்.

இந்தநிலையில் சர்வதேச குழந்தைகள் அமைதி பரிசுக்கான 3 பேர் கொண்ட இறுதிப்பட்டியலில் மாணவி கேகசன் பாசு இடம் பெற்றுள்ளார். இந்த பரிசு பெறுபவர் பெயர் அடுத்த மாதம் (டிசெம்பர்) 2ஆம் திகதி நெதர்லாந்து நாட்டில் அறிவிக்கப்படும். அமைதி பரிசை, நோபல் பரிசு பெற்ற முகம்மது யூனுஸ் வழங்கவுள்ளார். சான்றிதழுடன், ஒரு இலட்சம் யூரோ (இந்திய மதிப்பில் சுமார் ரூ.72 இலட்சத்து 20 ஆயிரம்) பரிசாக வழங்கப்படும். (இ-7)

## புவி வெப்பமடைவதைத் தடுப்பது அவசர தேவை

பாரிஸ் பருவநிலை மாற்ற ஒப்பந்தப்படி புவி வெப்பம் அடைவதை தடுப்பதே அவசர தேவை என இந்தியா உட்பட 200 நாடுகள் தெரிவித்துள்ளன.

பாரிஸில் கடந்த 2015ஆம் ஆண்டு பருவநிலை மாற்றம் தொடர்பான மாநாடு நடைபெற்றது. அப்போது புவியின் சராசரி வெப்பநிலை 2 டிகிரி செல்சியசுக்கும் குறைவாக இருப்பதை உறுதி செய்ய மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கான ஒப்பந்தங்களை வரும் 2017க்குள் நிறைவேற்ற தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த 7ஆம் திகதி தொடங்கி நேற்று முன்தினம் வரை மொராக்காவின் மார்கேசில் பருவநிலை மாற்றம் தொடர்பான ஐ.நா.சபையின் கூட்டம் நடைபெற்றது.

அதில் இந்தியா மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடுகள் பங்கேற்றன. அப்போது புவி வெப்பம் அடைவதால் ஏற்படக்கூடிய ஆபத்தை தடுத்து நிறுத்துவது உடனடி தேவை என கூட்டத்தில் பங்கேற்ற நாடுகள் உறுதியேற்றன. (இ-7)

## மூன்றரை இலட்சம் இழப்பீடு

கான்பூர் அருகே இந்தூர்-பாட்னா எக்ஸ்பிரஸ் ரயில் தடம்புரண்டு, கவிழ்ந்த விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 100 ஆக உயர்ந்துள்ள நிலையில் இந்த கோரவிபத்தில் பலியானோர் குடும்பத்துக்கு இழப்பீடாக தலா மூன்றரை இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என ரயில்வே அமைச்சர் தெரிவித்தார்.

தண்டவாளத்தில் ஏற்பட்டிருந்த விரிசலால் இந்த விபத்து நேர்ந்திருக்கலாம் என கருதப்படும் நிலையில், இந்த கோர விபத்தில் பலியானவர்களுக்கு பிரதமர்நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் ராஜ் நாத்சிங், ரயில்வேதுறை அமைச்சர் சுரேஷ் பிரபு ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக, விரிவான விசாரணை மேற்கொள்ளும்படி ரயில்வேதுறை அமைச்சர் சுரேஷ் பிரபு உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் கோர விபத்தில் பலியானோர் குடும்பத்துக்கு இழப்பீடாக தலா மூன்றரை இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றும் படுகாயமடைந்தவர்களின் சிகிச்சை செலவுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும் எனவும்ரயில்வேதுறை அமைச்சர் சுரேஷ் பிரபு அறிவித்துள்ளார். (இ-7)

## ஜனாதிபதிக்கு எதிராக கிளர்ந்தெழும் மக்கள்



தென்கொரிய ஜனாதிபதி பார்க் ஜியூன் - ஹை பதவி விலக வேண்டும் என்பது உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து பல ஆயிரம் மக்கள் இணைந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை முன்னெடுத்துள்ளனர்.

தென் கொரியாவின் ஜனாதிபதி பார்க் ஜியூன்-ஹை, தனது நண்பரும், ஆலோசகருமான கோல் ஒன்-சில்யுடன் இணைந்து பல்வேறு முறைகேடுகள் மூலம் ஊழலில் ஈடுபட்டதாக முறைப்பாடு ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அதிகாரத்தை பயன்படுத்தி அவர் ஊழல் செய்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. எனவே ஜனாதிபதி பார்க் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்காக இது வரை 3 பேரணிகளும் போராட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. அவை அமைதியான முறையிலேயே முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில் தலைநகர் சியோலில் நேற்று முன்தினம் மீண்டும் மிக பிரமாண்டமான பேரணியும், அதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டமும் நடைபெற்றது.

அத்துடன், தென்கொரியா உயர்நிலை பாடசாலை மாணவர்களுக்கான முக்கியமான பரீட்சையும் இந்த வாரத்துடன் நிறைவடைந்த நிலையில், அந்த மாணவர்களும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வாரம், முன்னெடுக்கப்பட்ட ஒரு எதிர்ப்புப் பேரணியில் சுமார் ஒரு மில்லியன் மக்கள் கலந்துகொண்டதாக கூறப்படுவதுடன், அதன் தொடர்ச்சி யாகவே குறித்த பேரணியும் இடம்பெற்றதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

# மஞ்சள் மயமானது மலேசியா

# பிரதமரை உடன் பதவி விலகக் கோரி 40 ஆயிரம் பேர் திரண்டு போராட்டம்

(கோலாலம்பூர்)

ஊழல் குற்றச்சாட்டிற்கு ஆளாகியுள்ள மலேசியப் பிரதமர் நஜீப் ரசாக் உடன் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி தலைநகர் கோலா லம்பூரில் பல ஆயிரக்கணக்கானோர் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.





அரச நிதியில் இருந்து நஜீப் ரசாக்கின் சொந்த வங்கிக் கணக்குகளுக்கு 70 கோடி அமெரிக்க டொலர்கள் மாற்றப்பட்டதாக புகார் எழுந்தது. ஆனால், இந்தக் குற்றச்சாட்டை ரசாக் மறுத்த போதிலும் மலேசியாவில் அவருக்கு நாளுக்கு நாள் எதிர்ப்பு வலுத்து வருகின்றது.





இந்த நிலையில், ரசாக் பதவி விலக வலியுறுத்தி போராட்டக்காரர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் மஞ்சள் நிற ஆடை அணிந்து நேற்று முன்தினம் தலைநகர் கோலாலம்பூரில் பிரதமருக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

போராட்டத்தில் சுமார் 40 ஆயிரம் பேர் பங்கேற்றதாக உள்ளூர் செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தப் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்த 'பெர்சிக்' அமைப்பின் முக்கிய உறுப்பினர்களை பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்தனர்.

போராட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த 7,000 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)





## மூனுக்கு உயரிய விருது



பிரான்ஸ் நாட்டு அரசின் மிகஉயரிய விருதான 'லெஜியான் ஆப் ஹானர்' விருது ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

உலகநாடுகள் அனைத்தையும் தனது ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வருவதற்காக போராடிய பிரான்ஸ் நாட்டை சேர்ந்த மாவீரன் நெப்போலியனால் 1802ஆம் ஆண்டு 'லெஜியான் ஆப் ஹானர்' விருது உருவாக்கப்பட்டது. 'செவாலியே' உட்பட 5 பிரிவுகளாக அளிக்கப்படும் இந்த விருது பிரான்ஸ் நாட்டின் மிகப்பெருமைக்குரிய விருதாக மதிக்கப்பட்டு வருகிறது.

பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள உலக நாடுகளிடையே கருத்தொற்றுமையை ஏற்படுத்தியமைக்காக பான் கீ மூனுக்கு இந்த உயரிய விருது அளிக்கப்படுவதாக இந்த விருதினை பான் கீ மூனுக்கு வழங்கி பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோயிஸ் ஹாலண்டே புகழாரம் சூட்டினார். (இ-7)

## ட்ரம்பை எதிர்த்து வோஷிங்டனில் மீண்டும் போர்.

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் தெரிவாகியுள்ள நிலையில் அவருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைய நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தலைநகர் வோஷிங்டன் டி.சி.யில் ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் ட்ரம்பிற்கு எதிரான கோஷங்களை எழுப்பியதுடன், இனவாதத்தை தூண்டும் வகையில் அவர் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டதற்கும் கண்டனம் தெரிவித்தனர்.

இதன்போது ட்ரம்ப் மீது சுமத்தப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் தேர்தல் பிரசாரத்தின் போது இனவாதத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அவர் கூறியிருந்த கருத்துக்களையும் கண்டித்து பல பதாதைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர். (இ-7)

## இராணுவப் படைகளின் குண்டுவீச்சில் 27 பேர் பலி



(டமாஸ்கஸ்)

அலெப்போ நகரில் உள்நாட்டுப் போரால் உருக்குலைந்துப் போய் கிடக்கும் சிரியாவின் அலெப்போ நகரில் போராளிகள் வசமுள்ள கிழக்குப் பகுதியை கைப்பற்ற அரசுப்படைகள் நடத்திய 'பீப்பாய் குண்டு' தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 27 பேர் உயிரிழந்தனர்.

சிரியாவில் போராளிகள் மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் பிடியில் உள்ள சில முக்கிய பகுதிகளை மீண்டும் கைப்பற்றும் நடவடிக்கைகளை அரசுப்படைகள் தீவிரப்படுத்தி வருகின்றன.

சிரியாவின் இரண்டாவது பெரிய நகரமான அலெப்போவை கைப்பற்ற ஜனாதிபதி பஷர் அல் ஆசாத தலைமையிலான படைகள் ஆவேசமான உச்சக்கட்ட போரில் ஈடுபட்டு வருகின்றன.

போராளிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அலெப்போ நகரின் கிழக்குப் பகுதியை மீட்பதற்காக கடந்த ஒருவார காலமாக அரசுப்படைகள் ஆவேச தாக்குதல் நடத்தி வருகின்றன.

நேற்றுமுன்தினம் அந்நாட்டின் விமானப்படைகள் பீப்பாய் குண்டுகள் மற்றும் வெடிகுண்டுகளை வீசி நடத்திய தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 27 பேர் உயிரிழந்ததாக மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஐந்து நாட்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் இதுபோன்ற தாக்குதல்களில் 92 பேர் பலியானதாகவும் இந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (இ-7)

# அமைச்சருக்கு ஜனாதிபதி கடும் எச்சரிக்கை

அமைச்சர் ஒருவருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சில் இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகள் தொடர்பில் இவ்வாறு ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த அமைச்சில் பல்வேறு ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாக ஜனாதிபதிக்கு பல முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தென் மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் குறித்த அமைச்சருக்கு ஜனாதிபதி அண்மையில் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கான வெற்றிடங்களை நிரப்புதல், நிதிக் கொடுக்கல் வாங்கல்கள், விலை மனுக் கோரல்கள் இன்றி மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலான தவறுகளை திருத்திக் கொள்ளாவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (இ-7)

# உள்ளூராட்சித் தேர்தல் குறித்து ஜனவரி இறுதியில் அரசு அறிவிப்பு

(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து ஜனவரி மாத இறுதியில் அரசாங்கம் அறிவிக்கவுள்ளது.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியினர் தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தும் தினம் தொடர்பில் ஜனவரி மாத இறுதியில் அரசாங்கம் உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒன்றை விடுக்க உள்ளதாக நம்பகத் தகுந்த வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடத்துவது குறித்து அரசாங்கம் கூட்டணி கட்சிகளுடன் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது.

இந்த சந்திப்பின் போது, துரித கதியில் தேர்தல் நடத்துவது ஆளும் கட்சிக்கு சாதகமாக அமையும் என கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் புதிய அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில் தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# ஞானசாரர் நீதிமன்றத்தை அவமதித்த வழக்கு ஜனவரி 11 வரை தள்ளுபடி

(கொழும்பு)

சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டு தொடர்பில் எதிர் மனுவை சமர்ப்பிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஞானசார தேரரின் சட்டத்தரணிக்கு அவகாசம் வழங்கியது.

எதிர்வரும் ஜனவரி 11 ஆம் திகதிக்கு முன்னர் இந்த எதிர்ப்பு மனுவை சமர்ப்பிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி விஜித் மலல்கொட மற்றும் எஸ். துரைராஜா ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழு கடந்த 18 ஆம் திகதி அனுமதியளித்தது.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற் போனமை தொடர்பில், கைதான இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரிகள் குறித்த வழக்கு ஹோமாகம நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிமன்றத்தை அவமதித்ததாக இவர் மீது குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டிருந்தது. சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் எதிர் மனு தாக்கல் செய்யப் போவதாக ஞானசார தேரரின் சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு அறிவித்ததைத் தொடர்ந்து நீதிமன்றம் இவ்வாறு அறிவித்துள்ளது. (இ-7)

# ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு புதிய கட்சி சவாலில்லை-துமிந்த



(கொழும்பு)

புதிய கட்சியொன்று உருவாக்கப்பட்டமை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எந்த விதத்திலும் சவாலாகமாட்டாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

இது கட்சிகளின் வரிசையில் வந்து சேரும் ஒரு கட்சி மாத்திரமே. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு இதிலிருந்து விலகிச் சென்று கட்சியொன்றை உருவாக்கும் எந்தவொரு தேவையும் இல்லை. இக்கட்சியின் தலைவர் தான் இந்த நாட்டினதும் தலைவர் என்பதுவே போதுமான காரணம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஊடக சுதந்திரம் குறித்து மகிந்த முரண்பட்ட கருத்து

## இருக்கு ஆனால் இல்லை

(கொழும்பு)

ஐயோ ! நாட்டில் ஊடக சுதந்திரம் திருப்திகரமாக உள்ளது. கொஞ்சம் பிசகினாலும் அச்சுறுத்தல் விடுத்து ஊடக நிறுவனத்துக்கு கடிதம் செல்கின்றது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கிண்டலடித்துள்ளார்.

அரசாங்கம் சி.எஸ்.என். ஊடகத்தைத் தடை செய்தது. இது ஊடக சுதந்திரம். அண்மையில், தெரண தொலைக்காட்சி சேவை, நிகழ்ச்சியொன்றை அரசாங்கத்துக்கு எதிராக ஒளிபரப்பியதாக



தெரிவித்து ஊடக அமைச்சினால் காரணம் கேட்டு கடிதம் அனுப்பப்படுகின்றது. இது ஊடக சுதந்திரம்.

இவையனைத்தையும் பார்க்கும் போது ஊடக சுதந்திரம் என்பது இந்த நாட்டில் இல்லையென்றே கூற வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## மனம் திறந்துபேச வழிகள்

வாழ்க்கையில் நமக்குச் சிலர், எப்போதாவது வருகிற ரயில் நிலையம் மாதிரி. ஆனால் சிலர் விடயத்திலோ, நாம் இன்ஜின் மாதிரி -பிறர் ரயில் பெட்டிகள் மாதிரி. அதாவது இவர்களை இழுத்துக் கொண்டு தான் காலம் முழுதும் திரிய வேண்டியிருக்கிறது.

உறவுகள் சுமுகமான உறவாக இருக்க அண்டர்ஸ்டாண்டிங் என்று சொல்லப்பெறும் நெருக்கம் அல்லது புரிந்து நடந்து கொள்ளும் தன்மை வேண்டும். இது நெருங்கிப் பழகுவதால்தான் வளர முடியும்.

நேரத்தை வேறு எந்த வகையிலாவது மிச்சப்படுத்தி, நாம் நமக்கு வேண்டியவர்களுடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருக்க வேண்டும். ஊர் அரட்டை அல்ல பேச்சு, நம்மைப் பற்றியும் அவர்களைப் பற்றியும் இருவருடன் சம்பந்தப்பட்டவர்கள் பற்றியும் மட்டுமே அமைய வேண்டும்.

ஆரம்பக் கேள்வி வேண்டுமானால் நீ என்ன சினிமா பார்த்தாய்? என்று இருக்கலாமே தவிர போகப் போக அவர்கள் இதயத்தை எடைபோடும் விடயங்களாகத் தான் பேச வேண்டும்.

இந்தப் பக்கம் பிள்ளைகள் கூச்சல் போட, அந்தப் பக்கம் டெலிவிஷன் அலற... ஊகும்! மனம் திறந்துகூட அல்ல, வாய் திறந்து கூடப் பேச முடியாது. பேசுவதற்கு இதுவல்ல சூழ்நிலை!

எப்போதும் நல்ல அமைதியான சூழ்நிலைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அது பேசும் இரு நபர்கள் யார் என்பதைப் பொறுத்துக் கடற்கரையாகவோ, ஆற்றங்கரையாகவோ, மங்கலான வெளிச்சம் கொண்ட ஓர் ஹோட்டல் உணவறையாகவோ -ஏன்- மொட்டை மாடியாகவோ இருக்கலாம். அது எப்படி இருந்தாலும் மற்றவர்கள் நம்மையே பார்க்கிறார்கள் என்கிற உணர்வு ஏற்படாத எந்த அமைதியான இடமும் நல்ல இடம் தான்.

ஆக, மிக நல்ல இடம் கிடைத்தாயிற்று. இப்போது உங்கள் இதயத்தைத் திறந்து கொட்டுங்கள்; அமைதியான குரலில் பேசுங்கள். அவசரப்படாதீர்கள். அன்பைப் பொழியுங்கள். பிற்பகுதியில் அவர்கள் தங்கள் இதயத்தைத் திறந்து கொட்டுவார்கள். கடிகாரத்தைப் பாராமல் பேசுங்கள். சுற்றுப் புறத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்.

அன்று ஏன் அப்படிச் செய்தேன் ; ஏன் அப்படி நடந்து கொண்டேன் என்றெல்லாம் சுய விளக்கம் அளியுங்கள்.

பிறரை வழிக்குக் கொண்டுவர வேண்டுமா? உங்களுக்கு ஏதும் சாதித்துக்கொள்ள வேண்டுமா? எல்லாம் நடக்கும் அதே நேரத்தில் நீங்களும் ஒரு படி முன்னோக்கிக் கால் வைத்து அவர்களது மன நிறைவுக்காக சிலவற்றை விட்டுக் கொடுக்க முன்வர வேண்டும்.

இறுக்கமான மனங்கள் நேரம் ஆக ஆகத் தான் இளகுகின்றன. அப்படி இளகும் போது நாம் பிடிக்கிற பிடிக்கு ஏற்ப அதன் தோற்றமே மாறும்.

மிக நெருங்கியவர்களிடம் அவதி அவதியாகப் பழகுவது எரிச்சலைத் தான் ஊட்டும். இடைவெளியும் அதிகமாகியபடி இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

# க.பொ.த. (சா/த) பரீட்சை- 2016

# மாதிரி வினாத்தாள்

விஞ்ஞானம்-I

ஒரு மணித்தியாலம்

13) நிலைப்பண்பு சக்தியைப் பயன்படுத்துவது பின்வரும் எந்தவொரு சந்தர்ப்பத்திலாகும்
1) இழுகவண் ஒன்றிலிருந்து கல்லை வீசுதல்
2) நீர்வீழ்ச்சியினால் நீர்ச்சுழலியை இயக்குதல்
3) திருகுயாக்கினை பயன்படுத்தி வாகனத்தை உயர்த்துதல்
4) கப்பியைப் பயன்படுத்தி கிணற்றிலிருந்து நீரினை அள்ளுதல்.

14) படத்தில் தரப்பட்டிருப்பது தடையொன்றாகும். பொறுதிப் பெறுமானத்தினைக் காண்பிப்பது எந்நிற வளையமாகும்
1) கபிலம்
2) கறுப்பு
3) சிவப்பு
4) வெள்ளி




15) இரசாயனத் தாக்கமொன்றில் பங்குகொள்ளும் உப அணுத்துணிக்கையாவது
1) புரோத்தன் 2) இலத்திரன்
3) நியூத்திரன் 4) மேலுள்ள எல்லா துணிக்கைகளும்

16) பின்வருவனவற்றில் எது அற்கேனின் சூத்திரமாகும்
1) $C_2H_2$ 2) $C_2H_4$
3) $C_2H_6$ 4) $CCl_4$

17) சுகதேகி நபரொருவரின் சுருக்க அமுக்கத்தையும் தளர்வு அமுக்கத்தையும் தரும் திருத்தமான விடைத்தெரிவு
1) 70 – 80 mm Hg, 110 – 120 mm Hg
2) 50 – 100 mm Hg, 150 – 180 mm Hg
3) 110 – 120 mm Hg, 70 – 80 mm Hg
4) 150 – 180 mm Hg, 50 – 100 mm Hg

18) பல்கல அங்கியொன்றின் ஒழுங்கமைப்பு மட்டத்தை சரியாக குறிப்பது

| | | | |
|---|---|---|---|
| 1) கலம் | இழையம் | அங்கம் | தொகுதி |
| 2) கலம் | அங்கம் | தொகுதி | இழையம் |
| 3) கலம் | அங்கம் | இழையம் | தொகுதி |
| 4) கலம் | இழையம் | தொகுதி | அங்கம் |

19) நிலைமாற்றி ஒன்றில் முதற்சுற்றிலுள்ள சுற்றுக்களின் எண்ணிக்கை 30 ஆகும். துணைச்சுற்றிலுள்ள சுற்றுக்களின் எண்ணிக்கை 600ஆகும். முதற்சுற்றினூடாக 6V அழுத்தவேறுபாட்டில் மின்னோட்டம் பாய்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் துணைச்சுற்றில் உண்டாகும் அழுத்தவேறுபாடு
1) 30V ஆகும் 2) 60V ஆகும்
3) 120V ஆகும் 4) 0V ஆகும்

20) பின்வரும் கூற்றுக்களில் சரியானதை தெரிவுசெய்க?
1) பொறிமுறை அலைகளை கடத்துவதற்கு ஊடகம் அவசியமில்லை.
2) மின்காந்த அலைகள் வளியில் 335 $ms^{-1}$ வேகத்தில் பயணிப்பவை ஆகும்.
3) அலைகள் மூலம் சக்தி கடத்தப்படும்.
4) வெற்றிடத்தில் பொறிமுறை அலைகள் 3 x $10^8 ms^{-1}$ வேகத்தில் கடத்தப்படும்.

21) உருவில் தரப்பட்டிருப்பது மரக்குற்றியொன்றை உயர்த்துவதற்காக கோலொன்றை பயன்படுத்தும் விதமாகும். இதன்பொருட்டு A இன் மீது பிரயோகிக்க வேண்டிய விசையின் இழிவுப்பெறுமானம் யாது?
1) 50N
2) 100N
3) 500N
4) 2500N




22) கலவளர்ச்சி தொடர்பான சரியான கூற்று பின்வ(
1) கலவளர்ச்சி என்பது கலத்தினுடைய உலர்நிறை அதிகரிப்பாகும்.
2) கலவளர்ச்சி மீளக்கூடிய செயற்பாடாகும்.
3) சகல கலங்களும் வளரக்கூடிய உச்சஅளவு மாறாதது ஆகும்.
4) கலவளர்ச்சி உச்சஅளவை அடைந்த பின்னர் வியத்தத்திற்கு உட்படும்.

23) உட்சுவாசத்தில் நெஞ்சறைக்கூட்டின் தொழிற்பாடு தொடர்பாக சரியான கூற்றை தெரிவுசெய்க
1) உட்புறவிலா என்பிடைத்தசைகள் சுருங்குவதால் விலாஎன்புகள் மேல்நோக்கியும் முன்னோக்கியும் அசையும்.
2) உட்புறவிலா என்பிடைத்தசைகள் சுருங்குவதால் விலாஎன்புகள் கீழ்நோக்கியும் உள்நோக்கியும் அசையும்.
3) பிரிமென்றகட்டுத் தசைகள் தளர்வதனால் அதன் வளைவு குறையும்.
4) பிரிமென்றகட்டினது சுருக்கத்தினால் அதன் வளைவின் குவிந்ததன்மை அதிகரிக்கும்.

24) பின்வரும் எந்தவொரு ஒழுங்கமைப்பில் மின்குமிழ் ஒளிரமாட்டாது?



| | | | |
|---|---|---|---|
| NaCl நீர்க்கரைசல் | குளுக்கோஸ் நீர்க்கரைசல் | HCl நீர்க்கரைசல் | $CuSO_4$ நீர்க்கரைசல் |
| 1. | 2. | 3. | 4. |

25) அணுத்திணிவு அலகுடன் ஒப்பிடும்போது ஆகக்கூடிய திணிவுடையது
1) ஐதரசன் அணுவாகும் 2) நைதரசன் அணுவாகும்
3) மக்னீசிய அணுவாகும் 4) கந்தக (சல்பர்) அணுவாகும்

26) மண்டையோட்டு தெறிவினைக்கு உதாரணமாக அமைவது எது?
1) சூடான பொருளை தொட்டதும் உடனடியாக கையை எடுத்துககொள்ளல்.
2) காலில் முள் குற்றியவுடன் உடனடியாக காலை விலக்கிக் கொள்ளுதல்.
3) இறப்பர் சுத்தியலினால் காலில் அடிக்கும்போது முழங்கால் உதறுதல்.
4) கண்ணில் யாதாவது விழவரும் கணத்தில் கண்மடல்கள் மூடிக்கொள்ளல்.

27) கிடைத்தளத்தில் சீரான வேகத்தில் இயங்கும் பொருளொன்று படத்தில் தரப்பட்டுள்ளது. இயக்கத்தின்போது பிரயோகிக்கப்படும் விசை $F1$ இனால் குறிக்கப்பட்டுள்ளது. $F2$ இன் மூலம் உராய்வுவிசையும் $R$ இனால் செவ்வன் மறுதாக்கமும் தரப்பட்டுள்ளன. $mg$ என்பது பொருளின் நிறையாகும். மேற்படி விசைகள் தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A) $F1 = F2$
B) $F1 > F2$
C) $F1 < F2$
D) $mg = R$




மேற்படி கூற்றுக்களுள் சரியானது அல்லது சரியானவை
1) A மட்டும் 2) B மட்டும்
3) A உம் D உம் மட்டும் 4) C உம் D உம் மட்டும்

28) இரும்பு துருப்பிடித்தல் தொடர்பாக 4 கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.
A. இரும்புடன் மக்னீசியம் தொடர்பில் இருப்பதன்மூலம் கதோட்டுப் பாதுகாப்பு கிடைக்கும்.
B. இரும்பின்மீது வெள்ளீயப் பூச்சிடுவதனால் கதோட்டுப்பாதுகாப்பு கிடைக்கும்.
C. கல்வனைசுப்படுத்தல் கதோட்டுப்பாதுகாப்பு பொறிமுறையாகும்.
D. உப்புக்களினால் இரும்பு துருப்பிடிக்கும் வேகம் அதிகரிக்கும்.
மேற்படி கூற்றுக்களில் சரியானவை
1) A, B, D ஆகும் 2) A, C, D ஆகும்
3) A, B, C ஆகும் 4) B, C, D ஆகும்

29) விலங்குக்கணம் ஒன்றின் இயல்புகள் சில வருமாறு
- உடற்சுவர் இருபடை கொண்டது.
- ஆரைச்சமச்சீர் கொண்டது.
- ஐதரா உருவும் மெதுசா உருவும் காணப்படும்.

மேற்படி இயல்புகளைக்கொண்ட விலங்குகள் அடங்கும் கணமாவது
1) அனலீடா 2) மொலஸ்கா
3) சீலந்திரேற்றா 4) ஆத்திரப்போடா

30) பொருளொன்று நீரில் அமிழ்ந்துள்ள விதம் படத்தில் தரப்பட்டுள்ளது. இதன்போது பொருள் தென்படும் விதத்தை சரியாகக் குறிப்பது எது




31) $(NH_4)_2SO_4$ இன் சார்மூலகக் கூற்றுத்திணிவு யாது?
(N = 14, H = 1, S = 32, O = 16)
1) 66 2) 114 3) 122 4) 132

32) வாயுவும் அதன் பயன்பாடும் சரியாக தரப்பட்டிருக்கும் துலங்கலை தெரிவுசெய்க?

| | வாயு | பயன்பாடு |
|---|---|---|
| 1. | ஐதரசன் | காலநிலை அவதான பலூன்களை நிரப்பிக்கொள்ளல் |
| 2. | ஒட்சிசன் | தீயணைப்பதற்கு |
| 3. | காபனீரொட்சைட்டு | உலருணவுப் பொருட்களை பொதிசெய்வதற்கு |
| 4. | நைதரசன் | தகனத்துணையாக |

33) காந்தப்புலமொன்றில் செங்குத்தாக உள்ள மின்பாயும் கடத்தியொன்றில் விசை தொழிற்படும் கீழே குறிப்பிடப்படும் காரணிகளைக் கவனிக்க.
A) கடத்தியின் நீளம்
B) மின்னோட்டம்
C) கடத்தியின் குறுக்குவெட்டு முகப்பரப்பு
D) காந்தப்புலத்தின் வலிமை

16 ஆம் பக்கம் பார்க்க...

15 ஆம் பக்கம் தொடர்ச்சி...)

மேற்படி காரணிகளில் விசையின் பருமன் தங்கியிருக்கும் காரணிகளாவன

1) A உம் C உம் 2) B உம் D உம்

3) A, B, C 4) A, B, D

34) நியூக்கிளிக்கமிலங்களில் காணப்படும் மூலகங்களின் தொகுப்பானது

1) காபன், ஐதரசன், ஒட்சிசன், நைதரசன், பொஸ்பரஸ்

2) காபன், ஐதரசன், ஒட்சிசன், நைதரசன், கந்தகம்

3) காபன், ஐதரசன், ஒட்சிசன், பொஸ்பரஸ், கந்தகம்

4) காபன், ஐதரசன், ஒட்சிசன், பொஸ்பரஸ், மக்னீசியம்

35) பொருளொன்றின்மீது செயற்படும் ஒருதள சாய்வுவிசைகள் P, Q, R என்பவற்றால் தரப்பட்டுள்ளன. இவ்விசைகளினால் பொருள் ஓய்வில் இருக்கின்றது. எனவே P, Q, R என்பவற்றின் சரியான தொடர்பு

1) $P + Q = R$ 2) $P = Q = R$

3) $P + Q > R$ 4) Q உம் R உம் P இற்கு சமமானவை

36) அமிழ்ப்புவெப்பமாக்கி ஒன்றில் 230V, 1000W, 50Hz என குறிக்கப்பட்டிருந்தது. இது உச்சவினைத்திறனுடன் தொழிற்படும்போது செலவாகும் மின்சக்தியின் அளவு,

1) 1000/2J 2) 1000/2 X60 J

3) 1000 X 2J 4) 1000 X 2 X 60 J

37) தலைமுறையுரிமை தொடர்பான பின்வரும் கூற்றுக்களை கவனிக்க

A - இயல்பொன்றுக்கு பொறுப்பான பரம்பரையலகுச் சோடிகள் ஒத்தவையாயின் அங்கி சமநுகம் ஆகும்.

B-அங்கிகளின் இலிங்க இயல்புகள் நிர்ணயிக்கப்படுவது பரம்பரையலகுகளால் ஆகும்.

C-மனித இலிங்க நிறமூர்த்தச்சோடி சர்வசமமானதாகும்.

மேற்படி கூற்றுக்களில் சரியானது அல்லது சரியானவை

1) A மட்டும் 2) B மட்டும்

3) A உம் B உம் மட்டும் 4) B உம் C உம் மட்டும்

38) கீழே தரப்பட்டிருப்பது நான்கு இரசாயனத்தாக்கங்கள் ஆகும்.

A- பொட்டாசியம் பரமங்கனேற்றின் வெப்பப்பிரிகை

B- ஐதரசன் பரவொட்சைட்டின் பிரிகை

C- கல்சியம் காபனேற்றின் வெப்பப்பிரிகை

D- நீரின் மின்பகுப்பு

மேற்படி தாக்கங்களில் வாயுநிலை விளைவாக ஒட்சிசன் பெறப்படுவது எச்சந்தர்ப்பங்களில் ஆகும்.

1) A, B, C 2) A, B, D

3) A, C, D 4) B, C, D

39) பின்வரும் கூற்றுக்களில் பச்சைவீட்டுவாயுக்கள் தொடர்பாக சரியான கூற்றினை தெரிவுசெய்க.

1) பச்சைவீட்டுவிளைவை ஏற்படுத்தக்கூடிய வாயுவாக அமைவது காபனீரொட்சைட்டு மாத்திரம் ஆகும்.

2) பச்சைவீட்டுவாயுக்களின் செறிவு அதிகரிப்பது வளிமண்டல வெப்பநிலை குறைவதற்கு காரணமாகும்.

3) பச்சைவீட்டுவாயுக்கள் புவியில் சாதகமான காலநிலை நிலவுவதற்கு காரணமாகும்.

4) பச்சைவீட்டுவாயுக்களின் விடுவிப்பிற்கு மனிதசெயற்பாடுகள் மட்டும் காரணமாகும்.

40. நவீன திறன்கள் நான்கு A, B, C, D மூலம் தரப்பட்டுள்ளது.

A – உணவின்பொருட்டான செலவை குறைத்துக்கொள்ளல்

B – காபன் இழப்பின் அளவை இழிவளவாக்கிக் கொள்ளல்

C – நீரிழப்பு தொடர்பாக கவனம் செலுத்தாமை.

D – மீள்சுழற்சிக்கும் மீள்பாவனைக்கும் ஏற்ற உற்பத்திகளைப் பயன்படுத்தல்

இவற்றுள் நீடித்து நிலைபெறத்தக்க சூழல்நேய நுகர்வோர் ஒருவரால் செயற்படுத்தப்படவேண்டியன

1) A உம் B உம் 2) B உம் D உம்

3) A, B, D 4) B, C, D

## விஞ்ஞானம்-II 3 மணித்தியாலம்

கவனிக்கவும்

- தெளிவான எழுத்தில் விடையளிக்க.
- பகுதி A இல் தரப்பட்டுள்ள இடத்தில் நான்கு வினாக்களுக்கும் விடையளிக்குக.
- பகுதி B இல் நீங்கள் விரும்பிய 03 வினாக்களுக்கு விடையளிக்குக.
- விடையளித்த பின் பகுதி A, பகுதி B ஆகிய இரண்டு விடைப்பத்திரங்களையும் ஒன்றாக இணைத்து கையளிக்குக.

### அமைப்புக்கட்டுரை-பகுதி A

01) A. "அவரைக்குடும்ப தாவரங்களை வளர்ப்பதனால் தரை வளமானதாகும்" இக்கூற்றின் உண்மைத்தன்மையை பரிசீலிப்பதற்காக மாணவர்குழாம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டது. மாணவர்குழாம் பின்வருமாறு செயற்பாடுகளை திட்டமிட்டு செயற்படுத்தலாயினர்.

**செயற்பாடு- 1**

- பரப்பளவும் மண்காரணிகளும் ஒத்த இரு நிலப்பரப்புக்கள் தெரிவுசெய்யப்பட்டன.
- ஒரு தரைத்துண்டத்தில் சோயா அவரையும் மறுதுண்டத்தில் சோளமும் பயரிடப்பட்டன.
- இரு பயிர்ச்செய்கைகளுக்கும் வள்ர்ச்சிக்கு வேண்டிய காரணிகள் ஒத்த அளவில் விநியோகிக்கப்பட்டன.
- அறுவடை மேற்கொள்ளப்பட்ட பின்னர் இரு தரைத்துண்டங்களிலும் பயிர்மீதிகள் மண்ணுக்கு சேர்க்கப்பட்டன.

**செயற்பாடு- 2**

- தரைத்துண்டங்கள் மீண்டும் தயார்செய்யப்பட்டு கோவா தாவரங்கள் வளர்க்கப்பட்டன.
- வளர்ச்சிக்கு வேண்டிய காரணிகள் ஒத்த அளவுகளில் விநியோகிக்கப்பட்டன.

**செயற்பாடு-3**

- சமகால அளவின் பின்னர் தாவரங்களின் வளர்ச்சி ஒப்பிடப்பட்டன.

i) செயற்பாடு- 2 இல் தரைத்துண்டங்கள் இரண்டிற்கும் சமமாக வழங்கப்பட வேண்டிய காரணிகள் இரண்டு தருக.

ii) செயற்பாடு - 3 இல் தாவரங்களின் வளர்ச்சிகளை ஒப்பிடுவதற்காக தெரிவுசெய்யப்பட வேண்டிய நியதிகளைக் குறிப்பிடுக?

iii) மேற்படி கூற்றினது உண்மைத்தன்மையை பரிசீலிப்பதற்காக நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்பாடுகள் போதுமானவையா?

iv) உமது விடைக்கு விளக்கம் தருக?

B) படத்தில் தரப்பட்டிருப்பது வளிமண்டலத்தின் இயற்கைவாயுக்கள் மூன்றினது சுழற்சியாகும். மேற்படி வாயுக்கள் A, B, C எனக் குறிப்பிடப்பட்டுள்ளன.




மண்

i) மேற்படி வாயுக்களுடன் தொடர்பான தகவல்களை பின்வரும் அட்டவணையில் உரிய இடங்களில் குறிக்க.

| | வாயுவின் பெயர் | வாயுவை வளிக்கோளத்திலிருந்து அகற்றும் அங்கிக்கூட்டம் | வாயுவை வளிமண்டலத்திற்கு சேர்க்கும் அங்கிக்கூட்டம் |
|---|---|---|---|
| A | | | நைதரசனிறக்கும் பக்றீரியா |
| B | | தாவரம் | |
| C | | தாவரங்களும் விலங்குகளும் | |

ii) மேற்படி உருவில் தரப்பட்டிருப்பது உயிர்க்கோளத்தின் எந்த ஒழுங்கமைப்பு மட்டமாகும்?

iii) பயிர்ச்செய்கைகளின் பொருட்டு பெருமளவு விவசாய இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

a) இத்தகைய விவசாயிகளை பீடிக்கத்தக்க தொற்றும்தகவற்ற நோய் யாது?

b) மேலே குறிப்பிட்ட நோய் ஏற்படுவதுடன் தொடர்பான காரணங்கள் 2 தருக?

02) A. மாணவன் ஒருவனது வீட்டுத்தோட்டத்தில் அவரைத்தாவரம் ஒன்றில் பூக்கள் பூத்திருந்தன. இப்பூக்களுக்கு அண்மையாக தேனீக்களும் பறந்தன.

i) பூ ஒன்றினது ஆணகத்தின் கூறுகள் இரண்டை குறிப்பிடுக?

ii) மகரந்தச்சேர்க்கை, கருக்கட்டல் என்பவற்றை தொடர்ந்து பூவிலுள்ள சூலகம் எவ்வாறு மாறும்.

iii) வீட்டுத்தோட்டத்தில் இருந்த தேக்கு மரத்தின் வித்துக்கள் தோட்டமெங்கும் பரவிக் காணப்பட்டன. இவ்வித்துக்கள் பரம்பலடைவதற்கான காரணி யாது?

iv) வித்துக்களும் பழங்களும் பரம்பலடைவதனால் தாவரங்களுக்கு கிடைக்கும் அனுகூலம் யாது?

B) உக்கும் மரக்குற்றிக்கு அருகே அட்டைகள், மட்டைத்தேள்கள் போன்றவை அவதானிக்கப்பட்டன.

i) பின்வரும் விலங்குகள் அடங்கும் கணங்களைக் குறிப்பிடுக?

மட்டைத்தேள் :------------ மண்புழு :-----------------

ii) மாணவன் ஒருவன் தேரை ஈரூடகவாழியாகும் எனக் குறிப்பிட்டான். இதனை விளக்குக.

iii) மரக்குற்றி உக்குவதுடன் தொடர்புபட்ட நுண்ணங்கிக்கூட்டம் யாது?

C) கோதுமைமா சிறிதளவு எடுத்து நீரில் கரைத்து கரைசலொன்று தயாரிக்கப் பட்டது. அதில் சிறிதளவுசோதனைக்குழாயில் எடுக்கப்பட்டு சமகனவளவு அமைலேஸ் கரைசல் சேர்க்கப்பட்டு பின்வருமாறுசெயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

**செயற்பாடு-1** : கலவையின் ஒரு சிறிதளவு மாபிள் தட்டொன்றில் எடுக்கப்பட்டு அயடீன் கரைசலின் துளியொன்று சேர்க்கப்பட்டது.

**செயற்பாடு- 2** : 10 நிமிடங்களுக்கு பின்னர் கலவையின் சிறிதளவு மாபிள் தட்டில் எடுக்கப்பட்டு அயடீன் கரைசலின் துளியொன்று சேர்க்கப்பட்டது.

i) **செயற்பாடு- 1** இல் அவதானிக்கக்கூடிய நிறம் யாது?

ii) **செயற்பாடு-2** இல் கிடைக்கும் நிறவேறுபாடு யாது?

iii) இந்த செயற்பாட்டின் போது நொதியமாக செயற்பட்டுள்ள பதார்த்தம் யாது?

iv) மேற்படி செயற்பாட்டின்போது அயடீன்கரைசல் துளிகளை சேர்ப்பதற்கான பொருத்தமான ஆய்வுகூட உபகரணம் யாது?

v) அங்கிகளின் உடலினுள் நொதியங்களின் பங்களிப்பு யாது?

மிகுதி நாளை தொடரும்...



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாடு மற்றும் குருபூஜை நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வுகளின் மாலை நேர நிகழ்வு நல்லூர் துர்க்காதேவி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது... (படங்கள்:- உ.சாளின் )

# பூமியும் சிறிது காலத்தில் சனிக்கிரகம் போல் மாறும்

## விஞ்ஞானிகள் தகவல்!

இன்னும் சிறிது காலத்தில் பூமியை சுற்றி, சனி கிரகத்தில் இருப்பது போன்ற வளையம் ஏற்படும் என விஞ்ஞானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

பூமியில் இருந்து அனுப்பி வைக்கப்படும் தகவல் தொடர்பு செய்மதிகள் மற்றும் விண்வெளி ஓடங்களின் பாகங்கள் இவ்வாறு வளையமாகத் தென்படும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பூமிக்கு மேல் விண்வெளியில் செய்மதிகளின் 100 மில்லியன் பாகங்கள் சிதறிக் கிடக்கின்றன.

இவைகளில் பல கண்ணாடி போத்தல்களை விட பெரியவை என நாசா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அவற்றில் 27 ஆயிரம் பாகங்கள் 10 சென்ரி மீற்றரை விட பெரியவை என கருதப்படுகிறது.

இந்த பாகங்கள் மணிக்கு 28 ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் பூமியை சுற்றி வருகின்றன.

இந்த செய்மதி பாகங்கள் காரணமாக எதிர்காலத்தில் வண்கலங்களை சேதமின்றி விண்வெளிக்கு அனுப்புவது தொடர்பில் பிரச்சினையான நிலைமை ஏற்படும் என சதம்ப்டன் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

1953 ஆம் ஆண்டு ஸ்புட்னிக் என்ற செய்மதி விண்ணுக்கு அனுப்பப்பட்ட நாளில் இதுவரை விண்வெளி ஓடங்கள், ரொக்கெட்டுகள், செய்மதிகள் ஆயிரக் கணக்கில் பூமியில் இருந்து விண்வெளிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை காலம் கடந்ததும் பழுதாகி அழிந்து அவற்றின் பாகங்கள் விண்வெளியில் இருக்கின்றன.

இந்த நிலையில், விண்வெளியில் இருக்கும் பாகங்களை எப்படியாவது அப்புறப்படுத்துவது குறித்து விஞ்ஞானிகள் தற்போது கவனம் செலுத்தி வருகின்றனர்.(இ-7)

# மகிந்த புதிய கட்சியின் தலைவரானால் பலர் சுதந்திரக் கட்சியில் இணைவர்

(கொழும்பு)

புதிய கட்சியின் தலைமைப் பொறுப்பினை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டால், கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பலர் மீளவும் சுதந்திரக்கட்சியில் இணைந்து கொள்வார்கள் என சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

வார இறுதி பத்திரிகை ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி கட்சியின் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டால், அவருடன் எதிர்க்கட்சியில் இருக்கும் பல உறுப்பினர்கள் சுதந்திரக்கட்சியில் இணைந்து கொள்வார்கள்.

அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதாக இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே உறுதியளித்துள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டல்களின் அடிப்படையிலேயே புதிய கட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த நடவடிக்கைக்கு கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பெரும் எண்ணிக்கையிலான சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவடையச் செய்யும் நோக்கில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே, கூட்டு எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடன் இணைந்து சுதந்திரக் கட்சியை வலுப்படுத்த அர்ப்பணிப்புடன் இணைந்து கொள்வார்கள்.

எதிர்வரும் நாட்களில் மகிந்தவுடன் இணைந்திருக்கும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளின் பிரதிநிதிகளையும் சுதந்திரக் கட்சியில் இணைத்துக் கொள்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப் படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 906

கவிசனா

கல்யாணத்துக்கு அப்புறமும் ஒரு பொண்ணு மொபைல் நம்பர் மாத்தாம அதே" சிம்-மை" பயன்படுத்தினால்



"அவள் தான் கலியுக சீதை"

நிசாந்தன்

நண்பர்கள்
தவறு செய்தால்
மன்னித்து விடாதே
மறந்து விடு...
ஏனெனில்
அவர்கள்
உன் உறவுகள் அல்ல
உணர்வுகள்...!

விதுர்சினி



நான் நெருப்பு டா...




இனிமே நீ ரெடிமேட் அடுப்புடா...

விதுசாயினி



ஒரு முறை வந்தால்
அது கனவு.
இருமுறை வந்தால்
அது ஆசை.
பல முறை வந்தால்
அது இலட்சியம்.

- அப்துல் கலாம்.

ராதி

காசு வரலைனா கூட பரவால்ல...



2 சப்பாத்தியும் ஒரு ஆம்லேட்டும் வர மாதிரி ATM மெசின மாத்தி செட் பண்ணுங்கடா... #பசிக்குதுடா...

டிலானி



முதல்வன் அர்சுனன்

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.





இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டுகள் நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மாநாட்டின் மூன்றாம் நாள் காலை நேர நிகழ்வு நேற்றைய தினம் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.

பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அருளுரையை தருமபுர ஆதீன முதல்வர் கயிலை ஸ்ரீமத் குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள் வழங்கியதுடன் ஆசியுரையை நாயன்மார்கட்டு சித்திவிநாயகர் ஆலய ஆகம கிரியா ஜோதி சிவஸ்ரீ சதா மகாலிங்க சிவகுருக்கள் வழங்கியிருந்தார்.







அதனை தொடர்ந்து விருந்தினர்கள் உரையும், மாணவர்களை பாராட்டும் நிகழ்வும், "நாவலரின் தமிழ்க்கல்விப்பணி" எனும் தலைப்பில் கருத்தரங்கமும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி, கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், வடமாகாண 'மீன்பிடி அமைச்சின் செயலாளர் சி.சத்தியலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் எஸ்.பஞ்சலிங்கம், அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் டி.மனோகரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (படங்கள்: பொ.சோபிகா)

# தமிழ் சினிமா வரலாறு

## நடிப்புக்கு இலக்கணம் வகுத்த பானுமதி 304

**சினிமாவில் அறிமுகம்**

பானுமதி தனது 13 வயதிலேயே திரை உலகில் நுழைந்தார். வரவிக்யம் என்ற தெலுங்குப் படத்தில் இரண்டாவது கதாநாயகியாக அறிமுகமானார். அவர் பாடிய பாடல் இசைத் தட்டுக்களாக வெளிவந்து சக்கை போடு போட்டன.

இதன்பின் பிரபல டைரக்டர் பி.புல்லையா, மாலதி மாதவம் என்ற படத்தில் பானுமதியை கதாநாயகியாக நடிக்க வைத்தார்.

பின்னர் தர்மபத்தினி, பக்தி மாலா, கலுட கர்வ பங்கம், கிருஷ்ண பிரேமா ஆகிய படங்களில் பானுமதி நடித்தார்.

**காதல் திருமணம்**

கிருஷ்ண பிரேமா படத்தில் நடித்துக்கொண்டிருந்த போது பானுமதிக்கும் துணை டைரக்ட் ராமகிருஷ்ணாவுக்கும் காதல் ஏற்பட்டது. குடும்பத்தினரின் எதிர்ப்பையும் மீறி 08.08.1943 இல் ராமகிருஷ்ணாவை பானுமதி மணந்து கொண்டார்.

திருமணத்துக்குப் பிறகு சினிமாவுக்கு முழுக்கு போட்டு விட வேண்டும் என்பதே பானுமதியின் எண்ணம். ஆனால் அவர் வாழ்க்கையில் எதிர்பாராத திருப்பம் ஏற்பட்டது. திரைப்பட முன்னோடியான பி.என்.ரெட்டி (நாகிரெட்டியின் சகோதரர்) ராமகிருஷ்ணாவை சந்தித்து நான் தயாரிக்க இருக்கும் சொர்க்கசீமா படத்தில் பானுமதி நடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பானுமதி மீண்டும் சினிமாவில் நடிப்பதை, ராமகிருஷ்ணா விரும்பவில்லை. எனினும் பி.என். ரெட்டியின் வேண்டுகோளைத் தட்ட முடியவில்லை. இந்த ஒரு படத்தில் மட்டும் நீ நடி என்று பானுமதியிடம் கூறினார்.

சாதாரண நிலையில் இருந்து பெரிய நட்சத்திரமாக உயர்ந்த நாடக நடிகை ஒரு டைரக்டரின் வாழ்க்கையில் குறுக்கிடுகிறார். ஏற்கனவே திருமணம் ஆன டைரக்டரின் வாழ்க்கையில் புயல் வீசுகிறது. குடும்பம் பிரிகிறது. பல திருப்பங்களுக்குப் பிறகு இவர் குடும்பம் ஒன்று சேருகிறது.

வி.நாகையா டைரக்டராகவும் பானுமதி நடிகையாகவும் நடித்தனர். படம் பிரமாதமாக அமைந்தது.

வரலாறு கண்டறியாத வெற்றியைப் பெற்றது. அந்தப் படம் தமிழ் நாட்டிலும் திரையிடப்பட்டு தமிழ்ப் படம் போல வெற்றிகரமாக ஓடியது.

இப்படத்தில் கையில் வெள்ளைப் புறாவை வைத்துக்கொண்டு ஓகோ...கோ.. பாவு ரமா! என்று பானுமதி பாடுவார். தமிழ் ரசிகர்களும் அந்தப் பாட்டை முணுமுணுத்தனர்.



நடிப்புக்கு இலக்கணம் வகுத்த பானுமதி.

சொர்க்கசீமா அடைந்த வெற்றி காரணமாக சினிமாவுக்கு முழுக்கு போடும் திட்டத்தை பானுமதி கைவிட்டார்.

**பாகவதர்**

இந்தக் காலகட்டத்தில் லட்சுமிகாந்தன் கொலை வழக்கில் சிக்கி விடுதலையடைந்த எம்.கே. தியாகராஜபாகவதர் ராஜமுக்தி என்ற படத்தைத் தயாரித்தார். இந்தப் படத்தில் முக்கிய வேடத்தில் பானுமதி நடித்தார்.

அவர் நடித்த முதல் தமிழ்ப் படம் இது. மற்றும் எம்.ஜி. ஆர்.வி.என் ஜானகி, எம்.ஜி. சக்ரபாணி ஆகியோரும் நடித்த இந்தப்படம் 09.10. 1948 இல் வெளி வந்தது.

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இப்படம் தோல்வியைத் தழுவியது.

**நல்லதம்பி**

அடுத்து பேரறிஞர் அண்ணாவின் கதை,வசனத்தில் என்.எஸ். கிருஷ்ணன் சொந்தமாகத் தயாரித்த நல்லதம்பி என்ற படத்தில் பானுமதி நடித்தார்.

04.02.1949இல் வெளியான இப்படம் நடிப்பு சிறப்பாக அமைந்தது.

**ரத்னகுமார்**

அடுத்து பி.யு.சின்னப்பாவுடன் ரத்னகுமார். இரண்டு கதாநாயகிகள் கொண்ட இப்படத்தின் மற்றொரு நாயகி கே.மாலதி.

இந்தப் படத்தை கிருஷ்ணன், பஞ்சு டைரக்ட் செய்தனர்.

15.12.1949இல் வெளி வந்த ரத்னகுமார் சுமாராகவே ஓடியது.

(தொடரும்)

தொழில் ரகசியம்

# எதற்கும் தகவல் அவசியம்

'வாழ்க்கை என்னும் ஹோட்டலில் பரிமாறப்படும் தகவல், மெனு கார்ட்டை பார்த்து ஓர்டர் செய்த உணவாக இருப்பதில்லை' என்றார் உளவியலாளர் 'டான் கில்பர்ட்'.

சண்டை போட்டு கேட்டதைப் பெறும் பழக்கமில்லாதவர்கள் அதுபோன்ற சந்தர்ப்பங்களில் சூழ்நிலைக் கைதியாகி வேண்டியதை கேட்டுப் பெறாமல் போட்டதை ஏற்றுக்கொள்ளப் பழகி விடுகின்றனர்' என்கிறார். ஹோட்டல் என்றால் பரவாயில்லை, ஏதோ வந்ததை பெற்றோம், வெந்ததை தின்றோம் என்று விட்டுவிடலாம். வியாபாரத்தில் சரியான தகவல் இல்லாமல், இருக்கும் தகவலை பெறாமல், பெற்ற தகவலை அலசாமல், அலசிய தகவலை மற்றவருடன் பங்கிடாமல் இருப்பதால்தான் முடிவுகள் தவறாகி, கம்பனி தாறுமாறாய் தறிகெட்டுப் போய் தள்ளாடி தடம்புரள்கிறது.

கண்கட்டு போட்டது போல் மனம் முடிவெடுக்கத் தேவையான, எளிதில் கிடைக்கும் தகவலை பாராமல், பயன்படுத்தாமல், பங்கிடாமல் இருப்பதை 'கட்டுப்படுத்தப்பட்ட விழிப்புணர்வு' (BoundedAwareness) என்கிறார்கள் 'ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் 'மேக்ஸ் பாஸர்மேன்' மற்றும் 'டாலி சுக்'.

நேரமின்மை காரணமாக எடுக்கப்படும் அவசர முடிவுகள் அல்ல நாம் இங்கு பேசுவது. நேரம் இருந்தும், தகவல் இருந்தும், அதை அலசத் தேவையான அனைத்தும் இருந்தும் கடிவாளம் போட்ட கண்கள் அதைப் பாராமல், கட்டுண்ட சிந்தனை அதை கண்டுகொள்ளாமல் முடிவுகள் எடுக்கப்பட்டு அது தவறான பின்பு 'சே, தெரிஞ்சே எப்படி தப்பு செய்தேன்' என்று நொந்து கொள்கிறோமே அது தான் கட்டுப்படுத்தப்பட்ட விழிப்புணர்வு.

முடிவெடுக்கும்போது இதன் தாக்கத்தை, உருவாகும் காரணத்தை அதற்கான தீர்வுகளை 'ஹாவர்ட் பிசினஸ் ரெவ்யூ'வில் 'Decisions with blinders' என்ற கட்டுரையில் விரிவாக விளக்குகிறார்கள்.

**தகவலை பார்க்காமல் இருப்பது**

செய்யும் செயலில் கவனம் தேவைதான். ஆனால் அந்த செயலின் மீது அதீத கவனம் செலுத்தும்போது விழிப்புணர்வு பாதிக்கப்படுகிறது. அச்செயலை பக்கவாட்டிலிருந்து பாதிக்கும் சங்கடங்கள் நம் கண்களுக்கு தெரிவதில்லை.

ஃபில்டர் காபி கம்பனிகள் தங்கள் பிராண்டுகளை பராமரிப்பதிலேயே முழு கவனம் செலுத்தி வந்ததாலோ என்னவோ கூட்டு குடும்பங்கள் குறைந்து வீட்டில் பெரியவர்கள் இல்லாமல் இருப்பதை, பெண்கள் வேலைக்கு போவதை, அதனால் பெருகும் நேரமின்மையால் ஃபில்டர் காபி போட முடியாமல் இன்ஸ்ட்ண்ட் காபிக்கு மாறி வருவதை கவனிக்கத் தவறினர். கவனித்தவை மட்டும் கவனத்தை கவர்ந்ததே ஒழிய கவனத்தில் கொள்ள வேண்டியவை கவனக்குறைவால் கவனிக்கப்படாமல் போக பல ஃபில்டர் காபி ப்ராண்டுகள் இன்ஸ்டண்ட்டாய் காணாமல் போயின!



எதிரே இருப்பதை மட்டும் பார்க்கப் பழகுவதால் எதிர்பாராததை எதிர்பார்க்கத் தவறுகிறோம். 'ஒன்றை அதிகம் பார்க்காமல் இருந்தால் அதுவே அதிகம் பார்க்க முடியாத ஒன்றாகிவிடும்' என்றார் அமெரிக்க நாவலாசிரியர் 'தாமஸ் வுல்ஃப்'!

**தகவலை கேட்காமல் இருப்பது**

சில சமயங்களில் விடயங்களை அலசி ஆராய்ந்து முடிவெடுப்பதற்குள் மனம் தானாய் ஒரு முடிவிற்கு வந்துவிடுகிறது. இதுபோன்ற தருணங்களில் சரியான முடிவெடுக்கத் தேவையான தகவலைப் கேட்டுப் பெற மறுக்கிறது. இதை விளக்கும் 'உறுதிப்படுத்தல் சார்புநிலை' என்ற உளவியல் கோட்பாட்டை சில வாரங்களுக்கு இங்கு படித்தது நினைவிருக்கலாம்.

9/11 அமெரிக்காவில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு சதாம் ஹூசேன் கண்டிப்பாய் உதவியிருக்கவேண்டும் என்று அமெரிக்க அரசாங்கம் கருதியது. தங்கள் கருத்தை உறுதிசெய்ய தேவையான தகவல்களை கேட்டுப் பெறக் கூட தோன்றாமல் தாங்கள் நினைத்தது சரியாகத் தான் இருக்கும் என்று உறுதியாக நம்பியது. பிற்காலத்தில் நடந்த நிகழ்வுகள் மூலம் தான் இந்த எண்ணம் தவறானது என்று தெரிந்தது என்று 'Against all enemies' என்ற புத்தகத்தில் குறிப்பிடுகிறார் அப்பொழுது பயங்கரவாத எதிர்ப்பு துறையில் பணி புரிந்த 'ரிச்சர்ட் கிளார்க்.'

**தகவலை பயன்படுத்தாமல் இருப்பது**

தகவலைப் பார்க்காமல், தகவலை கேட்டுப் பெறாமல் சிந்தனை கட்டுண்டு கிடப்பது ஒருபுறமென்றால், கையில் கிடைத்த தகவலை கண்டுகொள்ளாமல், அதை பயன்படுத்தாமல் முடிவெடுத்து படுகுழியில்விழுவது இன்னொரு வகை வயித்தெறிச்சல். 'ஃபேர் அண்ட் லவ்லி' உபயோகிப்பவர்களில் குறிப்பிடும்படியான சதவீதத்தவர்கள் ஆண்கள் என்று பல்வேறு ஆய்வறிக்கைகள், சந்தை ஆய்வறிக்கைகள் கூறியிருந்தாலும் அத்தகவலை பயன்படுத்தி ஆண்களுக்கு பிரத்யேக சிவப்பழகு க்ரீம் ஒன்றை அறிமுகப் படுத்த வேண்டும் என்று அதன் கம்பனி 'ஹெச்.யு.எல்'லிற்கு தோன்றாமல் போனது.

'இமாமி' அந்த தகவலை பயன்படுத்தி 'ஃபேர் அண்ட் ஹாண்ட்சம்' என்ற பிராண்டை வெற்றிகரமாக அறிமுகப்படுத்திய பின் தான் விழித்துக்கொண்டு கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்தது. என்ன பிரயோஜனம், ஃபேர் அண்ட் ஹேண்ட்சம் சிவப்பாய் சிரிக்க ஹெச்.யு.எல்லின் புதிய பிராண்ட் சிரிப்பாய் சிரித்தது.

சமயத்தில் வெற்றியும் கண்ணை மறைத்து கட்டுப்படுத்தப்பட்ட விழிப்புணர்வில் கட்டுண்டு கிடக்க காரணமாகிறது. மெக்கானிக்கல் வோட்ச் தயாரிப்பில் சுவிட்சர்லாந்து நாட்டு கம்பனிகள் கோலோச்சிய காலத்தில் 'க்வார்ட்ஸ்' தொழிற்நுட்பம் அதேநாட்டில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் மெக்கானிக்கல் தந்த வெற்றியின் மமதையில் இருந்ததாலோ என்னவோ க்வார்ட்ஸ் தொழில்நுட்பத்தை சுவிஸ் கம்பனிகள் சட்டை செய்யாமல் அதை மற்ற நாடுகள் தயாரிக்க விட்டுவிட்டன. க்வார்ட்ஸ் மணிக்கூடுகளை மக்கள் பெருவாரியாக ஏற்றுக்கொள்ள உலக மணிக்கூட்டுச் சந்தையில் சுவிஸ் கம்பனிகள் தங்கள் முன்னணி நிலையை இழந்தன.

**தகவலை பகிர்ந்துகொள்ளாமல் இருப்பது**

தகவலின் முக்கியத்துவம் அதை பயன்படுத்துவதில் மட்டுமல்ல, பிறரிடம் பகிர்ந்து கொள்வதிலும் உண்டு. கிடைக்கும் தகவல் தேவைப்படுகிறவரிடம் பகிர்ந்துகொள்ளப்படாமல் போவதால் எடுக்கப்படும் முடிவுகள் தவறாகி போகின்றன. இதுவும் கட்டுப்படுத்தப்பட்ட விழிப்புணர்வின் கைங்கர்யமே.

அமெரிக்க 9/11 தாக்குதலை ஆராய அமைக்கப்பட்ட '9/11 கமிஷன்' தன் இறுதி அறிக்கையில் அமெரிக்க பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளிடமும் தீவிரவாதிகள் பற்றி தகவல்கள் சிறியஅளவேனும் இருந்தன என்கிறது. உள்நாட்டு பாதுகாப்பு துறையான எஃப்பிஐயிடம் அமெரிக்காவில் தங்கியிருந்த தீவிரவாதிகள் பற்றிய தகவலும், விமான போக்குவரத்து நிர்வாகத்திடம் சந்தேகத்திற்குரிய நபர்கள் விமானப் ப்யிற்சி எடுத்து வரும் செய்தியும், சிஐஏ மற்றும் ஜனாதிபதி மாளிகையிடமும் கூட தகவல்கள் இருந்தனவாம். ஒவ்வொரு துறையும் தன்னிடமிருந்த தகவலை மற்ற துறையினரிடம் பகிர்ந்துகொண்டிருந்தால் பயங்கரவாத சதி திட்டத்தின் முழு வடிவம் தெரிந்து 9/11 என்ற கொடுமை நடக்காமலே கூட தடுத்திருக்கலாம் என்கிறது!

ஒருமுறை பட்டுக்கொண்ட அமெரிக்கா அதிலிருந்து சுதாரித்து, எழுந்து கிடைத்த தகவல்களை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை மேற்கொண்டதால் அதன் பிறகு அங்கு எந்த பயங்கரவாத தாக்குதலும் நடைபெறவில்லை.

செய்யும் செயலில் ஆழ்ந்த கவனம் இருப்பது நல்லது தான். ஆனால் முக்கியமான முடிவுகள் எடுக்கும் போது நிர்வாகிகள் கட்டுப்படுத்தப்பட்ட விழிப்புணர்வின் பாதிப்பிற்கு உள்ளாகாமல் பாதுகாத்துகொள்வது முக்கியம். எடுக்கப்படும் முடிவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தால் தேவையான அனைத்து தகவலும் பெறப்பட்டதா, பார்க்கப்பட்டதா, பரீசீலிக்கப்பட்டதா, பயன்படுத்தப்பட்டதா, பகிர்ந்துகொள்ளப்பட்டதா என்று பார்ப்பது பயன்தரும்.

அந்தகால பீம்சிங் 'ப' வரிசை படங்கள் போல பல 'ப'னாக்கள் இருந்தால் தான் போட்டி பின்னும் பிசினஸ் உலகில் பின்னி பெடலெடுத்து பிரகாசிக்க முடியும் என்பது புரிகிறதா!




# நிதி வாழ்க்கைக்கு வழிகாட்டும் பண விதிகள்




தனிநபர்கள், நிதி விடயங்களை, தங்கள் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொள்ள வழிகாட்டும் வகையில், மேரி ஹண்ட், '7 மணி ரூல்ஸ் பார் லைப்' புத்தகத்தை எழுதியிருக்கிறார். நிதி அறியாமை கடன் வலையில் சிக்கித் தவிக்க வைக்கும் எனக் கூறும் மேரி ஹண்ட், நிதி எதிர்காலத்தை வளமாக்கி கொள்வதற்கான, ஏழு எளிய வழிகளை விளக்குகிறார்:

அமெரிக்கர்களை மனதில் வைத்து எழுதப்பட்டது என்றாலும், இதில் விவரிக்கப்படும் வழிமுறைகள், நம் எல்லோருக்கும் பொதுவானவை.

* **வருவாயை விட, குறைவாக செலவு செய்யுங்கள**: இது மிகவும் எளிமையானது. எப்போதும் சம்பாதிப்பதை விட, குறைவாக செலவு செய்வது, கடன் வலையில் சிக்காமல் இருக்க முக்கியமானது. மனப்போக்கு மிகவும் அவசியம். வருமானத்தை குறைவாக செலவு செய்வது, உங்களுக்கு நிகழும் ஒன்றல்ல உங்களால் செய்யக்கூடிய ஒன்று. அது உங்கள் முடிவு. ஒவ்வொரு செலவுகளையும் ஆய்வு செய்து, அடிப்படை தேவைகள் என்ன என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இது, செலவுகளை கட்டுப் படுத்த உதவும். இதை செய்ய எளிய வழி, இருப்பதில் திருப்தி கொள்வது தான்.

* **எதிர்கால சேமிப்பு**:

உங்கள் வருமானத்தில், 10 சத வீதத்தை நீண்டகால பாதுகாப்பிற்காக சேமித்து வையுங்கள். பணம் கையில் இருந்தால், உங்களால் தெளிவாக யோசிக்க முடியும். அது வாய்ப்புகளையும் அதிகமாக்கும்.

* **கொடுங்கள்**: நன்றி உணர்வுடன் பணத்தை நன்கொடையாக அளியுங்கள். எந்த பலனையும் எதிர்பாராமல் இதை செய்யுங்கள். எதிர்பாராத செலவுகளை சமாளிக்க திட்டமிடுங்கள்.

* **பணம் எங்கே செல்ல வேண்டும்**:

உங்கள் பணம் எங்கே செல்ல வேண்டும் என தீர்மானித்து, அதை உறுதி செய்யவும். செலவுகளுக்கான திட்டம் இருக்க வேண்டும் செலவுகளுக்கு என்று தெளிவான திட்டம் இருக்க வேண்டும்.

* **கிரெடிட் ரேட்டிங**: நல்ல கிரெட்டி ரேட்டிங்கை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். கிரெடிட் ஸ்கோரை கவனித்து மேம்படுத்தவும். மோசமான கிரெட்டி ரேட்டிங் உங்களை பாதிக்கும்.

* **கடன் வாங்கும் முன்**: உங்களால் திரும்பி செலுத்த முடியும் என, உறுதி இருந்தால் மட்டுமே, கடன் வாங்கவும். கடனில், மூன்று வகையான கடன் இருக்கிறது. நல்ல கடன், மோசமான கடன் மற்றும் நடுநிலையான கடன்.

இந்த விதிகள் எல்லா வயதினருக்கும் பொருந்தும். எல்லா வகை வருமானத்திற்கும் இது பொருந்தும். வாழ்க்கையின் எல்லா கட்டங்களுக்கும் பொருந்தும். இந்த விதிகள் எல்லாவற்றிலும், முதல் விதி தான் மிகவும் முக்கியமானது. வருமானத்தை விட, குறைவாக செலவு செய்வது என்பது தான், மற்ற எல்லாவற்றுக்கும் அடிப்படை. இது மிகவும் எளிதாக இருப்பதால், பலரும் அலட்சியம் செய்யலாம். ஆனால், வெற்றிகரமான நிதி திட்டமிடலுக்கு, இதுவே மிக அவசியம். மேலும்,உங்கள நிதி இலக்குகளை, தனியே எழுதி வையுங்கள் அவற்றை அடைவதற் காக திட்டமிடுங்கள். ஒவ்வொரு நாளும், அதை மனதில் கொண்டு செயல்படுங்கள்

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,415.59 | 6,326.11 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,589.97 | 3,514.98 ⇩ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** புரள்வு (ரூபா.மில்.) 1,505.555

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** புளு டைமன்ட்ஸ்(0.60),லைன் பிறவரி (489.20), எஸ்எம்பி லீசிங்(0.80),ஹெரன(18.80),பிறின்ட்கெயர்(40.00).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** லங்கா சீமெனட்(5.60),சிங்கஇன்(145.50),சிலோன் லெதர்(56.80),லங்கீம் டெவலப்(3.70), வலிபல்வன்(19.00).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 146.54 | 150.30 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 180.85 | 187.10 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 154.25 | 160.22 |
| சுவிஸ் பிராங் | 144.21 | 150.06 |
| கனேடிய டொலர் | 107.40 | 111.74 |
| அவுஸ்திரேலிய டொலர் | 107.25 | 112.17 |
| சிங்கப்பூர் டொலர் | 102.33 | 106.14 |
| ஜப்பான் யென் | 1.31 | 1.37 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை | 2.17 |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை | 40.22 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி



# பட்ஜெட் - 2017

*நல்லாட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு - செலவுத் திட்டம்* ***அனைவருக்கும் நன்மைதரும் விரைவான அபிவிருத்தியை நோக்கி*** *என்ற தொனிப்பொருளில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் 10.11.2016 அன்று நாடாளுமன்றில் முன் வைக்கப்பட்டது. நிதி அமைச்சரின் 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட வாசிப்பின் போது...*

# சுகாதார நலன்புரிச் சேவையில் தகவல் தொழில்நுட்பம் கட்டாயம்

(தொடர்ச்சி...)

126.சந்தை மற்றும் கைத்தொழில் தேவைகளை நிறைவேற்றுவதற்கு இரத்தினக்கல் தொடர்பான அறிவு, ஆபரணக்கல் பதித்தல், ஆபரண வடிவமைப்பு, பெறுமதி மிக்க மாணிக்கக்கல் பட்டை தீட்டுதல், பற்றிக் வேலை மற்றும் மூங்கில் கைவினைப் பொருட்கள் தயாரிப்பு என்பவற்றில் தேசிய தொழில்சார் தகைமை (NVQ) மட்டத்தில் பாடநெறிகளை உள்ளடக்கும் வகையில் தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகங்கள் தமது பாடவிதானத்தினை விரிவாக்குவதற்கு நான் ஊக்கமளிக்கின்றேன்.

127.அதேவேளை ஆடைக் கைத்தொழில், சுகாதார பராமரிப்பு, மற்றும் நிர்மாணக் கைத்தொழில் போன்ற துறைகளில் திறமை பெற்ற ஊழியர்களுக்கான அவசரத் தேவையினை பூர்த்தி செய்வதற்கு, 10,000 இளைஞர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக தனியார் துறையினருக்கு அழைப்பு விடுக்கின்றேன். இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் இறுதியில் குறித்த கைத் தொழிலில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். தனியார் துறைக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் அரசாங்கம் மூன்று மாதங்களுக்கு மாதமொன்றுக்கு 10,000 ரூபாவினை ஒவ்வொரு பயிலுநருக்கும் உதவு தொகையாக வழங்கும். இதற்காக ரூபா 300 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

128.மாத்தறை ஜேர்மன் பயிற்சி தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் ஹோட்டல் பயிற்சி பாடசாலை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக ரூபா 200 மில்லியன்களை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

129.நாட்டில் ஒவ்வொரு நான்கு குடும்பங்களுக்கும் ஒரு கணனி சொந்தமாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு வீட்டுக்கும் பயிற்சி நெறிகளை தகவல் தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி பெற்றுக் கொடுக்க முடியுமென நான் நம்புகின்றேன்.இதற்காக களனிப் பல்கலைக்கழகத்தில் தேசிய இலத்திரனியற் கற்கை மூலவள நிலையமொன்றினை ஸ்தாபிப்பதற்கு முன்மொழிவதுடன் 2 வருட காலப் பகுதியில் ரூபா 125மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு விரும்புகின்றேன். இந்நிலையமானது தனியார் துறையினருடன் இணைந்து இலத்திரனியல் கற்றல் கையேடுகளை உருவாக்கும். இப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றுப்படுத்துதலுடன் மேற்கொள்ளப்படும். இந்நிகழ்ச்சித் திட்டம் நிறைவுற்றதுடன் இவ்வாறான பயிற்சி நிறுவகமொன்றிலிருந்து பெறப்பட்ட ஏதேனும் சிறந்த சான்றிதழினையொத்த சான்றிதழ் ஒன்று வழங்கப்படும்.

**சுகாதாரத் துறை**

130.சபாநாயகர் அவர்களே, சுகாதார சேவையினைச் சேர்ந்தவர்கள் மிகவும் குறைந்த வளங்களுடன் நெருக்கடிகளுக்கு மத்தியில் தமது சேவையினை வழங்கி வருவதுடன் பிரதான சுகாதார சுட்டிகளை அடைந்து கொள்வதில் உயர் வருமானம் பெறும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் சில வேளை எமது நாடு சிறந்த செயலாற்றுகையினைக் கொண்டுள்ளது என்பதனை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். யானைக்கால் நோய் மற்றும் மலேரியா போன்றவற்றினை இல்லா தொழிப்பதற்கான உலக சுகாதார நிறுவனத்தின் சான்றிதழினை பெற்றுக் கொள்ள முடியுமாகவிருந்தமையானது கடந்த பல வருடங்களாக சுகாதார சேவையினைச் சேர்ந்தவர்களினது அர்ப்பணிப்பு மற்றும் உயர் தொழில் தகைமை என்பவற்றினை எடுத்துக் காட்டுகின்றது.

131.மருந்துப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை தாங்கிக் கொள்ள முடியுமான குறைந்த விலைகளில் கிடைக்கச் செய்வதனை உறுதிப்படுத்துவதற்கு தேர்தல்களில் நாம் வாக்குறுதியளித்தது போன்று எமது அரசாங்கம் கடந்த வருடத்தில் தேசிய மருந்துப் பொருட்கள் ஒழுங்குபடுத்துகை அதிகார சபைச் சட்டத்தினை அறிமுகப் படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும். இதன் மூலம் 48 மருந்துப் பொருட்களுக்கான விலையினை அண்ணளவாக 40 சதவீதத்தினால் குறைப்பதற்கு முடியுமாகவுள்ளது. சுகாதாரத் துறைக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வரியினை ஒரு சில குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தபட்டமையினால் அரசாங்கத்திற்கு ரூபா 17,000 மில்லியன் வருமான இழப்பு ஏற்பட்டுள்ளதை கட்டாயமாக கூற வேண்டியுள்ளது. இது ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் பொது மக்கள் மீது தேவையற்ற சுமைகளை சுமத்துவது இல்லை. எமது அரசாங்கம் வாக்குறுதியளித்ததனை நிறைவேற்றக் கூடியது என்பதனை இது நிரூபித்துள்ளது.

132. நாட்டில் ஏற்படுகின்ற பெருமபாலான மரணங்களிற்கு தொற்றா நோய்கள் காரணமாக இருப்பதுடன் சனத்தொகை மற்றும் நோய் விபரவியலில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் நாம் புதிய சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். புதிய சவால்களை எதிர் கொள்கின்ற வகையில் எமது சுகாதார சேவை வழங்கல் முறைமையினை நாம் உறுதிப்படுத்த வேண்டுமென்பதுடன் மீள் ஒழுங்குபடுத்த வேண்டியுள்ளது என்பது தெளிவாகும். இந்த வகையில் சுகாதார பராமரிப்பு மறுசீரமைப்புகள் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதற்கான உயர்மட்டக் குழுவொன்றினை நியமிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன்.

சுகாதாரத்துறை மனிதவள தரமேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

133.ஏற்கனவே நான் குறிப்பிட்டது போன்று எமது நாட்டில் பலர் தொடர்ந்து மோசமான சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது வெறுமனே சுகாதார பிரச்சினையொன்றாக மாத்திரமன்றி சமூகப் பிரச்சினையொன்றாகவும் காணப்படுகின்றது.

சிறுநீரகநோய் தொடர்பான பிரச்சினைகளுக்கு சுகாதார அமைச்சுக்கு ஏற்கனவே ரூபா 2,225 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளதுடன்மேலும் 2017 இல் ரூபா 750 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

134. 2016 இல் ஏறக்குறைய ரூபா 23,147 மில்லியனை வைத்தியசாலைகளின் பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ஒதுக்கீடு செய்துள்ளோம். இதில் வெளிநோயாளர் வாட்டுகள், விபத்துச் சேவை வாட்டுகள், சத்திர சிகிச்சை கூடங்கள், ஆய்வுகூட கட்டடத் தொகுதிகள் மற்றும் உபகரணங்களைக் கொண்ட உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

2017 இலும் எமது சுகாதாரத் துறை உட்கட்டமைப்பில் நாம் தொடர்ந்து முதலீடு செய்யவுள்ளோம். இதற்காக நாம் ஏற்கனவே ரூபா 25,200 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ளோம்.

தெரிவு செய்யப்பட்ட மாகாண வைத்தியசாலைகளில் சிகிச்சைக் கழிவு முகாமைத்துவ முறைமையினை ஸ்தாபித்ததன் மூலம் நோயாளர் நலன்புரி சேவைகளை வலுப்படுத்துவதற்கு ரூபா 1,000 மில்லியனை நாம் ஏற்கனவே வழங்கியுள்ளோம்.

135.தாதியர் பயிற்சிக் கல்லூரியை மேம்படுத்துவதற்காக ரூபா 200 மில்லியனை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

136. சபாநாயகர் அவர்களே, ஆரோக்கியமானதும் துடிப்புமிக்கதுமான இளம் தலைமுறையினரை நாம் பெற்றிருத்தல் வேண்டும். தொற்றல்லா நோயானது வயோதிபர்களை மாத்திரமன்றி சிறுவர்களுக்கிடையிலும் காணப்படுவதை நான் நன்கறிவேன். அதேபோன்று தொற்றா நோய்களில் நீரிழிவு, புற்றுநோய், ஆஸ்துமா என்பனவும் பிரதானமாகும். பெரும்பாலான தொற்றாநோய்கள் அவை உரிய நேரத்தில் கண்டுபிடிக்கப்படுமாயின் அவற்றினை தடுப்பது, பராமரிப்பது அல்லது கட்டுப்படுத்துவது முடியுமானதொன்றாகும். இந்த வகையில், ஒவ்வொரு பாடசாலைத் தவணையிலும் நாட்டிலுள்ள ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் சுகாதார அதிகாரிகள் விஜயம் செய்வதனை உறுதிப்படுத்துவதற்கான செயன்முறையொன்றினை உருவாக்குவதற்கு சுகாதார அதிகாரிகளை கேட்டுக் கொள்கின்றேன். இந்நோக்கத்திற்காக ரூபா 50 மில்லியனை ஒதுக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

137.எனவே, நாட்டில் சிறுநீரக நோய் மற்றும் ஏனைய பிரதான தொற்றா நோய்கள் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு வசதியளிப்பதற்காக தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு ரூபா 100 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

138.கொழும்பிலுள்ள சீமாட்டி றிஜ்வே வைத்தியசாலை மற்றும் கண்டியிலுள்ள சிறிமாவோ பண்டாரநாயக்க சிறுவர் வைத்தியசாலை ஆகிய சிறுவர்களுக்கான விசேட வைத்தியசாலைகள் இரண்டு மாத்திரமே இலங்கையில் காணப்படுகின்றன. இலங்கையில் பிறக்கும் ஒவ்வொரு 1,000 குழந்தைகளிலும் 9.9 குழந்தைகள் தமது 5 ஆவது பிறந்த தினத்தினை கொண்டாடுவதற்கு முன்னரே இறந்து விடுகின்றனர். மிலேனிய அபிவிருத்தி இலக்குக்கு அமைவாக ஐந்து வயதுக்குக் குறைந்த சிறுவர் இறப்பு வீதமானது 1,000 இற்கு 4 ஆக காணப்பட்டதுடன் நிலையான அபிவிருத்தி இலக்கானது ஐந்து வயதுக்குக் குறைந்த சிறுவர்களின் இறப்பு வீதத்தினை பூச்சிய வீதமாக மாற்றியமைக்கும். நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான எமது அர்ப்பணிப்பினை வழங்கும் வகையில் கராப்பிட்டிய, அம்பாறை மற்றும் யாழ்ப்பாணம் வைத்தியசாலைகளில் விசேட சிறுவர் பராமரிப்பு தொகுதிகளை ஸ்தாபிப்பதற்கு ரூபா 1,000 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன். நிந்தவூரில் ஆதார வைத்தியசாலையினை ஸ்தாபிப்பதற்கு நான் முன்மொழிவதுடன் அதற்காக ரூபா 200 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் வாய்வழி சுகாதார தொகுதியொன்றினை உருவாக்குவதற்காக ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கும் நான் முன்மொழிகின்றேன்.

139.காசல் வீதி மகப்பேற்று வைத்தியசாலையை நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் நாம் 2017 ஆம் ஆண்டில் மேம்படுத்துவோம். நாட்டிலுள்ள இலவச சுகாதார வைத்தியத்துறை வசதிகள் அரச தனியார் பங்குடைமை முறையின் கீழ் ரூபா 3,000 மில்லியன் செலவில் அபிவிருத்தி செய்யப்படும்.

140.தலசீமியா, லிம்போமா, லிவ்கேமியா மற்றும் ஏனைய அவ்வாறான நோய்களை கட்டுப்படுத்துவதற்கு கண்டி வைத்தியசாலையில் எலும்பு மச்சை மாற்றுச் சிகிச்சை அலகொன்றினை ஸதாபிபபதற்கு ரூபா 500 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு நான் முன்மொழிகின்றேன்.

141.சுகாதார நலன்புரி சேவையில் தகவல் தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவது கட்டாயமானதாகும்.

எனவே, தொலை மருத்துவ நிகழ்ச்சித் திட்டமொன்றினை அபிவிருத்தி செய்வதற்கு தகவல் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து தெரிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்தது 5 ஆதார வைத்தியசாலைகளை நான் ஊக்குவிக்கவுள்ளேன்.

142.கிராமிய மட்டத்தில் பொது சுகாதார முறைமையை உறுதிப்படுத்தும் நோக்கில் பொதுச் சுகாதார தாதிகளை நாம் தேவைக்கேற்றவாறு வேலைக்கமர்த்துவோம்.

143.வரவு செலவுத்திட்டத் தயாரிப்பின் போது இடம்பெற்ற எனது கலந்துரையாடல்களின் போது நாட்டில் தற்பொழுது போதுமான எண்ணிக்கையில் சுகாதார மற்றும் போசணை நிபுணர்கள் இல்லையென்பதை அறிந்து ஆச்சரியமடைந்தேன்.

அடுத்த மூன்று வருடங்களுக்குள் சுகாதார மற்றும் போசாக்கு பணியாளர்களின் எண்ணிக்கையினை 300ஆக அதிகரிப்பதற்கு நான் முன்மொழிவதுடன் அதற்காக ரூபா 50 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.

144.அரசாங்க வைத்தியசாலைகளில் தனியார் துறையுடன் இணைந்து கட்டணம் செலுத்துகின்ற வாட்டுகளை ஸ்தாபிப்பதற்கு முன்மொழிவதுடன் அரசாங்க வைத்தியசாலைகளில் மருத்துவ பரிசோதனை ஆய்வுகூடங்களை ஸ்தாபிப்பதற்கும் தனியார் துறைக்கு அழைப்பு விடுக்கின்றேன்.

(தொடரும்)

கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்!
*~ சுபாஷ் சந்திரபோஸ்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஈழத் தமிழர்களோடு இனி நாவலர் பெருமான் வாழ்வார்

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை தினம் இன்றாகும். ஈழத்தில் சைவமும் தமிழும் வாழ்வதற்காகத் தன்னை அர்ப்பணித்த பெருந்தகை அவர்.

நாவலர் பெருமான் இல்லாதிருந்திருந்தால் அந்நியராட்சியால் நம் மண்ணில் தமிழும் சைவமும் புதையுண்டு போயிருக்கும்.

அந்தளவுக்கு அந்நியராட்சியில் எங்கள் தமிழும் சைவமும் பெரும் அவலத்துக்குள் சிக்கியிருந்தன.

இந்நேரத்தில்தான் ஆறுமுகநாவலர் எழுந்தார். சமயப் பிரசாரத்தை மேற்கொண்டார். அந்நியர்களின் மதமாற்றக் கொடூரத்தை வன்மையாகக் கண்டித்தார்.

அதேவேளை எத்தகைய முறைகளினூடாக அந்நியர்கள் நம் மக்களை மதமாற்றம் செய்கின்றனர் என்பதை ஆய்ந்தறிந்த நாவலர் திண்ணைப் பள்ளிக்கூடங்களை ஆரம்பித்ததுடன் பசிபோக்க கஞ்சி கொடுக்கும் அறத்தையும் நடைமுறைப்படுத்தினார்.

காலம் உணர்ந்து, மக்களின் தேவை உணர்ந்து அதற்கேற்றாற்போல் திட்டம்தீட்டி அதனை அமுலாக்கி சைவத்தையும் தமிழையும் காப்பாற்றிய ஆறுமுகநாவலர் பெருமானார் எங்கள் இனத்தின் காவலனாக விளங்கினார்.

மதமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கைக்கு வந்த அந்நியர்கள் சிவத் தமிழர்களாக இருந்த ஈழத் தமிழர்களைத் தம் மதம் மாற்ற பெரு நடவடிக்கைகள் எடுத்தனர்.

தமக்கு இருக்கக்கூடியதான ஆட்சி அதிகாரத்தையும் அடக்குமுறைத் திமிர்த்தனத்தையும் ஆயுதங்களாகக் கொண்டு சைவத் தமிழர்களை மதமாற்றம் செய்யும் பொருட்டு ஆங்கிலக் கல்வி மோகத்தையும் அரச உத்தியோகத்தையும் ஆசைப் பொருளாக்கி தங்கள் நோக்கத்தை நிறைவேற்றத் தலைப்பட்டனர்.

இந்த இடத்தில்தான் ஆறுமுகநாவலரின் கல்விச் சிந்தனை களமிறங்குகிறது. வறுமை போக்க கஞ்சித் தொட்டி அமைக்கும் திட்டம் அரங்கேறுகிறது. அவரின் நாவன்மை மேடையேறி தமிழ் மக்களை விழிப்படையச் செய்கிறது.

தனி ஒரு நாவலரின் சைவத் தமிழ்ப் பற்றுத்தான் இன்று நாம் தமிழர்களாக இருப்பதற்கு வழிவகுத்தது.

யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய ஆறுமுகநாவலர் வெஸ்லியன் திருச்சபை ஆரம்பித்த அக்கல்லூரியில் சைவ ஆசாரத்தோடு, அனுட்டானத்தோடு கல்வி கற்பித்தார் என்றால் அதனை எவரும் சாதாரணமாக எண்ணிவிட முடியாது.

அந்நியராட்சியும் வெஸ்லியன் திருச்சபையின் மேலாதிக்கமும் இருக்கின்ற இடத்தில் கழுத்தில் உருத்திராட்சம்; உடலில் திருநீற்றுக் குறிகள் ஒட்டு மொத்தத்தில் சிவப் பொலிவு. கூடவே மொழியாற்றல், ஆளுமைத் திறன், யார்க்கும் அஞ்சாத நிமிர்ந்த ஞானச்செருக்கு. இவற்றின்மிடுக்கோடு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஆறுமுகநாவலரின் கல்விப் பணி தொடர்கிறது.

இங்குதான் நாவலரின் நேர்மையை பேர்சிவல் பாதிரியார் அறிந்து கொள்கிறார். ஆங்கிலக் கல்விக்காகவும் அரச தொழிலுக்காகவும் மதம் மாறியவர்களைவிட தன் பிறவிச் சமயத்தையும் தன் தாய் மொழியையும் நேசிக்கும் ஆறுமுகநாவலரே ஈழத்துமண்ணின் உத்தமன் என்ற உண்மையை அவர் உணர்கிறார்.

அதனால்தான் புனித விவிலியத்தை தமிழில் மொழிபெயர்த்துத் தரும்படி ஆறுமுகநாவலரிடம் பேர்சிவல் பாதிரியார் விண்ணப்பம் செய்கிறார்.

அந்த விண்ணப்பத்தை நாவலரும் நிறைவேற்றிக் கொடுக்கிறார். இந்த அற்புதம் நடந்த இந்த மண்ணில் இன்றும் சில பாடசாலைகளில் சரஸ்வதி பூசை நடத்துவதற்கும் சைவப் பண்பாட்டுக்கும் தடை விதிப்பு நடக்கிறது என்பதை எண்ணும்போது நெஞ்சம் அடைத்துப் போகிறது.

வெளிநாட்டில் இருந்து வந்த பேர்சிவல் பாதிரியார் நாவலருக்குக் கொடுத்த மதிப்பை சைவத் தமிழ்ப் பரம்பரையில் வந்தவர்கள் செய்ய மறந்தனரோ என்று எண்ண, சிந்தை குலைகிறது.

பரவாயில்லை இந்து கலாசாரத் திணைக்களத்தின் பெரு முயற்சியில் நாவலர் மாநாடு நடக்கிறது. இந்த மாநாடு நாவலர் பெருமானை நம்மோடு வாழவைக்கும்

இந்த மாநாட்டை ஏற்பாடு செய்த இந்து கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் உமாமகேஸ்வரன் நாவலரை மீண்டும் நல்லூருக்கு அழைத்து வந்த சாதனையாளராக நாம் பதிவு செய்ய முடியும்.

# நாவலர் பெருமானின் நீதியைத் துதித்த பண்டிதமணி

நல்லை நகர் நாவலர் பெருமான்1822ஆம்ஆண்டு அவதரித்து 1879 ஆம் ஆண்டு சிவபதம் எய்தினார்.

அந்நியர் ஆட்சிக் காலத்தில் சைவத்துக்கும் தமிழுக்கும் அரும் பெரும் தொண்டாற்றி 19 ஆம் நூற்றாண்டை தமதாக்கி கொண்டவர்.

தென்மராட்சியில் மட்டுவிலில் பிறந்த பண்டிதமணி அவர்கள். நாவலர் தர்மத்திலும் நாவலர் நீதியிலும் வளர்ந்தவர்.

ஆறுமுக நாவலரின் அருமை பெருமைகளை மறைத்தும் இருட்டடிப்புச் செய்தோரை எதிர்த்து அஞ்சா நெஞ்சினராக திறந்த மனத்துடன் பேசியும் எழுதியும் வந் தார் .

இதனால் பண்டிதமணியை **கண்டனகாரர்** என முத்திரை குத்தப்பட்டார். நாவலருக்கு எதிரான செயற்பாடுகளுக்கு போர்க் கொடி காட்டத் தவறியதில்லை.

நாவலரின் அருமை பெருமைகளை எடுத்து இயம்பும் முகமாக நாவலர், ஆறுமுக நாவலர், நாவலரும் கோயிலும் போன்ற பல நூல்களை எழுதிப் பதிப்பித்துள்ளார். நாவலரின் சைவப் பணிகள் திருக்கோவில் பணிகள், கல்விப் பணிகள், கோயில் சீர்திருத்தப் பணிகள், கஞ்சித் தொட்டித் தருமம் போன்றவை முக்கியத்துவம் பெற்றவையாகும்.

பண்டிதமணியின் ஆறுமுகநாவலர் என்ற கட்டுரைத் தொகுப்பு நூலை பண்டிதமணி அவர்களின் தென்மராட்சி பாராட்டு விழாச் சபை 1979 இல் வெளியிட்டது.

நாவலரின் நூற்றாண்டு நினைவை நினைவுகூர செயலாளராக பணி புரிந்த கொடிகாமம் பண்டிதர் பொ. கந்தையனாரின் பெரு முயற்சியின் பேறாகும்.

இந் நூலில் இடம்பெற்ற 27 கட்டுரைகளும் நாவலரை எமக்கு படம் பிடித்து காட்டுவனவாக அமைந்தவை. நாவலர் அவர்களுக்கு இனியும் இங்கே இடமுண்டா? , உத்தோமத்த உத்தமன், நாவலர் எழுந்தார். அந்த மகானுக்கு வணக்கம், கடவுள் உண்டு என்ற சிலை பவனி வருகிறது என்பன உயிர்த் துடிப்பானவை. இவை நாவலர் மேற்கொண்ட பற்றும் பித்தும் காரணமாகவே எழுதப்பட்டவையாகும். இவற்றை இன்றைய சைவத் தமிழ் உலகம் திரும்பத் திரும்ப எழுத்தெண்ணிக் கற்க வேண்டியவையே ஆகும்.

மேலும் பண்டிதமணி கந்தபுராணத்தின் அருமை பெருமைகளை வெளிப்படுத்த **கந்தபுராணக் கலாசாரம்** என்ற நூலை 1959 ஆம் ஆண்டு எழுதினார்.

இந்நூலில் இடம்பெற்ற 10 கட்டுரைகளில் நாவலர் வழிவந்த **காசிவாசி செந்திநாத ஐயா, கண்ணூறு** என்பன நம்மை சிந்திக்க வைத்துள்ளன.

நம் நாவலருக்கு திருவாவடுதுறை ஆதீனம் நாவலர் என்ற பட்டத்தை வழியமை, வாழ்த்தியமை பற்றி சிறப்புற காட்டியுள்ளார் பண்டிதமணி.

சீர்திருத்தவாதியாகிய நாவலரின் பன்முகப் பணிகள் உலகளாவியது.

சைவாலய பரிபாலனம் பற்றி சிந்தித்த இவர் மானிப்பாய் மருதடி தொடக்கம் சிதம்பரம் வரை நிர்வாகச் சீர்கேடுகளைக் கண்டித்து நடுவன் என்றும் சைவன் என்றும் பத்திரிகைகள் மூலமாக விளக்கம் கேட்டார்.

கோயிற் புராணத்துக்கு உரை செய்தார். யாழ்ப்பாணச் சமயநிலை என்ற புத்தகம் எழுதியுள்ளார்.

இன்று முன்னவனார் திருக்கோவில்கள் முட்டுறுகின்ற பரிதாப நிலை கண்டு துன்புறுகின்றோம். சிவன் கோவில் திருவீதிகள் தெரு வீதிகளாக காட்சி கொடுக்கின்றன. சிவவழிபாடு வாழ்க்கையின் ஜீவநாடி . இன்று வைதீக சைவத்தின் வழிகாட்டியாகவுள்ள நாவலர் பெருமைகளைச் சிந்திப்போமாக.

**கா.சிவபாலன்**

# சபரிமலையுடன் தொடர்புடைய வார்த்தைகளும் விளக்கங்களும்



சபரிமலை செல்லும் பக்தர்களின் வசதிக்காக ஐயப்பன் கோயில் தொடர்புடைய வார்த்தைகளும் அதற்கான விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளன.

**ஐயப்ப மந்திரம்:** ஒவ்வொரு ஆண்டும் மேல்சாந்தி பதவி ஏற்கும் போது தந்திரி சொல்லிக் கொடுக்கும் மந்திரம்.

**ஐயப்பன் பாட்டு அல்லது ஐயப்பன் விளக்கு:** முதன்முறையாக சபரி மலை செல்லும் கன்னி ஐயப்பன்மார் நடத்தும் முக்கிய சடங்குகளில் ஒன்று.

**அம்பலாப்புழா சங்கம்:** மகரவிளக்கு விழாவுக்கு முன்னோடியாக எருமேலியில் பேட்டை துள்ளலை தொடங்கும் குழு.

**ஆழிபூஜை:** மண்டல பூஜைக்கு சபரி மலை செல்லும் பக்தர்கள் இரவில் நடத்தும் பூஜை.

**இடைத்தாவளம்:** காட்டுப் பகுதியில் பயணம் செய்யும் பக்தர்கள் தங்குமிடம்.

**உரக்குழி தீர்த்தம்:** சபரி மலை சந்நிதானத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் உள்ள அருவி.

**உதயாஸ்தமன பூஜை:** சபரிமலையில் காலை முதல் இரவு நடை அடைக்கும் வரை நடத்தப்படும் பூஜைகள்.

**கருப்பசாமி:** ஐயப்பனின் படை பரிவாரங்களில் ஒருவர் 18 ஆம் படி அருகே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.

**களபாபிஷேகம்:** ஐயப்பனுக்கு நடத்தப்படும் மிக முக்கிய அபிஷேகங்களில் ஒன்று. தைமாதத்தில் பந்தளம் மன்னர் முன்னிலையில் நடைபெறும். களபம் என்றால் சந்தனம்.

**கொச்சுகடுத்தா:** ஐயப்பனின் படை பரிவாரங்களில் ஒருவர்.

**தங்க அங்கி:** மண்டல பூஜை தினத்தில் பகவான் ஐயப்பனுக்கு அணிவிக்கப்படுகிறது.

**தாழமண்:** சபரி மலையில் பூஜா கர்மங்களுக்கு தலைமை வகிக்கும் தந்திரிகளின் குடும்பம்.

**திருவாபரணம்:** சபரி மலையில் மகரவிளக்கு தினத்தில் பகவான் ஐயப்பனுக்கு அணிவிக்கும் ஆபரணம். இது பந்தளம் மன்னர் ஐயப்பனுக்கு கொடுத்ததாகும்.

**நாயாட்டு விளி:** 18 ஆம் படிக்கு கீழே திருவிழா காலங்களில் தர்மசாஸ்தாவின் கதையைப் பாடும் நிகழ்ச்சி.

**நீலிமலை:** சபரிமலை பயணத்தில் பம்பை நதியை கடந்ததும் தெரியும் மலை.

**நெய் தேங்காய்:** ஐயப்பனுக்கு அபிஷேகம் செய்வதற்காக பக்தர் நெய் அடைத்து செல்லும் தேங்காய்.

**நெய்யபிஷேகம்:** சபரி மலையில் முக்கிய வழிபாடு. இது தினமும் உச்ச (மதிய) பூஜை வரை நடக்கும்.

**பதினெட்டாம்படி:** 18 மலை தேவதைகளை பூஜித்து கட்டப்பட்டுள்ள மலை.

**பம்பை சத்ய:** மகர விளக்கு முன்னோடியாக பம்பையில் பக்தர்கள் நடத்தும் விருந்து வழிபாடு.

**பம்பை விளக்கு:** பம்பை சத்ய முடிந்த அன்று மாலையில் பக்தர்கள் ஆடிப்பாடி பம்பை ஆற்றில் விளக்குகளுடன் தெப்பம் மிதக்கவிடும் நிகழ்ச்சி.

**பறக்கொட்டிப் பாட்டு:** பக்தர்களுக்கு சனி தோஷம் போக்க மாளிகைப்புறம் அம்மன் சந்நிதியில் உடுக்குக் கொட்டி பாடி நடத்தப்படும் வழிபாடு.

**பாண்டித்தாவளம்:** மாளிகைப்புறம் சமீபம் மரு நாட்டில் இருந்து வரும் பக்தர்கள் தங்கும் இடம்.

**புறப்படா சாந்தி:** சபரி மலை மேல் சாந்தியின் மறு பெயர். இவர் பதவி வகிக்கும் ஒரு ஆண்டு காலத்தில் வீட்டுக்குச் செல்லாமல் இருப்பதன் பெயர்.

**பூங்காவனம்:** சபரி மலை கோயிலும் அதைச்சுற்றியுள்ள இடத்தையும் அழைக்கும் பெயர்.

**பெருநாடு:** சபரி மலை அல்லாமல் ஐயப்பனின் திருவாபரணம் அணிவிக்கும் ஒரே கோயில் இருக்கும் ஊர்.

**பொன்னம்பலமேடு:** மகர சங்கரம தினத்தில் மகர ஜோதி தெரியும் இடம்.

**மகரசங்கரம பூஜை:** சூரியன் தனுசு இராசியிலிருந்து மகர இராசிக்கு கடக்கும் நேரத்தில் நடத்தப்படும் பூஜை பொங்கலை ஒட்டி நடத்தப்படும்.

**மகரவிளக்கு:** மகர சங்கரம நாளில் பொன்னம்பல மேட்டில் தெரியும் ஜோதி.

**மாளிகைப்புறம்:** சபரி மலை செல்லும் பெண் குழந்தைகளையும் 50 வயதிற்கு மேற்பட்ட பெண்களையும் அழைக்கும் பெயர்.

**மாளிகைப்புறத்தம்மன்:** ஐயப்பனுக்குதிருமண மாலை சூட கன்னி ஐயப்பன்மார் வராத காலத்தை எதிர்நோக்கிக் காத்திருக்கும் தேவி. இவளுக்கு ஐயப்பன் கோயிலை அடுத்துள்ள இடத்தில் தனிக் கோயில் உள்ளது. தனிமேல் சாந்தி இக்கோயிலுக்கு பூஜை செய்ய ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**சபரிபீடம்:** சபரி மலையின் பெயருக்கு காரணமாக சபரி என்ற மூதாட்டி தவம் செய்த இடம். இவள் இராமனின் தரிசனம் பெற்றவள்.

**சரகுத்தி:**கன்னி ஐயப்ப பக்தர்கள் தாங்கள் கொண்டு வரும் சரக்கோலை குத்தும் இடம்.

**ஹோமகுண்டம்:**பக்தர்கள் கொண்டு வரும் நெய் தேங்காயில் ஒரு மூடியை எறியும் இடம்.

**ஹரிவ்ராசனம்:** பகவான் ஐயப்பனை இரவில் தூங்க வைக்கப் பாடும் இடம்.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து 6.30 மணி வரை **யாழ்.பிரதேசத்தில்** பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** தெற்கிலுப்பைக்குளம் கிராமம், பெரியார்குளம், பூந்தோட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2016

"ஒவ்வொரு மரம் நடப்படும் போதும் சமாதானத்துக்கான விதை ஊன்றப்படுகிறது"

*–வங்காரி மாதாய் (அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)*

# பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டி; நியூசிலாந்து எட்டு விக்கெட்டால் வெற்றி







பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது, நியூசிலாந்து-பாகிஸ்தான் அணிகள் மோதிய முதல் டெஸ்ட் போட்டி கிறிஸ்ட்சர்ச் நகரில் நடந்தது. பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 133 ஓட்டங்களில் சுருண்டது. நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 200 ஓட்டங்களில்ஓல் அவுட் ஆனது. 67 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்சை விளையாடிய பாகிஸ்தான் 3 ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 129 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

நேற்று 4 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து விளையாடியது. அந்த அணி 78.4 ஓவர்களில் 171 ஓட்டங்களில் ஓல் அவுட் ஆனது. இதனால் நியூசிலாந்து அணிக்கு 105 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

பாகிஸ்தான் தரப்பில் சோகைல் கான் அதிகபட்சமாக 40 ஓட்டங்கள் எடுத்தார். வாக்னர், போல்ட் தலா -3 விக்கெட் வீழ்த்தினர்.

105 ஓட்டங்கள் எடுத்ததால் வெற்றி என்ற நிலையில் நியூசிலாந்து 2 ஆவது இன்னிங்சை விளையாடியது. தொடக்க வீரர் வாதம் 9 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். 2 ஆவது விக்கெட்டான ராவல்- வில்லியம்சன் ஜோடி சிறப்பாக விளையாடி அணியை வெற்றி பெற வைத்தது.

நியூசிலாந்து அணி 31.3 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 108 ஓட்டங்கள் எடுத்தது. 8 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. வில்லியம்சன் 66 ஓட்டங்களும், ராவல் 36 ஓட்டங்களும் (அவுட் இல்லை) எடுத்தனர்.

இந்த வெற்றி மூலம் 2 போட்டி கொண்ட தொடரில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இரு அணிகள் மோதும் 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் எதிர்வரும் 25 ஆம் திகதி ஹோமில்டனில் தொடங்குகிறது. (க)

## சம்பியன்ஸ்லீக் சுப்பர் 8 போட்டிகள் கனமழை காரணமாக இரத்தானது



இலங்கையில் நடைபெற்று வரும் மிகப்பெரிய காற்பந்து சுற்றுத் தொடரான டயலொக் சம்பியன்ஸ் லீக்கின் சுப்பர் 8 சுற்றுப் போட்டிகள் கனமழை காரணமாக மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

டயலொக் சம்பியன்ஸ் லீக் சுற்றுத் தொடரின் முதல் சுற்றுப் போட்டிகள் நிறைவடைந்தது.

இதனை தொடர்ந்து சுப்பர் 8 சுற்று போட்டிகள கடந்த செப்டெம்பர் முதல் வாரத் தில் நடைபெறுவதாக இருந்தது.

பின்னர் இலங்கை தேசிய காற்பந்து அணி சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்காக அது நவம்பர் 19 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதன்படி நடைபெற இருந்த போட்டிகள் கொழும்பு மற்றும் கொழும்பை அண்டிய பகுதிகளில் பெய்து வரும் கனமழை காரணமாக மறுதிகதிகள் குறிப்பிடப்படாமல் மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் நாளை இராணுவப் படை மற்றும் கடற் படை அணிகளுக்கு இடையிலான போட்டி இரத்து செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## ஏடிபி உலக டூர் பைனல்ஸ் டென்னிஸ் தொடர்; ஜோகோவிச்,நிஷிகோரி அரையிறுதியில் மோதல்

ஏடிபி உலக டூர் பைனல்ஸ் டென்னிஸ் தொடரின் அரை இறுதியில் சேர்பியாவின் நோவாக் ஜோகோவிச்சுடன் ஜப்பான் வீரர் கெய் நிஷிகோரி மோதுகிறார்.

லண்டன் O2 அரங்கில் நடைபெற்று வரும் இந்த தொடரில், ஒற்றையர் ஆட்டங்களில் டொப் 8 வீரர்கள் இரு பிரிவுகளாக ரவுண்ட் ராபின் லீக் சுற்றில் மோதினர். ஜான் மெக்கன்ரோ பிரிவில் இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே 3 போட்டியிலும் வென்று முதலிடம் பிடித்து அரை இறுதிக்கு தகுதி பெற்றார். வாவ்ரிங்கா (சுவிஸ்), நிஷிகோரி, மரின் சிலிச் (குரோஷியா) ஆகியோர் தலா 1 வெற்றி, 2 தோல்வி கண்டனர். மூவரும் சமநிலை வகித்ததால், ஒவ்வொரு செட்டிலும் வென்ற கேம்களின் சராசரி அடிப்படையில் முன்னிலை வகித்த நிஷிகோரி 2 ஆவது இடம் பிடித்து அரை இறுதிக்கு முன்னேறினார்.

இவான் லெண்டில் பிரிவில் ஜோகோவிச் 3 வெற்றிகளுடன் முதலிடம் பிடித்தார். கனடா வீரர் மிலோஸ் ரயோனிச் 2வது இடம் பிடித்தார் (2 வெற்றி, 1 தோல்வி). இதையடுத்து முதலாவது அரை இறுதியில் ஆன்டி முர்ரே (1) - மிலோஸ் ரயோனிச் (4), 2வது அரை இறுதியில் நோவாக் ஜோகோவிச் (2), கெய் நிஷிகோரி (5) மோதுகின்றனர். இரட்டையர் பிரிவில் நடந்த முதலாவது அரை இறுதியில் அமெரிக்காவின் பாப் பிரையன் - மைக் பிரையன் ஜோடி 6-7 (2-7), 4-6 என்ற நேர் செட்களில் ஹென்றி கோன்டினன் - ஜான் பியர்ஸ் ஜோடியிடம் அதிர்ச்சி தோல்வி அடைந்தது. (க)



## உலக டென்னிஸ் சம்பியன்ஷிப்; அரையிறுதியில் ஆன்டி முர்ரே

டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் ஆன்டி முர்ரே தனது கடைசி லீக்கில் வாவ்ரிங்காவை தோற்கடித்து 3-வது வெற்றியுடன் அரையிறுதிக்கு முன்னேறினார்.

டொப்-8 வீரர்கள் மட்டுமே பங்கேற்றுள்ள உலக டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டி லண்டனில் நடந்து வருகிறது. இதில் ஒலிம்பிக் சம்பியன் ஆன்டி முர்ரே தனது கடைசி லீக்கில் 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வாவ்ரிங்காவை (சுவிட்சர்லாந்து) தோற்கடித்து 3 ஆவது வெற்றியுடன் அரை இறுதிக்கு முன்னேறினார்.



மற்றொரு பிரிவில் கனடாவின் மிலோஸ் ராவ்னிக் 7-6 (7-5), 6-3 என்ற நேர் செட்டில் டொமினிக் திம்மை (ஆஸ்திரியா) வீழ்த்தி 2 ஆவது வெற்றியுடன் அரையிறுதியை உறுதி செய்தார். இந்த பிரிவில் ஏற்கனவே ஜோகோவிச்சும் (சேர் பியா) அரை இறுதிக்கு தகுதி பெற்று விட்டார். (க)

# ரிசானாவுக்கு ஏற்பட்ட அவலநிலை இனிமேல் எவருக்கும் ஏற்படக்கூடாது

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் உருக்கம்



(கொழும்பு)

பயிற்சி பெறாத எவரும் இனிமேல் வெளிநாடு செல்ல அனுமதிக்கப்பட மாட்டர்கள். ரிசானா நபீக்கிற்கு ஏற்பட்ட நிலைமை இனிமேல் எவருக்கும் ஏற்படக் கூடாது என வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

வெளிநாடுகளில் தொழில் புரியும் நபர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் நேற்றுக் காலை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது, பிரதம விருந்தினராக

கலந்து கொண்டு பேசிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்திலுள்ள மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த வெளிநாடுகளில் தொழில் புரிவோரின் பிள்ளைகள் 643 பேருக்கு புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

சுமார் 2 கோடி 45 இலட்சம் ரூபாய் புலமைப்பரிசிலாக வழங்கப்பட்டது..

இந்நிகழ்வில் தொடர்ந்தும் பேசிய அமைச்சர், இந்த நாட்டில்காலம் காலமாக புரையோடிப் போயிருந்த இனவாதம் ஜனாதிபதி மைத்திரிபால மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் நல்லாட்சியில் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (இ-7)

# சீரற்ற காலநிலையுடன்...

சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள காரணத்தால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இதில் கிளிநொச்சி மாவட்டமே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அறியக்கிடைத்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்புக் காரணமாக இலங்கையில் சில தினங்களுக்கு சீரற்ற காலநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் நாட்டின் பல பகுதிகளில் நேற்று மற்றும் நேற்று முன்தினமும் சராசரியாக 100 மில்லி மீற்றருக்கும் அதிகமான கன மழை பெய்துள்ள நிலையில் இன்றும் அதே நிலைமை நீடிக்கும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்கு, தெற்கு, சப்ரமுவ, மத்திய, ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் கடும் காற்றுடன் கூடிய கனமழை இன்றையதினமும் பெய்யக் கூடும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நேற்றைய தினம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பகல் வேளை நீடித்த தொடர் மழை மாலை நேரம இடியுடன் கூடிய கடும் மழையாக கொட்டித் தீர்த்துள்ளது.

இதனால் தாழ்வுப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பலர் இடம்பெயர நேரிட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-9)

# அரசியல் தீர்வைப் பெறுவதற்கு...

தீர்க்கும் வகையில் புதிய அரசியல் சாசனத்தை உருவாக்கும் சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது.

சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் பல சந்தர்ப்பங்களை நாங்கள் இழந்துள்ளோம். கண்டிய சிங்களவர்கள் சமஷ்டி ஆட்சியை கொண்டுவந்த போது அதனை நாங்கள் ஆதரிக்கவில்லை.

சந்திரிகாவின் காலத்தில் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது, ஆனால் துரதிர்ஷ்ட வசமாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவரிடம் இருக்கவில்லை.

அதனால் அதுவும் நழுவி கொண்டது. 2002 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது ஒஸ்லோ பிரகடனம் செய்யப்பட்டது.

அதில் உள்ளக சுயநிர்ணயம் அடிப்படையில் தமிழ் மக்கள் சமஷ்டி அடிப்படையிலான தீர்வை ஆராய்வது என பிரகடனம் வெளியிடப்பட்டது.ஆனால் அது ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அதன் பின்னர் மகிந்தவின் காலத்தில் தீர்வு விடயத்தில் பேச்சுக்களில் ஈடுபட்ட போதும் முன்னேற்றகரமாக எதுவும் நடைபெறவில்லை.

எம்மை பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கும் அழைத்து எம்மை ஏமாற்ற முயன்றார். ஆனால் அது நடைபெறவில்லை. தற்போது நீண்ட காலத்திற்கு பின்னர் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. தற்போது எல்லாம் நடைபெற்றுவிட்டது என கூற முடியாது. அதே போன்று ஒன்றும் நடக்கவில்லை என்றும் கூற முடியாது.

தீர்வு விடயத்தில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உறுதியுடன் செயற்பட்டு வருகின்றனர். அரசியலமைப்பு நடவடிக்கை குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் டிசம்பர் மாதம் பத்தாம் தகதி சமர்ப்பிக்கப்படலாம் என நாம நம்புகின்றோம். இந்த அறிக்கைகளின் பின்னர் ஒரு விவாதம் நடைபெறும். இந்த கருமங்களில் எமது மக்களும் பங்கு கொள்ள வேண்டும். அனைவரது கருத்துக்களையும் நாம் ஏற்றுக்கொள்வோம். யாரையும் உதாசீனம் செய்ய மாட்டோம். உலக நாடுகளில் அரசியல் தீர்வு தொடர்பில் பல்வேறு எடுத்துக் காட்டுகள் உள்ளன.

ஐக்கிய இராச்சியத்தில் ஒற்றையாட்சி இருந்து பின்னரே அதிகார பரவலாக்கம்ஏற்பட்டது. இதே போன்று பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன.

இதில் நாங்களும் வெற்றி பெற வேண்டுமானால் நம்பிக்கையுடன் நிதானமாக செயற்பட வேண்டும். நாங்கள் ஏமாற்றப்பட்டோம் இனியும் ஏமாற்றப்படுவோம் என செயற்பட முடியாது.

அரசியல் தீர்வு என்பது தமிழர்களுக்கு மாத்திரமல்ல; இந்த நாடு பொருளாதார ரீதியில் முன்னேறி செல்ல சிங்கள மக்களுக்கும் அத்தியாவசியமானது. ஐ.நா தீர்மான பிடியிலிருந்து இலங்கை விடுபடுவதற்கும் நிரந்தர தீர்வு ஒன்று ஏற்பட வேண்டும்.

எனினும் ஐ.நா தீர்மானத்தின் படி உண்மைகள் கண்டறியப்பட வேணடும். அவை மீள நிகழாதிருப்ப உறுதிப்படுத்தப்பட வேண்டும். இவை எல்லாவற்றையும் நாங்கள் ஒன்றுபட்டு செயற்படுத்த வேண்டும். எமக்குள்ளே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம்.

ஆனால் மக்களுடைய விடயங்களில் நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து செயற்பட வேண்டும். அதுவே ரவிராஜ் போன்றவர்களுக்கு நாம் செய்யும் கௌரவமாகும் என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சமபநதன (செ-4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மாவீரர் நினைவு வாரம்...

நினைவு கூரமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் தினம் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுபபிள்ளை பிரபாகரனால் பிரகடனப்படுத்தப்பட்ட சம்பவமாகும். ஒரு நாள் அதி காலை யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள ஒரு வீட்டைச் சுற்றிச் சிங்கள இராணுவம் முற்றுகையிடுகிறது. 1982ம் ஆண்டு அக்டோபர் மாதம் சாவகச்சேரியில் பொலிஸ் நிலையத்தைத் தாக்கிய போது காயமடைந்த விடுதலைப் புலிகளுக்கு அந்த வீட்டில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டதாகத் தகவல கிடைத்ததைத்தொடர்ந்தே இராணுவத்தினரால் அந்த வீடு முற்றுகையிடப்பட்டது.

அவ் வேளையில் அங்கிருந்த ஒரு இளைஞன் முற்றுகையிட்டவர்களை நோக்கி தான் வைத்திருந்த கைத்துப்பாக்கியால் சுட்டவாறே வீட்டுமதிலைத் தாண்டிக் குதித்து ஓடுகிறான். அவனை நோக்கிச் சிங்கள இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டுக்கள் சரமாரியாகத் தீர்க்கப் படுகின்றன. அப்போது அந்த இளைஞனின் வயிற்றில் ஒரு குண்டு பாய்கிறது.

படுகாயமுற்ற நிலையிலுங்கூட அவன் இராணுவத்தினரிடம் அகப்பட்டு விடக்கூடாது என்ற இலட்சிய உறுதியோடு இரண்டு மைல்தூரம் இடைவிடாமல் ஓடி தன் இயக்கத் தோழர்களின் இருப்பிடத்தை அடைகிறான். தோழர்களிடம் தன் கைத்துப்பாக்கியை ஒப்படைத்து விட்டு கீழே விழுந்து மூர்ச்சையாகிறான். வயிற்றில் ஏற்பட்ட காயத்திலிருந்து பெருமளவு இரத்தம் வெளியேறிமையினால் அவனது உடல் சோர்வடைகிறது.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்டமாகையால் அப்போது அங்கு போதிய மருத்துவ வசதி ஏற்படுத்தப்படவில்லை. அவசர அவசரமாக முதலுதவிகள் செய்யப்பட்ட நிலையில் அவனை தோழர்கள் விசைப்படகுமூலம் கடல் மார்க்கமாகத் தமிழகத்துக்கு அழைத்துச் செல்கிறார்கள். இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கை முற்றுகை இவற்றைத்தாண்டி தமிழகம் செல்ல ஒரு வாரமாகிறது. தமிழகத்தில் தலைவர் பிரபாகரனைக் கண்டு பேசும்வரை அவன் நினைவு தப்பவில்லை. இருந்தபோதிலும் வயிற்றில் ஏற்பட்ட காயத்தின் நிலை மோசமடைந்தது. அவனைப் பிழைக்க வைக்க அவனது தோழர்கள் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

தலைவரும் தோழர்களும் கண் கலங்கி நிற்க (27-11-1982 அன்று மாலை 6.05 மணிக்கு) அந்த இளைஞன் இயக்கத்தில் முதற்களப் பலியாகும் பெருமையை அணைத்துக் கொள்கிறான். இதே நாள் இதே நேரமே தமிழீழ மாவீரர் நாளாக நினைவு கூரப்பட்டு மாவீரர் நினைவுச்சுடர் ஏற்றப்படுகிறது. இந்த இளைஞனே தாயகத்தின் முதல் வித்து 2ஆம் லெப்ரினனட் சங்கர் சத்தியநாதன் என கூறப்படுகின்றார். இவ்வாறான உணர்ச்சி மிக்கதான வரலாற்றை கொண்ட, மாவீரர்தினம் அனைத்து மாவீரர்களையும் நினைவு கூரும் வகையில் இன்றைய தினம் மாவீரர் வாரம் ஆரம்பமாகவுள்ளது. போர் நடைபெற்ற காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளால் மாவீரர் துயிலுமில்லங்களில் தலைவர் பரபாகரன் தலைமையில் பிரமாண்டமான முறையில் நடைபெறுவது வழமை, யுத்தத்தின் பின்னர் மாவீரர் துயிலுமில்லங்கள் உடைககப்பட்டு அவற்றில் படையினர் நிலை கொண்டுள்ளனர்.

தற்போது வரை அவை முழுமையாக விடுவிக்கப்படவும் இல்லை. பூோரை நடத்திய கடந்தகால அரசாங்கம் மாவீரர்களை நினைவு கூர தடையும் விதித்திருந்தது.

இந்த நிலையில் புதிதாக ஆட்சிக்கு வந்த அரசு நல்லிணக்கத்தினை முன்னெடுப்பதற்காக மாவீரர் தினத்தை அனுஷ்டிப்பதற்கு தடையேதும் தெரிவித்திருக்கவில்லை.

எனினும் ஆங்காங்கே கடந்த வருடம் மாவீரர் தினத்தை அனுஷ்டித்தவர்கள் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கியிருந்தனர். எனினும் இந்த வருடம் இந்த அச்சுறுத்தல்கள் எவையும் இருக்காது என கூறப்படுகின்ற நிலையில் யாழ்.நல்லூரில் எதிர்வரும் இரு பத்தி ஏழாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாவீரர் தினம் எழுச்சியுடன் நடைபெறவுள்ளது.

இதே போன்று யாழ்.பல்கலைக் கழகத்திலும் வழமை போன்று மாவீரர் தினம் எழுச்சியுடன் நினைவு கூரவுள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் புலம்பெயர் நாடுகளிலும் எழுச்சியுடன் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நீண்ட காலத்தின் பின்னர் அமெரிக்காவின் தலைநகரமான நியூயோர்க்கிலும் இம்முறை மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதேவேளை தமிழின விடுதலைக்காக போராடி மடிந்த மாவீரர்களை தமிழர் தாயகத்தில் உள்ள அனைத்து தமழர்களும் நினைவு கூர வேண்டும்.

இவ்வாறு ஒட்டுமொத்த தமிழர்களும் நினைவு கூருவதே எமக்காக மடிந்த உறவுகளுக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும், இதன் மூலமே தீர்வொன்றையும் நாம் அடைந்துகொள்ள முடியும்என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த தேசிய மக்கள் முன்னணி ஆகியன அழைப்பு விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)

# புதிய அரசியலமைப்பினூடாக...

மாமனிதர் நடராஜா ரவிராஜின் 10ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, யாழ்.சாவகச்சேரி பகுதியில் அவரது உருவச்சிலை திறப்பு விழா மற்றும் நினைவுக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ராஜித மேற்கண்ட விடயத்தை தெரிவித்திருந்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, ரவிராஜ் எனது நல்ல நண்பன். தென்னிலங்கை மக்களுக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளை அவர்களுக்கு விளங்க கூடிய வகையில் தெரிவித்து வந்தவர் அவர்.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டுமென்று மிதவான போக்குடன் செயற்பட்ட அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டார். சிங்கள மக்களும் அவரைப் புரிந்து கொண்டிருந்தார்கள்.

தென்னிலங்கை மக்களுக்கு வடக்கு மக்களின் பிரச்சினைகளை சொல்வதில் அக்கறை கொணடிருந்தார்.

தென்னிலங்கையில் இருந்த வந்த அரசியல்வாதிகளில், நான் சிறுபான்மை இனங்களின் உரிமைகளில் கவனமாக இருந்துள்ளேன். அதேபோன்று ரவிராஜும் சிங்கள பிரதேசத்திலும் செல்வாக்குடைய வராக திகழ்ந்தார்.

ரவிராஜ் பேசும் சிங்கள மொழியினை சிங்கள மக்கள் கூட ரசித்திருந்தார்கள். அவர் தமிழ் மக்களின் உரிமை பற்றி பேசுவதில் அக்கறையாக இருந்தார்கள். ரவிராஜ் தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்பினைக் கொண்டிருக்கவில்லை.

அவர் ஒரு இனவாதியுமல்ல. மாறாக அவர் தமிழ் மக்களின் சமவுரிமைக்காக போராடிக்கொண்டிருந்தார். நாங்களும் அவ்வாறான ஒரு நிலைமையினை ஏற்படுத்துவதற்காகவே போராடுகிறோம் சம்பந்தன் மற்றும் சுமந்திரனும், எம்முடன் இணைந்து செயற்படுகின்றார்கள்.

ரவிராஜ் மற்றும் யோசப் பரராஜசிங்கம் பற்றியும் முன்னை நாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவுடன் பேசியிருக்கின்றேன். ரவிராஜ் உயிருடன் இருந்திருந்தால், இனப் பிரச்சினையினை தீர்ப்பதற்கு இன வாதமின்றி பல வழிகளில் செயற்பட்டிருப்பார். இவற்றினைப் பற்றி எனக்குப் புரிகின்றது. ஆனால், இது இராணுவத்தினருக்குப் புரிவதில்லை.

மாமனிதர் ரவிராஜ் உயிருடன் இருந்திருந்தால், இன்னும் பல விடயங்களை அடைந்திருக்க முடிந்திருக்கும்.

அவர் இல்லாத காரணத்தால் பல விடயங்களை இழந்துகொண்டிருக்கின்றோம். விக்கிரமபாகு கருணாரட்ண மற்றும் நானும் அமைதியான இலங்கையினைக் காண வேண்டுமென்பதற்காக தொடர்ந்து போராடிக்கொண்டிருக்கின்றோம்.

இன பிரச்சினையினை தீர்ப்பதற்காக 6 பேர் கொண்ட குழுக்களாக செயற்படவுள்ளன. அந்த குழுவின் அறிக்கையினை செயற்படுத்துவதற்கு பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம். அதன்படி நீண்டகால இனப்பிரச்சினையை புதிய அரசிலமைப்பின் ஊடாக தீர்த்து வைப்போம்.

1988 ஆம் ஆண்டு இந்த நிலைமையினை சந்தித்தோம். அன்று இருநத சிங்கள இனவாதிகள் போன்று இன்றும் தீவிரவாத போக்குடையவர்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

அதனால் நாம் சில விடயங்களை மெதுவாக செயற்படுத்தி கொண்டிருக்கின்றோம். எது எவ்வாறாக இருநதாலும் ரவிராஜ் என்ன நோககதிற்காக பாடுபட்டாரே அதே லட்சியத்தினை அடைவோம்.

இந்த நாட்டின் இனப்பிரச்சினையை புதிய அரசியலமைப்பின மூலம் தீர்த்து வைப்போம். அப்போது, ரவிராஜ் மீண்டும் பிறந்து எம்மோடு இருப்பார் என அமைச்சர் ராஜித தெரிவித்திருந்தார். (செ-4)

## இலங்கையில்...

செய்தியாளர்கள் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில், அத்தகைய நிலைமை எதுவும் நாட்டில் இல்லையென அமைச்சர் ராஜித சேனாரத்ன மறுத்துள்ளார்.

வவுனியா அரசு செயலகத்தில் சிறுநீரக தடுப்பு நடவடிக்கைக்கான அலுவலகம் ஒன்றை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹெட்டியாராச்சி கருணாரத்ன சகிதம் ஆரம்பித்து வைத்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, வவுனியா பொலிஸ் நிலையத்தில் சிறுநீரக நோய்த் தடுப்புக்கு வசதியாக தூய குடிநீர் நிலையம் ஒன்றையும் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.

இராணுவப் புரட்சியொன்று ஏற்படலாம் என்பது, தேர்தலில் மக்களுடைய ஆதரவைப் பெற்று அதிகாரத்திற்கு வரமுடியாமல் போனவர்களின் கனவேயொழிய வேறு ஒன்றுமில்லை என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் அண்மைக் காலமாக ஆவா குழு என்ற பெயரில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்ற குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் கீழ் பலர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவதாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டிருக்கின்றதே இது ஏன் என ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்கள்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன, கொள்ளைச் சம்பவங்களும், பயங்கரவாதச் செயற்பாடுகளும் பொதுமக்களைப் பாதிப்படையச் செய்கின்ற நடவடிக்கைகளாகும். எனவே, இச் செயல்களில் ஈடுபடுபவர்களை எந்தவொரு சட்டத்தின் கீழாவது கைது செய்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியதும், நிலைமையைக் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டியதும் முக்கியமாகும்.இதில் எந்தச் சட்டமானாலும், சட்டத்தை மீறிச் செயற்படுபவர்களைக் கைது செய்து அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியது என்பதே முக்கியமாகும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார்.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஏனைய மாகாண சபைகளுக்கான நிதியொதுக்கீட்டைக் குறைத்து, வடமாகாண சபைக்கு அதிக நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருப்பது குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர், அவ்வாறு இடம்பெற்றிருந்தால், நிதியொதுக்கீடு குறைக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு உரிய அளவு நிதி வழங்கப்பட வேண்டியது அவசியம் என்றார்.

அதேவேளையில், புதிதாக உருவாக்கப்படவுள்ள அரசியலமைப்பில் நாட்டின் வருமானத்தில் 40 வகையான நிதியை மாகாண சபைகளுக்கு ஒதுக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது, எனவே உருவாக்கப்படவுள்ள அரசியலமைப்பு செயற்படுத்தப்படும்போது, இத்தகைய நிதியொதுக்கீட்டுப் பிரச்சினைக்கு இடமில்லாமல் போகும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். (செ-11,250)

## வடக்கிலுள்ள...

வருவது தொடர்பில் தற்போது பேசப்படுகின்றது. கூட்டு எதிர்க்கட்சி என்ற வகையில் கொள்கை ரீதியில் சமஷ்டி ஆட்சிமுறையை கொண்டுவருவதை முழுமையாக எதிர்க்கிறோம் என நாம் தெளிவாக கூறியுள்ளோம். 30 வருட யுத்தத்தின் பின்னர் ஒன்றிணைத்த நாட்டை மீண்டும் துண்டு துண்டாக பிளவுபடுத்தும் செயற்பாடே இதன் ஊடாக இடம்பெறும். இதற்கு எங்களால் இடம்கொடுக்க முடியாது. ஆகவே அதற்காக எமது பலத்தை கொண்டு நடவடிக்கை எடுப்போம். சிறுபான்மையினர் அனைத்து அதிகாரங்களையும்கேட்கின்றனர். பகிரப்பட்ட அதிகாரம், பொலிஸ அதிகாரம் உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களையும் கேட்கின்றனர். இதுவொரு சிறிய நாடு, அவ்வாறு பிரிப்பதற்கு முடியாது. அமெரிக்கா போன்று இந்தியா போன்று மிகப் பெரிய நாடு அல்ல.

இலங்கை அவர்களின் நாடு என இந்தியாவிலுள்ள சிலர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர்.அதனால் வேண்டியவாறு பிளவுபடுத்தி, பிரிக்க முடியும் எனினும் இதற்கு கூட்டு எதிரணி ஒருபோதும் இடமளிக்காது என மகிந்த தனதுரையில் குறிப்பிட்டுள்ளார். (செ-281)

## பழமை வாய்ந்த...

ல்ட் கூரே, முன்னோர் கடுமையாக உழைத்த காரணத்தால் தான் தமிழ் கலாசாரம் இன்று வரை காப்பாற்றப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் முப்பது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மாநாட்டின் மூன்றாம் நாள் மாலை நேர நிகழ்வு நேற்றைய தினம் நல்லூர் ஸ்ரீ துர்க்கா தேவி மணிமண்டபத்தில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது நாட்டுக்கு ஐரோப்பாவில் இருந்து வெவ்வேறு இனத்தவர்கள் வந்தார்கள், யுத்தமும் நடந்தது, அவர்களுடன் போரிட்டு எம்மால் வெற்றி அடைய முடியவில்லை. ஆனால அப்போது வாழ்ந்த மக்களுக்கு சுதந்திரம் இருந்தது. மக்களின் சுதந்திரத்துக்காக அப்போது சமயமத தலைவர்கள் தான் கடுமையாக வேலை செய்தார்கள். அரசியல்வாதிகள் இருக்க வில்லை.

பௌத்தத்துக்கு அநாகரிக தர்மபால, இஸ்லாத்துக்கு சித்தி லெப்பை, சைவத்துக்கு ஆறுமுகநாவலர் போன்றோர் மிக கடுமையாக உழைத்தார்கள். அவர்கள் அந்த நாட்களில் உழைத்திருக்காவிட்டால் தற்போது எமது சமயம், மொழி, கலாசாரம் இல்லாமல் அழிந்து போயிருக்கும் இதை அனைவரும் நெஞ்சில் பதித்து வைத்திருக்க வேண்டும். ஆறுமுகநாவலர் கடுமையான சேவை செய்த காரணத்தால் தான் தமிழ் கலாசாரம் காபபாற்றப்பட்டது.

இன்றைய புதிய உலகை மாற்றுவது விஞ்ஞானம், தொழில் நுட்பம் தான். முன்னைய காலத்தில் அரசியல்வாதிகள் தான் உலகை மாற்றினார்கள் இப்போது தொழில் நுட்பம் தான் மாற்றுகிறது.

இன்னுமொரு விடயம் என்னவெனில் இன்று பலர் தமது பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு இங்கு தனியாக இருக்கிறார்கள். அவர்களின் பிள்ளைகள் வெளிநாடுகளில் அனைத்து இனம் மதத்துடன் கலந்து உள்ளார்கள்.

எனினும் எமது மண்ணில் பிறந்தால் எமது தேசம், சமூகத்துக்கு ஆதரவுடன் இருக்க வேண்டும். இல்லை என்றால் பிரியோசனம் இல்லை. பிறந்த தேசத்துக்கு ஆதரவு இல்லாத பிள்ளைகள் வேண்டாம். அம்மா அப்பாவுக்கு ஆதரவு இல்லாதவர்கள் ஏன் இருக்க வேண்டும்?

பல லட்சம் செலவுகள் செய்து வளர்த்த பிள்ளைகள் வீட்டிலும் இல்லை, ஊரிலும் இல்லை, வெளிநாட்டுக்கு போய் சேவை செய்து அங்கேயே செத்துப் போகிறார்கள். நாம் எங்கு போனாலும் எமது சமயம் மொழிக்கு கௌரவம் கொடுக்க வேண்டும்.

எனினும் எல்லா சமயமும் நல்லதை தான் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் அனைத்துலகிலும் யுத்தம் நடந்ததுக்கு அடிப்படை காரணமாக சமயம், மதம் தான் உள்ளது.

இந்து சமயமும் பௌத்த சமயமும் சகோதரம் போலானவை. இந்த உலகத்தின் மிகப் பழமை வாய்ந்த சமயம் இந்து மதம். அதன் பின்னர் பௌத்தம் பின்னர் கிறிஸ்தவம் அதன பின்னர் இஸ்லாம் மதம் எனப் பல உருவாகின. அந்த வகையில் பௌத்த சமயமும் இந்து சமயமும் ஒரே மாதிரிதான் உள்ளது.

விகாரைகள் உள்ளே இந்து கடவுள்கள் உள்ளது. தெய்வங்கள் அனைத்தும் ஒற்றுமையாக உள்ளார்கள் சமாதானமாக உள்ளார்கள் அதை வணங்குவதற்கு செல்பவர்கள் தான் சண்டைபிடிக்கிறார்கள்.

வைத்தியசாலைக்கு சென்று தமிழ், சிங்களம் இரத்தம் வேண்டாம் என்று சொல்ல முடியாது. சுத்த ரத்தம் என்பது பொய் எல்லாரும் மனிதர்கள் தான்.

வடமாகாண முதலமைச்சர் தனது பிள்ளைகளை பௌத்த மதத்தினருக்கு திருமணம் முடித்துள்ளார். அதேபோல நடேசன் நிருபமா ராஜபக்ஷவை திருமணம் முடித்துள்ளார். நிருபாமா முன்னைய ஜனாதிபதி மகிந்தவின் சகோதரி. அப்படியானல் மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்களின் மச்சான் தானே ஏன் சண்டை போடுகிறீர்கள். அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நம்பிக்கை எமது மனதில் இருக்க வேண்டும். எமது நாடு போல் நல்ல நாடு இந்த உலகில் இல்லை

அனைத்து குற்றங்களையும் செய்வது அரசியல்வாதிகள் தான். மக்கள் அனைவரும் மிகவும் அருமையான நல்ல மனிதர்கள். எனவே அனைவரும் ஒன்றிணைந்து எமது நாட்டை கட்டி எழுப்ப வேணடும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## அரசியல் தீர்வைப்...

முடியாது என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிராஜின் பத்தாம் ஆண்டு நினைவு தினம் சாவகச்சேரியில் நேற்றைய தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களின் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு வருவதாக இருந்தால் அதில் பெரும்பான்மை சிங்களவர்களும் பங்காளிகளாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து தொலைக்காட்சியில் பல்வேறு விவாதங்களில் சிங்கள மொழிமூலம் ஈடுபட்டு, நாங்கள் எதிரிகள் அல்ல, உங்கள் உரிமைகளை நாங்கள் பறிக்கவில்லை. உங்களுக்கு இருக்கும் உரிமையை போன்றே எங்களுக்கும் வேண்டும் என சிங்கள மக்களுக்கு உணர வைத்து, மக்கள் மயப்படுத்தப்பட்ட அரசியலை தீவிரமாக முன்னெடுத்து ரவிராஜ் செயற்பட்டவர். அதன் காரணமாகதான் அவர் கொல்லப்பட்டார். தமிழ் மக்களின் அன்பை ரவிராஜ் கொண்டிருந்தார். அவர் இறப்பதற்கு முதல் ஐ.நா அலுவலகத்திற்கு முன்னால போராட்டத்தில் ஈடுபட்டிருந்தோம். குறித்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மகஜர் ஒன்றை ரவிராஜ் எம்முடன் சேர்ந்து அன்று காலை தயாரித்திருந்தார். அன்று தான் ரவிராஜுடன் நாங்கள் கடைசியாக பேசிய தருணம். ரவிராஜ் கொல்லப்பட்ட பின்னர் என்னோடு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்தி அனுதாபம் தெரிவித்தார். நான் அதற்கு ரவிராஜ் யாரால கொல்லப்பட்டார்? அனுதாபம் தெரிவிப்பதால் என்ன பயன் என்று அவரிடம் கூறியிருந்தேன்.

எமது மக்களுக்காக அவர்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மிகவும் கடுமையுடன் அவர் செயற்பட்டிருந்தார். யுத்தம் நடைபெற்ற போது மக்களுக்கு உணவு பொருட்களை கொண்டு செல்வதிலும் அச்சமின்றி செயற்பட்டவர். இதே போன்று தனது கடமையில் அவர் உறுதியாக இருந்தார். சிங்கள மக்கள் மத்தியில் மாத்திரமல்ல, சிங்கள தலைவர்கள் மத்தியிலும் பாரிய மதிப்பு அவருக்கு உண்டு, எமது மக்களின் பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தையின் மூலம் தான் நியாயமான தீர்வு ஒன்றை பெறமுடியும் என்பதில் அவர் உறுதியாகவிருந்தார். தற்போது உயிருடன் இருந்தால் அவருடைய பங்களிப்பு பாரிய ஒன்றாக இருந்திருக்கும். ரவிராஜினுடைய இறப்பு அவரது குடும்பத்திற்கு எந்தளவிற்கு இழப்போ, அதே போன்றுதான் அவரது இழப்பு இறப்பு தமிழரசு கட்சிக்கும் தமிழ்த்தேசிய அரசியலுக்கும் பாரிய இழப்பாகும், இன்று முக்கியமான காலகட்டத்தில் நாங்கள் இருககின்றோம், நீண்ட காலமாக கிடைக்கப்பெற முடியாத எமது பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, தற்போது கிடைக்க கூடிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. அந்த தீர்வை அடைவதற்கு நாங்கள் பயணித்து கொண்டு இருக்கின்றோம்.

இப்போது ஜனாதிபதி தேர்தலுக்கு பின்னர் ஏற்பட்ட மாற்றம் காரணமாக சந்தர்ப்பம் ஒன்று உருவாகியுள்ளது. அரசியல் சாசன திருத்தம் சம்பந்தமாக ஆறு உபகுழுக்கள் சமர்ப்பித்த அறிக்கை பிரதமரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒரு அரசியல் சாசன சபை உருவாக்கப்பட்டு அரசியல் சாசனம் தொடர்பனா நடவடிக்கைகளை முன்னெடுக்க இதுவரை நாற்பது தடைவைகள் கூடியுள்ளது. சில விடயங்கள் முழுமையாக ஆராயபபடவில்லை. அவை பின்னர் நடைபெறும என நினைக்கின்றோம்.

இறுதி முடிவுகள் இன்னமும் எடுக்கப்படவில்லை. ஆனால் ஆக்கபூர்வமான பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன. இந்த பேச்சுவார்த்தையில் பல கட்சியை சார்ந்தவர்கள் பங்குபற்றி வருகின்றார்கள். ஐ.தே.க, ஜே.வி.பி., முஸ்லிம் கட்சிகள், சிறிலங்கா சுதந்திர கட்சி என அனைத்தும் அரசியல் தீர்வு விடயத்தில் ஒருமித்து செயற்படுகின்றார்கள். மகிந்த குழுவும் அரசியலமைப்பு தொடர்பான கூட்டங்களில் பங்கேற்று வருகின்றது. அவர்கள் பதின் நான்கு கோரிக்கைகளை அரசியலமைப்பு மாற்றம் தொடர்பில் முன்வைத்துள்ளனர்.

காலப்போக்கில் அவர்களது நிலைப்பாடுகள் எவ்வாறு இருக்கும் என சொல்ல முடியாது. இந்த நடவடிக்கைகளை குழப்புவதற்கு நாட்டில் பல முயற்சிகள் இடம்பெற்று கொண்டுள்ளன. இருந்த போதிலும் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்கள் எமது பிரச்சினைகளை

23ஆம் பக்கம் பார்க்க....

பகிரங்க
ஏல விற்பனை
மூத்த விநாயகர்
திருமண மண்டபம்
கரணவாய் மத்தி, கரவெட்டி
எமது திருமண மண்டபத்தில் பாவனையிலுள்ள பிளாஸ்ரிக் கதிரைகள் ஏல விற்பனையில் விற்கப்படவுள்ளன.
திகதி:-27.11.2016
நேரம்:-பி.ப 3.00 மணி
இடம்:-மண்டப முன்றல்
செயலாளர்
மூத்த விநாயகர் திருமண மண்டபம்
T.P:-0775990929
(சி-6448)

அனைத்து நாடுகளுக்குமான
விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK-550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)
மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: 0768226243
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• நெல்லியடி • வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(C-6359)

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை



எமது சேவை 365 நாட்களும்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன் 72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (Express Service)
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)
அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
Call 021 222 6113
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
இல.10, புதிய மாநகரசபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call 021 222 3536
முகவர்கள் DHL aramex FedEx SKYNET
(சி-6392)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.